# ஆழ்வார்கள் வரலாறு

[இரண்டாம் புத்தகம்]

344

கழக வெளியீடு: சகூள

# ஆழ்வார்கள் வரலாறு

[இரண்டாம் புத்தகம்]

MADURAI UNIVERSITY LIBRARY
24 MAR 1971
MADURAI

ஆசிரியர் :

சென்னை, பச்சையப்பன் கல்லூரி
உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியராயிருந்த,
புலவர் கா ர கோவிந்தராச முதலியார்

Book supplied by the Madurai University
Central Co-op. Stores Madurai-2

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி-6 ::

காஞ்சிபுரம் ரங்கசாமி முதலியார்
கோவிந்தராச முதலியார் (1874—1952)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 May 1949
Reprints: March, 1956, July 1967

Q22y7
K7.2

AZHVARGAL VARALARU - II

Madras-1.

# முகவுரை

மாந்தர்கள் நூற்களை ஓதியுணர்ந்து எய்துதற்கு உரிய உறுதிப் பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. தமிழில் அவற்றுள் வீட்டைப்பற்றிக் கூறும் நூற்களுள் ஆழ்வார்கள் அருளிய நாலாயிரத்தையும் திருஞான சம்பந்தர் முதலிய நாயன்மார்கள் அருளிய தேவார திருவாசகங்களையுமே முதன்மையானவை எனவும், தமிழ் வேதங்கள் எனவும் அறிஞர்கள் யாவரும் கொண்டிருக்கிறார்கள். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், நாலாயிரத்தை அருளிய ஆழ்வார்கள் பன்னிருவர்களுடைய வரலாறுகளையும் எழுதுவித்து வெளியிடக் கருதி, என்னை அழைத்து, 'ஆழ்வார்களுடைய வரலாறுகளை இரண்டு புத்தகங்களாக எழுதித் தரவேண்டும்' என்று கூறினர்.

யான் அவர்கள் கூறியதை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு, பின் பழகியபெருமாள் சீயர் அருளிய (1) ஆறாயிரப்படி குருபரம்பராப் பிரபாவம், (2) பன்னீராயிரப்படி குருபரம்பராப் பிரபாவம், (3) அரிசமய தீபம், (4) வடகலை குருபரம்பராப் பிரபாவம், (5) உபதேசரத்தினமாலை என்னும் நூற்களின் உதவியைக் கொண்டு, அவ்வாறே ஆழ்வார்களின் வரலாறுகளை இரண்டு பகுதிகளாக எழுதிக் கொடுத்தேன்.

மேற்கூறிய ஐந்து நூல்களுள், ஆறாயிரப்படி குருபரம் பராப் பிரபாவத்தை முதன்மையானதாகவும், மற்றை நான்கு நூல்களையும், அதற்குத் துணையாகவும் வைத்துக்கொண்டு எழுதினேன்; ஆதலின், என்னால் எழுதப்பட்ட ஆழ்வார்கள் வரலாறுகளிற் பெரும்பாலன ஆறாயிரப்படி குருபரம்பரைப் பிரபாவத்தைப்பின்பற்றியனவாகவும், சிறுபாலன மற்றை நூல்களைப் பின்பற்றியனவாகவும் இருக்கும். பெரும்

பான்மையும் வரலாறுகளை எழுதுவதில் மட்டுமே அந்நூற்களைப் பின்பற்றினேன்.

அடியில் வரும் செய்யுள், ஆழ்வார்கள் உலகில் அவதரித்த முறையைக் கூறுவதாகும்.

### நேரிசை வெண்பா

**பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை**
**அய்யன் அருண்மாறன் சேரலர்கோன் - துய்யபட்ட**
**நாதனன்பர் தாட்டூளி நற்பாணன் நற்கலியன்**
**ஈதிவர்தோற் றத்தடைவாம் இங்கு.**

"மாறன்" என்றதில் மதுரகவியார் வரலாறும், "பட்டநாதன்" என்றதில் கோதைநாய்ச்சியார் வரலாறும் அடங்குதலின், இதில் அவர்கள் வேருகக் கூறப்பட்டிலர் என்க.

ஆழ்வார்களுடைய அவதார முறை இதுவே என வைணவப் பெரியார்கள் கூறுகின்றார்கள். ஆயினும், யான் ஆழ்வார்களுடைய வரலாறுகளை அம்முறையில் அமைத்திலேன், மேற்படி கழகத்தார் ஆழ்வார்கள் வரலாறுகளை இரண்டு புத்தகங்களாக எழுதச் சொன்ணர்கள் ஆதலின், அதற்கு ஏற்றபடி ஆழ்வார்களுடைய வரலாறுகளை அமைத்து எழுதினேன். முதற் புத்தகத்தில் (1) பொய்கையார், (2) பூதத்தார், (3) பேயார், (4) திருமங்கை மன்னர், (5) குலசேகரர், (6) ஆண்டாள் என்னும் இவர்கள் வரலாறுகளும்; இரண்டாம் புத்திகத்தில் (1) பெரியாழ்வார், (2) திருமழிசையார், (3) தொண்டரடிப் பொடியார், (4) திருப்பாணர், (5) நம்மாழ்வார், (6) மதுரகவியார் என்னும் இவர்கள் வரலாறுகளும் அமைத்து எழுதப் பட்டன.

இவற்றிற் காணப்படும் பிழைகளுக்காக என்னை மன்னிக்க என அறிஞர்களை வேண்டுகின்றேன்.

குற்ற மிக்கவர் கூறிய நூலாலோ
மற்று மிக்கவர் மாண்பொருள் மாண்புற
உற்று மிக்கதொ ரொண்டுணை யாவது
கற்று மிக்கவர் கண்டருண் மின்களே.

இத் தொண்டினை எனக்கு அளித்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கு என் அன்போடு கூடிய நன்றியைச் செலுத்துகின்றேன்.

எனது இச்சிறு முயற்சி இடையூறின்றி இனிது முடியத் திருவருள் புரிந்த திருமகள்நாதன் திருவடித் தாமரைகளை வழுத்தி வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்,
கா. ர. கோ.

---

## ஆசாரியர் வாழ்த்து

வலங்கொண்ட ஆழியன் அன்பிற் சிறந்தவர் மாண்குலமாம்
குலங்கொள்வ தன்றிப் பிறிதோர் குலமுளம் கொள்வதில்லான்
நிலங்கொண்ட சீர்யோகி மால்பார்த்த சாரதி நேர்ந்தெனக்கு
நலங்கொண்ட எட்டெழுத் தீந்தான் அடியினை நாடுவனே.

## தமிழ் ஆசிரியர்கள் வாழ்த்து

பகர்தமிழ்நா வியலப்பன் பசுபதிமால்
பலகலைதேர் வடிவேற் செட்டி
நிகரில்புகழ்க் கவிராம சாமியென
நிகழ்த்தறிஞ ருமிந் நால்வர்
புகர்மனங்கொள் எனக்கினிய தமிழ்புகட்டு
வித்தாரப் புலவோர் தாட்பூத்
துகளறவென் மனத்தடத்தின் வாடாத
மலராகித் துலங்க மாதோ.

---

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| க. | பெரியாழ்வார் | ... | 1 |
| உ. | திருமழிசை ஆழ்வார் | ... | 22 |
| ௩. | தொண்டரடிப் பொடியார் | ... | 53 |
| ச. | திருப்பாணாழ்வார் | ... | 85 |
| ரு. | நம்மாழ்வார் | ... | 96 |
| சு. | மதுரகவியார் | ... | 140 |

MADURAI ... LIBRARY
24 MAR 1971
MADURAI.

# ஆழ்வார்கள் வரலாறு

## [இரண்டாம் புத்தகம்]

---

## க. பெரியாழ்வார்

**நேரிசை வெண்பா**

"பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று."

'பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து' என்று ஔவைப்பிராட்டியார் புகழ்ந்து கூறியபடி, பாண்டி நாடு எழில் மிக்க முத்துக்களுக்குப் பிறப்பிடமாகும். அது பொருநை என்னும் அருமையாகிய ஆறும் வையை என்னும் நல்லியல் ஆறும் தன்கண் பொலிந்து விளங்கப் பெற்ற நாடாகும். அன்றியும், அது தமிழ்மொழியாகிய அணிமிகும் அரசி, கடைச்சங்கம் என்னுஞ் சீரிய அரியணையில் வீற்றிருந்து, தமிழகம் முழுதும் தன் தனிச் செங்கோலைச் செலுத்துதற்கு இடமாய் விளங்கிய மதுரை மாநகரைத் தன் அணிதிகழ் நகரமாகக் கொண்டு விளங்குவதாம் எனின், அதன் மேன்மையை வேறாகக் கூறவும் வேண்டுமோ? முத்தும் முத்தமிழும் பொலிவுற்று விளங்குதற்கு இடமாகிய அந்நாட்டின் பொலிவு, எல்லாத் தமிழ்ப் புலவர் உள்ளத்தினும் என்றும் விளங்கித் தோன்றா நிற்கும். அந்நாட்டில் உள்ள ஊர்கள், நீர்

நிறைந்த பொய்கைகளையுடைய சோலைகளால் இனிய தோற்றம் அளித்து விளங்கும். இத்தகைய வளங்கள் அமைந்த பாண்டிய நாட்டில் புத்தூர் என்னும் ஓர் ஊர் உண்டு. அதன் அருகில் ஒரு விசாலமாகிய காடு முன்னர் இருந்தது. அதில் பல வேடர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுடைய தலைவனுக்கு மல்லி என்னும் பெயருடைய நல்லாள் இல்லக் கிழத்தியாய் விளங்கினள். அவள் அன்பு முதலிய குணங்கள் வாய்ந்தவள். அவளுக்கு வில்லி என்றும் கண்டன் என்றும் பெயருடையவர்களாகிய இரு மைந்தர்கள் தோன்றி, அந் நல்லியல் நங்கையின் இரு கண்களின் மணிகள் எனப் பொலிவுற்றிருந்தார்கள். அவர்கள் காளைப்பருவம் எய்தியவுடன் தங்கள் தந்தையின் விருப்பப்படி வேடர்களின் தலைவர்களாய் விளங்கினர்கள். அவர்களுள் வில்லி மூத்தவன்; கண்டன் இளையவன். அக்காட்டில் புலி, கரடி, யானை முதலிய விலங்குகள் பல இடங்களில் திரிந்துகொண்டிருக்கும். ஒருநாள் அவ்விரு காளை வீரரும் வேட்டை ஆடச் சென்று பல விலங்குகளை அழித்தார்கள். அப்போது மிக்க வன்மை வாய்ந்த புலி ஒன்று அவர்கள் முன் காணப்பட்டது. இளையவனுகிய கண்டன் அதன்மீது ஓர் அம்பை யெய்தான். அதனுல் அப்புலி சாவாமல் மிக விரைவாக ஓடியது. கண்டன் அதனைத் துரத்திக்கொண்டு ஓடினன். அப்புலி ஒரு தூற்றில் மறைந்துகொண்டு, கண்டன் அத் தூற்றின் அருகில் வந்தவுடன் பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டு ஓடியது.

அதனை யறியாத வில்லி என்பவன் தன் தம்பியாகிய கண்டன் நெடுநேரம் வராமையின், அவனைத் தேடிக் கொண்டு சென்று, அவன் உயிர் நீங்கித் தரையில் விழுந்து கிடத்தலைக் கண்டான். அவனுக்கு உலக முழுவதும் மறைந்து விட்டதுபோல் தோன்றியது. அவன் துன்பக்

கடலின் ஆழத்தைக் கண்டவனுகி அழுதழுது தரையில் விழுந்து புரண்டு மூர்ச்சையடைந்தான். அறவாழி யந்தணனுகிய இறைவன், திருமாமகளுடன் அவன் கனவில் தோன்றி அவனுக்குக் காட்சியளித்து, "அன்பனே, நாம் இவ்விடத்தில் அரவணையில் அமர்ந்திருக்கின்ருேம். நீ நமக்குப் பெரியதொரு கோயிலைக் கட்டுவித்து, அண்மையில் உள்ள புத்தூரில் உள்ளவர்களை இங்குக் குடியேறச் செய்து இதனைச் சிறந்ததோர் ஊராக்கி, நமக்குத் திருவிழா முதலியன நடத்தற்கு ஏற்ற ஏற்பாடுகளையும் செய்வாயாக," என்றருளினன். வில்லி, அப்பெருமானை வணங்கி நின்று, "எம்பெருமானே, என்னுடைய தம்பியை எழுப்பித் தந்து, நீ கட்டளை யிட்டருளிய தொண்டுகளைச் செய்தற்குரிய பொருளையும் ஈந்தருளினுல், அவ்வாறே செய்கின்றேன்," என்ருன். திருமகள்நாதன் அவனை நோக்கி, "அன்பனே அஞ்சற்க. உன் தம்பி உயிர்பெற்று எழச் செய்கின்ருேம். நீயும் அவனும் கூடிச் சிறிது தூரம் செல்வீர்களாயின், ஒரு குகை காணப்படும். உன் தம்பியைக் கொன்ற புலி அதில் இறந்து விழுந்திருக்கின்றது. அக்குகைக்குள் அளவற்ற பொருள்கள் இருக்கின்றன. நீ அவற்றைக் கொண்டு நாம் கூறிய தொண்டுகளைச் செய்வாயாக," என்று பணித்து, அவன் தம்பியை உயிர்பெற்றெழ அருளினன்.

கண்டன் உறங்கி எழுகின்றவனைப் போல எழுந்து, தன் தமையனுகிய வில்லியை வணங்கினின்ருன். வில்லி மகிழ்ச்சியினுல் தன் கண்களினின்று நீர் பெருக அன்புடன் அவனைத் தழுவிக்கொண்டு அவனிடம் திருமகள் நாதன் தன் கனவிலே தோன்றிக் கூறியவற்றை யெல்லாங் கூறிப், பின்பு அக்குகையில் அளவற்ற பொருட் குவியல்கள் இருத்தலைக் கண்டு களிகூர்ந்து, அக் குகைக்குத்

தக்க காவற்காரர்களை ஏற்படுத்தினன். பின்பு தன் தம்பியாகிய கண்டனுடன் திருமாமகள் நாதன் பள்ளிகொண்டிருக்கும் இடத்தைத் தேடிச் சென்று, அக் குகைக்குச் சிறிது தூரத்தில் ஓர் ஆலமரத்தின் அடியில், உயர்வற உயர்நலமுடையவனாகிய இறைவன் அரவணையில் பள்ளி கொண்டிருத்தலைப் பார்த்துக், களிப்பு என்னும் கடலுள் மூழ்கி, ஆர்வ மிகுதியினால் கண்களில் நீர்மல்க ஆடிப் பாடி வணங்கி நின்று, 'எம்பெருமானே உலகமுண்டருளிய பெரு வாயனாகிய நீ, இச்சிறிய இடத்தில் எழுந்தருளியது அறம் தவிரப் புன் செயல்களையே உய்யும் வழியாகக் கொண்ட அறிவிலிகளாகிய எங்களை உய்விக்கக் கருதித் தானே? உன் திருவருளைப் பெறுதற்கு உரிய செயல் ஒன்றையும் செய்தறியாத எங்களை உய்விக்க நீ திருவுளம் கொண்டதற்கு உனது இயல்பாகிய திருவருளே காரணமாவது அன்றி வேறு காரணம் யாது உளது? அப்பனே, அமலனே, அச்சுதனே, அடியவர்களுக்கு இன்பத்தேனே, போற்றி; போற்றி நின் திருவருள்' என்று போற்றிப் பலமுறை துதித்து வணங்கிச் சென்று, அக் குகையில் உள்ள பெருந்திரளாகிய பொருள்களைக் கொண்டு, அப் பெருமானுக்குப் பெரிய கோயில், மண்டபம், மதில்கள், கோபுரங்கள் முதலியவைகளைத் தக்காரால் கட்டுவித்தனன். பின் அக்கோயிலைச் சூழப் பல அழகிய தெருக்களை அமைப்பித்து, அத் தெருக்களில் எழிலார் மாடங்களை உடைய வீடுகளையும் கட்டுவித்தான். பின்னர், அதன் அருகில் உள்ள புத்தூரில் குடியிருக்கும் அந்தணர்கள் சான்றோர்கள் முதலியவர்களை அப்பதியில் குடியேறும்படி செய்து, அங்ஙனம் குடியேறியவர்களுடைய ஊரின் பெயராகிய 'புத்தூர்' என்பதனோடு தன் பெயராகிய வில்லி யென்பதனையும் சேர்த்து **வில்லிபுத்தூர்** என்று

அத் திருப்பதிக்குப் பெயர் இட்டு, அப் பேரருளாளனுக்குச் 'சிறப்பொடு பூசனை' குறைவு சிறிதுமில்லாமல் நடத்தற் குரியனவற்றை எல்லாம் நன்குசெய்து முடித்தனன். அதுமுதல் அப்பதியும் அப்பதியைச் சூழ்ந்த சில ஊர்களும் சேர்ந்த பகுதி வில்லியினுடைய தாயின் பெயரால் '**மல்லி நாடு**' என்று வழங்கப்பெறுவதாயிற்று.

## பெரியாழ்வார் அவதாரம்

அவ்வூரில் குடியேறிய மறையவர்களில் வேயர்கள் என்னும் ஒரு வகுப்பினர் இருந்தனர். அவருள் முகுந்த பட்டர் என்னும் முன் குடுமிச் சோழிய பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் கற்கவேண்டிய நூல்களைக் கசடறக் கற்றுப் 'பதுமவல்லி' என்னும் கற்பரசியை மணந்து, இல்லறத்தை இனிது நடத்திவந்தார். அவர் திருமகள் நாதனிடத்தில் நீங்காத அன்புடையவர்; அறநெறியினின்றும் வழுவாதவர். அருந்தமிழ்ச் செல்வராகிய அவருக்கு அவரது அருந்தவப் பயனாக ஓர் அருமருந்தன்ன மைந்தர் அவதரித்தார்.

## பெரியாழ்வார் மலர் மாலைத் தொண்டு புரிதல்

அவருக்கு அவர் தந்தையார் பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள் விட்டுசித்தன் என்று பெயரிட்டனர். விட்டுசித்தர் தக்க வயதில் கல்வி கற்கத் தொடங்கிச், சிறிதளவு கற்றவுடன் திருமகள் நாதனிடத்து அன்பு மிக்கவராய் அப்பெருமானுக்குத் தொண்டு செய்வதிலேயே நாட்டம் உடையவராய் விளங்கினர். அவருக்கு அப்பெருமான் உகக்கும் தொண்டினைச் செய்தல் வேண்டும் என்னும் கருத்து உண்டாயிற்று. அதனால், அவர் அப்பெருமான் உகப்புக்கு உரிய சிறந்த தொண்டு யாது என்று ஆராயலானர். அங்ஙனம் ஆராய்வாருக்குத் திரு

வாய்ப் பாடியில் ஆயர்களையும் ஆயர் மாதர்களையும் நந்த கோபரையும், யசோதைப் பிராட்டியாரையும் தன் குண நலங்களாலும், செயற்கரிய செயல்களாலும், இடையிலே செந்தாமரை மலர்கள் மலரப்பெற்ற கருமாமுகில் போன்ற தன் வடிவழகாலும் மகிழ்வித்துக் கொண்டிருந்த கண்ணன், கஞ்சனது அழைப்புக்கு இணங்கித், தன் தமையனுராகிய பலராமரோடு வடமதுரைக்குச் சென்றபோது, கஞ்சனுக்கு மாலை கொடுப்பவராகிய மாலாகாரர் என்பவர் இல்லமடைந்து மாலையைக் கேட்டருளினன். மாலாகாரர், "நீ என்னை ஆட்கொள்ள எண்ணி, மூத்த நம்பியுடன் வந்து உய்வித்தருளினை. உன் அருட் செயலுக்கு என்ன கைம்மாறு யான் செய்யவல்லேன்?" என்று போற்றி, வணங்கிக், கஞ்சன் முனிவன் என்பதையும் எண்ணாது, தாம் கட்டிவைத்திருந்த நறுமணமிக்க மலர்மாலையை எடுத்துச் சூட்டினர். கண்ணன் அதனைச் சூடிக்கொண்டு மகிழ்வெய்தினன் என்னும் வரலாறு நினைவில் வர, "அதுவே நாம் எம்பெருமானுக்குச் செய்தற்குரிய தொண்டாகும் என்று கருதி, அதில் உறுதி கொண்டு, தம்முடைய மூதாதையர் ஈட்டி வைத்துள்ள பொருட் குவியலினின்று ஒரு பெரும் பகுதியைக்கொண்டு, ஒரு நீர்ப்பாங்கான நிலத்தினைத் தேர்ந்தெடுத்து, வேலி வளைத்து, அதில் துறவுகளையும் பொய்கைகளையும் அமைப்பித்து, செந்தாமரை, வெண்டாமரை, செங்குவளை, கருங்குவளை, மல்லிகை, முல்லை, மாதவி, பூந்துளவம் முதலிய நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ என்னும் நால்வகை மலர்களும் நன்கு பொலிந்து விளங்குதற்கு உரிய நறுமணப் பொழிலை இனிதமைத்தனர். மா, பலா முதலிய பல வகையான இன்சுவைக் கனிகளைத் தரும் மரங்களும் அந் நறுமணச் சோலையில் செறிந்து பொலிவுற்றன.

'விட்டுசித்தருடைய புகழைப் பாண்டியன் கொண்டாடுதற்கு முன் நாம் கொண்டாடுதல் வேண்டும்,' என்று கருதினவை போலச் சுரும்பினங்கள் இன்னிசை யெழுப்பின. "வானவர்களே, உங்கள் பதியில் உள்ள சோலையில் எங்கள் விட்டுசித்தரால் அமைக்கப்பட்ட சோலையில் உள்ள மலர்களைப் போன்ற நறு மணமுள்ள மலர்கள் உளவோ? வந்து கண்டு கூறுமின்" என்று வானுடரை நோக்கிக் கூறுவன போலக் குயில்கள் தேமா மரங்களின் உச்சியிணின்று இனிமையாகக் கூவின. "சிறந்த மலர்கள் உள்ள இடத்தை யறிந்து வருக" என வானுட்டவர்களால் அனுப்பப்பட்ட தூதுவன் எனத் தென்றல் அச்சோலையிலே திரிந்து உலவியது. "வெங்கதிர்ச் செல்வனே, நாங்கள் தக்க அரணைப் பெற்றோம். இங்கு வந்து எங்களை வருத்த உன்னால் இயலாது. நாங்கள் இனி உனக்கு அஞ்சுகிலம்" என்று செருக்குற்று உலவுவன போல இருட் கூட்டங்கள் அச்சோலையின்கண் எங்கும் செறிந்து விளங்கின. விட்டுசித்தர் அத்தகைய அந்நறுமணச் சோலையில் உளவாகும் நீர்ப்பூ முதலிய நால்வகைப் பூக்களால் அழகிய மாலைகளைக் கட்டி, அப்பதியில் உள்ள வடபெருங்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் திருமகள் நாதனுக்குச் சாத்திவருவாராயினர். விட்டுசித்தர் இங்ஙனம் வடபெருங்கோயிலுடையானுக்குத் திருமாலைத் தொண்டுசெய்து வருகையில், **வல்லபதேவன்** என்னும் பாண்டிய மன்னன், சிறியதைப் பெரியது நலியாதபடி செங்கோல் செலுத்தி வந்தான். அவன் வானளாவிய குவடுகளை யுடையதும் கங்கை முதலிய என்றும் புனலறாத பெரிய யாறுகளுக்குப் பிறப்பிடமானதும் ஆகிய இமயம் என்னும் மலைக்கண் கயல் பொறித்த பாண்டியர்தம் குலத்துக்கோர் எழில் மிக்க விளக்குப் போன்றவன்; பல்கலைத் தலைவன்; தெய்

வர் அஞ்சும் கூர்வேல் வலவன்; நானிலம் புகழும் நாற் படைக் கடலினன்; கொடைமட மன்றிப் பிற மடம் பெரு தவன்; அன்புடன் அருளுக்கு உறையுளாம் உளத்தன். அன்ன தன்மையனுகிய அம் மன்னர் மன்னன், 'நமது நக ரின்கண் நிகழ்வனவற்றைச் செவி கண்ணுக, ஒற்றர்களால் உணர்தல் மட்டும் போதியது அன்று, நாமே நேரில் கண் டறிதல் வேண்டும்' என்னும் கருத்தாற் பலமுறை இராப் போதுகளில் நகரி சோதனையின் பொருட்டு நகரில் உரு மாறித் திரிவன். அங்ஙனம் அவ்வேந்தர்பிரான் ஒருநாள் உருமாறி நகரைச் சுற்றி வருகையில் ஒரு வீட்டுத் திண்ணை யில் ஒரு மறையவன் துயிலுதலைக் கண்டு, அவனை யெழுப்பி, "நீர் யார்? இந்நள்ளிரவில் இங்கு நீர் தனித்திருத்தற்குக் காரணம் யாது?" என்று வினவினன். அவ்வந்தணன், "அன்புடையீர், நான் வடநாடு சென்று, கார்முகில் வண்ண னுகிய பெருமான் மாவலியினிடம் வாமனனுகிச் சென்று, மூவடி மண்ணிரந்து பெற்று, ஓங்கி உலகளந்தபோது மேலெடுத்த திருவடித்தாமரையினின்று தோன்றிய கங் கையிலே நீராடிச், சேதுவில் நீராடுதற்காகத் திரும்பி வருகையில் இங்கு வந்தபோது இருள் மிக்கது. ஆதலின், இந்நகர் அறத்தினின்று திறம்புதல் அறியாத செங்கோல் மன்னர்களாகிய பாண்டியர்களின் நகரம் ஆதலின், இந் நகரில் நாம் எங்கு இருப்பினும் தீமை உண்டாகாது என்னும் துணிவால் இங்குப் படுத்துக்கொண்டேன்" என் றனன். அம்மொழிகளைக் கேட்ட அவ்விறைவன், அம் மறையவனை நோக்கி, "அந்தணரே, நீர் நுண்பொருள் நூற்கள் பலவற்றைக் கற்றுவல்ல புலமுடையீர் என்பதை உம்முடைய மொழிகள் நன்குணர்த்துகின்றன. அன்றி யும் நீர் உலகியலை உணர்ந்தவராகவும் காணப்படுகின்றீர். நீர் கற்றுக் கேட்டு அறிந்தவற்றுள் நன்னெறிக்கு உய்ப்ப

தாகிய ஒரு சுலோகம் கூறுவீர்" என்றனன். அம்மறைய வன் அம்மன்னனுடைய சொற்களைக் கேட்டு, "இவர் இந் நகரில் உள்ளாரிற் சிறந்தார்போலும்; இவர் விழைந்து ஏற்கத் தக்கது ஒன்றினை நாம் இவர்பால் கூறுதல் வேண் டும்" என்று தனக்குள் கருதிக்கொண்டு, "மழை கால மாகிய நான்கு மாதங்களுக்கு வேண்டும் பொருள்களை எஞ்சிய எட்டு மாதங்களில் சேர்த்துக்கொள்ளவேண்டுவது போலவும், இராக்காலங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பகற்காலங்களில் தேடிக்கொள்ள வேண்டுவது போலவும், முதுமைப் பருவத்துக்கு வேண்டிய பொருள்களைக் காளைப் பருவத்தில் ஈட்டிக்கொள்ள வேண்டுவது போலவும், மறு மையில் வீட்டின்பப்பேற்றை எய்துதற்குரிய உண்மைப் பொருள் அறிவை, ஒருவன் இப்பிறப்பிலேயே பெற்றுக் கொள்ளவேண்டும்" என்னும் பொருள் அமைந்த சுலோகத் தினைக் கூறினன். அம் மன்னர் மன்னன் தென்மொழி வடமொழி நூற்கள் பலவற்றையும் நன்கு கற்றுணர்ந்த வன் ஆதலின், அச்சுலோகத்தின் பொருளை நன்குணர்ந்து கொண்டு, "அந்தோ நாம் இதுகாறும், வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி, வேற்கணார் கலவியே கருதித், திரிந் தோமே அன்றி, அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டை எய்துதற்கு உரிய உண்மைப் பொருள் அறிவை ஒரு சிறிதும் ஆய்ந்து பெறுமல், நம்முடைய வாழ்நாட்களை வீழ் நாட்களாகும்படி கழித்துவிட்டோமே! நம் மதியின் திறம் இருந்தவாறு என்னே!" என்று தனக்குள் எண்ணி, அதற்காகப் பெரிதும் இரங்கித் தான் வேந்தன் என்பதை யும், தான் அங்கு வந்த காரணத்தையும் அம்மறையவனுக் குக் கூறி, அவ் வந்தணனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று, தக்கதோர் இடத்தில் இருக்கச் செய்து, அவனுக் குப் பலவகை உபசாரங்களைப் புரிந்து, "மறை முனிவ,

நீ இங்கு வந்தருளப் பெற்றேன். அதனால் பிறவிப் பெருங் கடலைக் கடத்தற்குரிய புணையைப் பெறும் உறுதியுற் றேன்'' என்று கூறிச் சில நாட்கள் அம்மறையவனைத் தன்னுடன் இருத்திக்கொண்டு, பின்பு அவனுக்குப் பொன் மணி முதலிய பொருள்களை அளித்து, அவனை வணங்கிச் சேதுவில் நீராடுதற்கு அனுப்பினன்.

பின்பு வல்லபதேவன் என்னும் அவ்வேந்தர்பிரான், "நாம் உண்மைப்பொருள் உணர்வைப் பெறுதற்குரிய வழி யாது?'' என்று ஆய்ந்துகொண்டிருந்தனன். அப் போது செல்வநம்பி என்னும் புரோகிதர் அம்மன்னன் பால் வந்தனர். அவர் வேதங்களையும் வேதாங்கங்களையும் மற்றும் பல நூல்களையும் நன்ருய்க் கற்றுணர்ந்தவர். திரு மாமகள் நாதன் திருவடிக் கமலங்கள் எப்பொழுதும் தம் உள்ளத்தடத்துப் பொலிந்து விளங்கப்பெற்றவர். வேந் தன் அவரை வணங்கிச் சிறந்ததோர் ஆசனம் அளித்து, அவரை வீற்றிருக்கச் செய்து, பின் அவரை நோக்கி, "அடிகாள், அந்தமில் இன்பத்தை எவ்வாறு பெறுதலாம்,'' என்று கேட்டனன். அவர், வேத முதலிய அரிய நூல் களை நன்குணர்ந்த வித்துவான்களைத் திரட்டி, வேத முடி வாகிய பரம்பொருள் இன்னது என்பதை நிச்சயித்து, அவ்வழியாலே பெறுதலாம் என்றருளினர். மன்னன், "அங்ஙனமே செய்யக்கடவேன்,'' என்று கூறித், தன் அரியணைக்கு முன் இடத்தில் ஒரு தோரணக் கம்பத்தை நட்டுக், கிழிச் சீரையிலே பெரும்பொற்குவியலை இட்டு, அப்பொற்கிழியை அக்கம்பத்திலே கட்டித் தொங்கவிட்டு, "யார் தாங்கள் கூறும் உண்மைப்பொருள் நிச்சயத்தாலே இப் பொற்கிழி தானே அறுந்து விழும்படி செய்கின்ற னரோ, அவருக்கு இப்பொற்கிழி உரியதாம்,'' என்று கூறி, அதனை அந்நகரில் உள்ள வித்துவான்களுக்குப்

பறையறைந்து தெரிவிக்கச் செய்து, மற்றை இடங்களில் உள்ள வித்துவான்களுக்குந் தூதர்களால் தெரிவித்தனன். அதனை அறிந்தவுடன் நன்கு கற்றுணர்ந்த பல சமய வித்துவான்களும் அரசவை வந்து திரண்டு, முடிபொருள் இன்னது என விளக்கும் பொருட்டு அவையில் உள்ளார் கேட்டு மகிழும்படி சொல்மாரி பொழியலானார்கள். இங்ஙனம் பல நாட்கள் வித்துவான்களின் சொற்பொழிவுகள் நிகழலாயின. ஆயினும், எவர் சொற்பொழிவினாலும் அப் பொற்கிழி அறுபடவில்லை. அப்போது திருமகள் நாதன் உண்மையை உலகினர்க்கு விட்டுசித்தரால் உணர்த்துதல் வேண்டும் என்று திருவுளங்கொண்டு, ஒரு நாள் இரவில் அவருடைய கனவில் தோன்றி, "அன்பனே, நீ பாண்டியன் அவைக்குச் சென்று, அவனாலே தோரணக் கம்பத்திலே கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள பொற்கிழியை அறுத்துக்கொண்டு வருவாயாக," என்றருளினன். விட்டுசித்தர் அப்பெருமானுடைய திருவடி மலர்கள் தம் முடியில் பொருந்த வணங்கி நின்று, "எம்பெருமானே, அஃது அமரவோர் அங்கம் ஆறும் வேதமொரு நான்கும் ஓதி உணர்ந்தவர்களுள் தலைவராயுள்ளவர் கொள்ளும்படி அமைக்கப்பட்டிருப்பதன்றோ? கையில் ஏறிய களைக் கொட்டுத் தழும்பையன்றி, நாவிலே நூற்றழும்பு சிறிதும் ஏறப்பெறாத அடியேன் சென்று அப் பொற்கிழியை அறுத்துக்கொண்டு வருதல் எவ்வாறு இயலும்?" என்று கூறினர். திருமகள்நாதன், "அஃது உன்னுடைய வயமானது அன்று; யாமே அதனைச் செய்து முடிக்கக்கடவேம். நீ சிறிதும் அஞ்சாமற் செல்" என்றருளினன். பிறகு அப்பெருமான் செல்வ நம்பியின் கனவில் தோன்றி விட்டுசித்தரது வருகையைப் பற்றிக் கூறி மறைந்தருளினன்.

பின்பு விட்டுசித்தர் காலையில் எழுந்து, "எம்பெருமான் பணித்தருளியபடி நாம் அரசன் அவைக்குச் செல்லக்கடவோம். மற்றவை எம்பெருமான் கடமை யாகும்,', என்று துணிவுகொண்டு காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, பல்லக்கிலே இவர்ந்து, அரசவையின் வாயிலை அணுகிப், பல்லக்கினின்றும் இறங்கித், தமது வரவை அம் மன்னர் மன்னனுக்குத் தெரிவிக்கும்படி வாயிற் காவலர் களிடம் கூறினர். அவர்களுள், இருவர் சென்று, "வாழ்க, எம் அன்பிற்குரிய அரசரே, வில்லிபுத்தூரினின்றும் விட்டுசித்தர் என்னும் திருப்பெயரினை உடைய பெரியார் ஒருவர் வந்திருக்கின்றனர்," என்றனர். செல்வநம்பி அவ்வேந்தர் வேந்தன் அருகிற் சென்று, "வாழ்க வேந்தர் வேந்தரே, இவர்கள் கூறிய பெரியாரால் தங்கள் விழைவு முற்றுறும், என்று நம்புகின்றேன். அவரை நாம் எதிர் கொண்டு அழைத்தல் தகுதியாம் என்று கருதுகின்றேன்" என்றனர். அதனைக் கேட்ட அவ்வேந்தர்பிரான், செல்வ நம்பியுடனும் அவ்வாயிற் காவலருடனும் சென்று விட்டு சித்தரைக் கண்டனன். அவரது முகமதியில் அமைந்து விளங்கும் அன்பு, அருள, அடக்கம் முதலிய அருங்குணங் களின் ஒளி, அவரை வணங்குதல் வேண்டும் எனும் எண் ணம் அம்மன்னர்பிரான் மனத்தில் தோன்றச் செய்தது. அரசன் உடனே அவரை வணங்கி நின்று, "அருளிற் சிறந்த பெரியீர், தங்கள் வரவினால் என் மனம் மிக்க மகிழ்ச்சி யெய்திற்று. தங்கள் வரவு எங்கட்கு நல்வரவு ஆகும் என்று நான் முற்றும் நம்புகின்றேன்," என்றனன். செல்வநம்பியும் அவரை வணங்கிப் பல இனிய மொழிகளைக் கூறினர். பிறகு விட்டுசித்தர் அம்மன்னர் பிரானையும் செல்வ நம்பியையும் நோக்கி, "வாழ்க வேந்தர் வேந்தரே, வாழ்க அன்பரே; என் வரவு உயர்வற உயர் நலம் உடைய

வணுகிய இறைவன் அருளால் தங்கட்கு நல்வரவு ஆகும் பேற்றைப் பெறுவேனுனல், அஃது எனது முன்னேய அருந்தவப்பயனுக என்பால் எய்தியது எனக் கருதுதற்கு உரியதேயாகும்” என்றருளினர். பின்பு அவ்வரசர் பிரானும் செல்வ நம்பியும் அவரை அவைக்கு அழைத்துச் சென்று சிறந்ததோர் ஆதனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். அப்போது அவ்வவையில் இருந்த வித்துவான்களுள் ஒருவர் விட்டுசித்தரைக் கண்டு, “இவ் விட்டுசித்தனது பேதைமை என்னே! வேதங்களேயும் வேதங்களின் அங்கங்களேயும் இனிது கற்று வல்லவர்களாகிய மிகப் பெரிய வித்துவான்களால் இன்னது என நிச்சயித்துக் கூறுதற்கு அரிய பொருளேத் தக்க கல்வி அறிவு சிறிதும் இல்லாத நாமோ கூறுதற்கு உரியோம், என்று எண்ணுமல், புலமிக்கார் நிறைந்துள்ள இவ்வவையில் அப்பொருளே நிச்சயித்துக் கூற உறுதிகொண்டு வந்த இவனது நெஞ்சத் துணிவுதான் என்னே!” என்று கூறினர். மற்ருெருவர், “அன்பரே, குருட்டுக்கண் இருட்டைக் கண்டு அஞ்சுமோ? கலேயறிவாகிய ஒளியைப் பெற்றறியாத இவனது அகக் கண்ணுக்குத் தன்னேப் போன்ருர், கற்ருர் அவையிற் சென்று ஒன்றைக் கூறுதலால் எய்தும் அவமதிப்பாகிய இருட்டைக் கண்டு அஞ்சுதல் எப்படி உண்டாகும்?” என்றனர்.

மற்ருெருவர், “இளங்குழவி சுடர் விளக்கைத் தன் கையால் பற்றத் துணிவதுபோல் கலேயறிவின்மையால் இவன் இங்குத் துணிந்து வந்தனன்; இஃது ஒரு வியப்பான செயல் ஆகாது. அரும்புலச் செல்வர்கள் ஆகிய இவ் வேந்தர்பிரானும் செல்வ நம்பியும் கலேயறிவு சிறிதும் இல் லாதவனுகிய இவனேயும் நன்கு மதித்து, இங்கு அழைத்து வந்து, சிறந்த ஆதனம் அளித்து உபசரித்தமையே மிக்க

வியப்புடையதாகும்" என்றனர். மற்றொருவர்: "இவன் சிறிதும் கலையறிவு இல்லாதவன் என்பதை இவர்கள் அறியார்கள் போலும்; அறிந்திருப்பின் நல்லியல் அறிஞர்கள் ஆகிய இவர்கள் இப்பேதை மதிக்கு இங்ஙனம் சிறப்புச் செய்திரார்கள்," என்றனர். இங்ஙனம் இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், செல்வ நம்பி என்பவர் அம் மன்னர் மன்னன் குறிப்பின்படி விட்டுசித்திரை நோக்கி, "அருட் குணப் பெரியீர், தாங்கள் வேத முடியாயுள்ள உண்மைப் பொருளை நிச்சயித்துக் கூறி யருளுதல்வேண்டும்," என்றனர். "நாம் கலையறிவு சிறிதும் இல்லாதேம்" என்று எண்ணிக்கொண்டிருந்தவராகிய அவருக்கு அப்போது திருமகள் நாதன் அருளால் வேதங்கள், வேதாந்தங்கள் முதலிய அரும்பொருள் நூல்களும், அவற்றால் அறிய வேண்டிய உண்மைப் பொருளும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்கு விளங்குவன ஆயின. ஆதலின், அவர் மேகங்கள் பொருந்தித் தவழும் பெருவரையின் முழையில் கிடந்துறங்கும் சிறந்ததாகிய சிங்கம் அறிவுற்றுக் கண்கள் விழித்து வன்மையாக நிமிர்ந்து நாற்புறமும் நோக்கிப் புறப்பட்டு வருதல் போலப் பெருமிதத்துடன் எழுந்து, அவையின் இடையில் வந்து நின்று, அவையினருக்கு வணக்கம் கூறிப் பின் கேட்டாரைப் பிணிக்கத் தக்கனவும் கேளாதார் விரும்பத் தக்கனவுமாகிய விழுப்பொருளை யாவரும் விரும்பி ஏற்கும்படி இனிது விளக்கிக்கூறினர். உடனே, பொற்கிழி கட்டியுள்ள கம்பம் அப்பொற்கிழி இவருக்கு அருகு வர வளையலாயிற்று. உடனே விட்டு சித்தர் அப்பொற்கிழியை அறுத்துக்கொண்டனர். அவ் வேந்தர் பிரானும் செல்வ நம்பியும் களிப்பெனுங் கடலில் மூழ்கி, விட்டுசித்தருடைய திருவடித் தாமரைகள் தங்கள் முடிமலர்கள் ஆகும்படி அவரை வணங்கினர். அம்மன்னர்

மன்னன், விட்டு சித்தரை நோக்கித், "திருமகள் நாதன் திருவருளுக்கு உறையுளாகிய பெரியீர், இங்குத் தாங்கள் தங்கள் இயல்பாகிய அருளால் வந்து, இவ்வவையில் உள் ளார் உவந்து ஏற்கும்படியாகவும், உலகம் உய்யும்படியாக வும் உண்மைப் பொருளை விளக்கமுறக் கூறி, அடியேன் கொண்ட ஐயத்தினை ஒழித்து, அடியேனையும் ஆட்கொண் டருளினீர். ஈறில்லதாகிய பேரின்பப் பேற்றை யளித் தருளிய தங்கட்கு மின்னின் நிலையில்லதாகிய யாக்கையை யும் நிலையற்ற செல்வத்தையும் பெற்றுள்ள அடியேன் அன்பைத் தங்கள் திருவடிகளில் அருச்சனை மலர்களாகச் சேர்ப்பது அன்றிச் செய்யத்தக்க கைம்மாறு பிறி துளதோ? 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ உலகு' என்று விட்டுசித்தரைப் பலவாறு பாராட்டிக் கூறினன்."

விட்டுசித்தர் "அன்புக்கும் அருளுக்கும் உறைவிட மாகிய மனமுடைய வேந்தரே, எம்பெருமான் அறிவற்ற வனாகிய அடியேனை, உண்மை அறிவுடையவனாகச் செய் தருளினன். அதற்குத் தங்களுக்கு உளதாகிய ஐயமே காரணமாகும். உயிர்கள் எம்பெருமான் திருவருளைப் பெறுதற்கு அவனது திருமார்பில், அகலகில்லேன் இறை யும் என்றுறையும் அலர்மேல் மங்கை காரணமானவளாய் முன்னிற்றல்போல, அப்பிராட்டியின் திருவருட்கு இருப் பிடமாய் விளங்கும் தாங்கள் எம்பெருமானுடைய திரு வருளை அடியேன் பெறுதற்குக் காரணமானவர்களாய் முன்னின்றீர்கள். ஆதலின், யான் தங்கட்கு என்றும் கட மைப்பட்டவனாகி யிருக்கிறேன். தங்கட்கு ஞானச் செல் வமும் மற்றைச் செல்வங்களும் மன்னிப் பொலிந்து விளங்கு வனவாக," என்று வாழ்த்தினர்.

செல்வநம்பி, "அருட்குணப் பெரியீர், இவ்வேந்தர் வேந்தரது ஐயம் தங்கள் திருவருளினாலேதான் நீங்கும் என்னும் கருத்து, எம்பெருமான் அருளால் அடியேன் மனத்தில் தோன்றி நிலைகொண்டது. தாங்கள் இங்கு வந்து அதனை உண்மையுடையதாகவே செய்தருளினீர்கள்" என்று விட்டுசித்தரைப் பாராட்டி யுரைத்தனர்.

அவ்வவையில் இருந்த வித்துவான்கள் பெருவியப் பெய்தி, ஒருவரை யொருவர் திகைப்புற்று நோக்கலாயினர். அவர்களுள் ஒருவர் மற்றவர்களை நோக்கி, "அறிவிற் சிறந்த மறையவர்களே, என்னே இவ் விட்டுசித்தன் தன்மை இருந்தபடி! சிறு புன் குட்டையானது பெரு வெள்ளங் கொண்ட மிகப் பெரியதோர் ஆறாய்ப் பெருகிப் பாய்ந்தது போலிருக்கின்றதே" என்றனர்.

மற்றொருவர் "வேத நாவர்களே, மேலே சாம்பல் பூத்திருக்கும் நெருப்பைச் சாம்பல் என்றே கருதுவார் போல, இவ் விட்டுசித்தர் தக்கார்பாற் சென்று கற்காதவர் என்பது கொண்டு, இவரை அறிவற்றவர் என்றே நாம் கருதியிருந்தோம். உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளனாகிய இறைவனுடைய திருவருளைப் பெற்றுள்ள இச் சீரியர், இங்ஙனம் உண்மைப் பொருளை யாவரும் உணர உரைத்ததில் வியப்பொன்றும் இல்லை. இவர் அவ் விறைவனுடைய திருவருளைப் பெறுதற்குக் காரணமாகிய இவருடைய அருந்தவமே வியப்புக்கு உரியதாகும். இவரை அவன் இவன் என்னாது வணங்கிப் போற்றுதலே தகுதியாகும்; வம்மின்; வணங்கிப் போற்றுவம்," என்றனர். உடனே, அம்மறைவாணர் யாவரும் அவர் உரைத்தனவற்றை முழுதும் ஒப்புக்கொண்டு, அவருடன் சென்று, விட்டுசித்தருடைய திருவடிகளில் தங்கள் முடிகள்பட வணங்கி நின்று, விட்டுசித்தரை நோக்கி, கற்றாருட் கற்றார்

எனப்படுதற்கு உரிய பெரியீர்! பல நூல்களையும் கற்ற தனல் ஆகிய செருக்கினல் பொய்ந்நின்ற ஞானம் உடைய வர்களாகிய எங்களை நாங்கள் மெய்ந்நின்ற ஞானம் உடைய வர்களாக மதித்துக்கொண்டு உலக நாயகனுகிய இறைவ னுடைய திருவருளால் மெய்ந்நின்ற ஞானம் பெற்றுள்ள தங்களை அறிவற்றவரென எண்ணிப் பலவாறு இழித்துப் பேசினேம். அங்ஙனம் பேசிய எங்கள் குற்றத்தை மன் னித்து எங்கட்கு அருள்புரிதல் வேண்டும்," என்று வேண்டி னர்கள். விட்டுசித்தர், "கற்பன கசடறக் கற்ற அறிஞர் களே! தங்களைப்போன்ற நல்லறிவாளர்களின் சேர்க்கையே என்னை எம்பெருமான் திருவருளைப் பெறுதற்கு உரியவ னுகும்படி செய்தது. ஆதலின், தாங்கள் என்னல் என்றும் விரும்பப்படுதற்கு உரியீர்களே அன்றி, எவ்வகையாலும் வெறுக்கப்படுதற்கு உரியீர்கள் அல்லீர். தங்கள் நலம் வாழ்க!" என்றருளினர்.

அரசன் கட்டளையினல் அந்நகர மாடங்கள் தோறும் கொடிகளை ஏற்றித், தோரணக் கம்பங்கள் நாட்டி, மலர் மாலை களைக் கட்டித் தொங்கவிட்டுப் பலவகையாகிய அலங்காரங் கள் செய்யப்பட்டன. அரசர்பிரான் விட்டுசித்தருக்குப் பட்டர்பிரான் என்னும் பட்டம் அளித்து, அவரைத் தனது பட்டத்து யானையின்மீது ஏற்றுவித்துத், தன்னுடைய அமைச்சர்களும் படைத்தலைவர்கள் முதலியவர்களும் அவ் யானையைப் புடைசூழ்ந்து வரவும், சிலர் இருமருங்கினும் இருந்து சாமரைகள் வீசவும், பல மறையவர்கள் வேத மந்திரங்களை ஓதி வாழ்த்தவும், தான் உடனிருந்து உலாவச் செய்தனன். முரசங்கள் இடியென முழங்கின; தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்னும் கருவிகள் ஒலித்தன. கட்டியங்கூறுவோர், "மெய்ந்நாவலர் வந்தார்; வேண்டிய வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்த

பட்டர்பிரானுர் வந்தார்," என்று விருது கூறிக்கொண்டு முன்னே சென்ருர்கள்; கடலின் முழக்கம் புல்லிது என்னும்படி மக்கள் பேராரவாரம் செய்தார்கள். அன்று அந்நகரில் செய்த அலங்காரங்களுக்கும் மகிழ்வோடு கூடிய ஆரவாரங்களுக்கும் இவ்விந்திய நாட்டின் தலைநகரில் 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் 14ஆம் நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு ஆங்கிலர் இந்தியருக்கு அதிகாரம் மாற்றித்தரும் சடங்கு நடந்தபின் மறுநாளாகிய 15ஆம் தேதி இவ்விந்திய மக்கள் இந்தியநாடு முழுதினும் செய்த அலங்காரங்களையும் ஆரவாரங்களையும் ஒப்புக் கூறலாகுமே அன்றிப் பிறிது ஒன்றினையும் ஒப்புக் கூறலாகாது.

இத்தகைய சிறப்புக்களுடன் விட்டுசித்தர் உலா வரலானுர். அப்போது கலையறிவிலே தேர்வுற்றுப் பல சிறப்புக்களைப் பெற்றுவரும் தம் மக்களைக்காண எதிர்கொண்டு வரும் பெற்ருேரைப்போலத் திருமகள்நாதன் இடையில் மின்னற்கொடி விளங்கி ஒளிரவும், உடுக்கூட்டங்கள் புடை சூழ்ந்துவரவும், கருமாமுகில் எழில்மிக்க வரையின்மீது இவர்ந்து வருதல்போலத் திருமகள் மார்பில் பொலிந்து விளங்கவும்,* அரன், அயன், இந்திரன் முதலிய தேவர்கள் புடைசூழ்ந்து வரவும், கருடன்மீது இவர்ந்துவந்து, விட்டு சித்தருக்கும் அவ்வரசன் முதலியவர்களுக்கும் காட்சியளித் தருளினன். பட்டர்பிரானுர் அப்பேரருளாளனைக் கண்டவுடன், அவன் முதலும் ஈறும் இல்லாதவன்; உயர்வற வுயர் நலம் உடையவன்; அயர்வறுமமரர்கள் அதிபதி; திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசைப் படர்பொருள் முழுவதும், ஆயவை அவைதொறும், உடன்மிசை உயிர் எனக் கரந்

* "கிளர்ந்த பிரமன் சிவனிந்திரன் விண்ணவர் சூழ்"
ஆருயி ரப்படிகுரு பரம்பராப் ப்ரபாவம்
"சுரர் முனிவர் பிரமன் மதிசூடி சூழ"
அரிசமயதீபம், பட்டநாதச் சருக்கம், —செ. 25.

தெங்கும் பரந்திருப்பவன்; வேண்டுதல் வேண்டாமை இலாதவன் என்பவற்றையும் தம்மையும் மறந்து,

"சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தலமெலாம் உகினும்"

மறுகா நிலையாகிய பரந்தாமத்தில் நித்தரும் முத்தரும் சேவிக்க விளங்கும் இப்பரம்பொருள், நிலையற்றதும் அறத் தொழில் உடையாரை அழிக்கவெண்ணும் மறத்தொழிலை யுடையார் மிக்கிருக்கப் பெற்றதும் ஆகிய இவ்விருள் தருமா ஞாலத்துப் பலரும் காண வெளிப்போந்திருக்கின்றதே! இப்பொருளின் எழில் முதலியவற்றிற்கு என்ன தீங்கு வருமோ என்னும் ஐயம் மீக்கூர்ந்தவராய்த், தாம் இவர்ந் துள்ள யானையின் கழுத்திலுள்ள மணியையே தாளமாகக் கொண்டு, "இப்பொருளின் எழில் முதலியன, ஒரு தீங்கும் நேரப்பெறாமல் நிலையாய்ப் பொலிவுறல் வேண்டும்," என்று அன்பின் மிகுதியினால் பல்லாண்டு பாடி வாழ்த்துவா ராயினர். அங்ஙனம் அவர் பாடிய பாசுரங்களுட் சிலவற்றை அடியிற் காண்க.

### குறள் வெண்செந்துறை

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா
உன்சேவடி செவ்வி திருக்காப்பு.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வாழாட்பட்டுநின் றீருள்ளீ ரேல்வந்து
மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட் பட்டுநின் றீர்களை யெங்கள்
குழுவினில் புகுதலொட்டோம்
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்
இராக்கதர் வாழிலங்கை
பாழா ளாகப் படைபொரு தானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே.

திருமாமகள்நாதன் அப் பாசுரங்களைக் கேட்டு மகிழ் வுடன் மறைந்தருளினன். பட்டர்பிரானர் அவ்வேந்த னுக்கு அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டை எய்துதற் குரியனவற்றை நன்கு விளங்க உரைத்தருளினர். அவ் வேந்தர்பிரானும் அவரையே தன்னரிய குரவராக விரும் பிக்கொண்டு, அவர் பணித்தருளிய நெறியில் ஒழுகுவா னனன்.

பின்பு பட்டர்பிரானர், அவ்வேந்தனிடமும் செல்வ நம்பியினிடமும் விடைபெற்றுக்கொண்டு, வில்லிபுத்தூரை யடைந்து, தாம் கிழியறுத்துக் கொணர்ந்த பொன்னை வட பெருங் கோயிலின்கண் எழுந்தருளியுள்ள திருமாமகள் நாதனுக்கே ஆக்கிக், கண்ணனது குழவிப்பருவத்தின் அரிய விளையாட்டுகள் முதலியவைகளையே பொருளாகக்கொண்டு, நாற்பத்துநான்கு திருமொழிகளை (பதிகங்களை)ப் பாடி யருளினர். இவற்றின் மொத்தமாகிய பாசுரங்கள் நானூற்று அறுபத்தொன்பது ஆகும். திருப்பல்லாண்டின் பாசுரங்கள் பன்னிரண்டு ஆகப் பாசுரங்கள் நானூற்று எழுபத்து மூன்று ஆகும். இவருடைய பாசுரங்கள், பெரியாழ்வார் திருமொழி என்னும் பெயரால் வழங்கப் பட்டு நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தின் முதலில் அமைக் கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், முதல் திருமொழியின் சில பாசுரங்களை அடியிற் காண்க.

**கலி விருத்தம்**

**வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்க்**
**கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்**
**எண்ணெய் சுண்ணம் எதிர்எதிர் தூவிடக்**
**கண்ணன் முற்றம் கலந்தள றாயிற்றே.** (1)

**கையுங் காலும் நிமிர்த்துக் கடாரநீர்**
**பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்**
**ஐய நாவழித் தாளுக்கங் காந்திட**
**வைய மேழுங்கண் டாள்பிள்ளை வாயுளே.** (2)

பிறகு பட்டர்நாதர் முன்போலவே வடபெருங்கோயிலில் எழுந்தருளியுள்ள திருமாமகள்நாதனுக்குத் திருமாலைத் தொண்டு செய்து, உலகினருக்குப் பேரின்பப் பேற்றை எய்துதற்கு உரிய உறுதிமொழிகளைக் கூறி, உலகினரை வாழ்வித்தருள்வாராயினர். இவர் திருமகள் நாதனைப் பல்லாண்டு பாடி வாழ்த்தினமையின் இவரைப் **பெரியாழ்வார்** என்று வைணவப் பெரியார்கள் கூறலானார்கள். இவருடைய பாசுரங்கள் தேனின் சுவையின; குழல் புரை இசையின; மலர் நிகர் பொலிவின; ஆற்று நீர்ஒக்கும் செலவின.

## பெரியாழ்வார் அவதரித்த மாதமும் நாளும்

### நேரிசை வெண்பா

**இன்றைப் பெருமை யறிந்திலையோ யேழைநெஞ்சே**
**இன்றைக்கென் ஏற்றம் எனில்உரைக்கேன்—நன்றிபுனை**
**பல்லாண்டு பாடியநம் பட்டர்பிரான் வந்துதித்த**
**நல்லானி யிற்சோதி நாள்.**

**—உபதேசரத்தினமாலை. பா. 16.**

## வாழி திருநாமம்

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**நல்லதிருப் பல்லாண்டு நான்மூன்றேன் வாழியே**
**நானூற்றறு பத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே**
**சொல்லரிய ஆனிதனிற் சோதிவந்தான் வாழியே**
**தொடைசூடிக் கொடுத்தவள்தன் தொழுந்தமப்பன் வாழியே**
**செல்வநம்பி தன்னைப்போற் சிறப்புற்றான் வாழியே**
**சென்றுகிழி அறுத்துமால் தெய்வமென்றான் வாழியே**
**வில்லிபுத்தூர் நகரத்தை விளக்கினான் வாழியே**
**வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே.**

# உ. திருமழிசை ஆழ்வார்

தரவுகொச்சகக் கலிப்பா

தருச்சந்தப் பொழில்தழுவும் தாரணியின் துயர்தீரத்
திருச்சந்த விருத்தம்செய் திருமழிசைப் பரன்வரும்ஊர்
கருச்சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணம்நாறும்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியே.

உலகம் புகழும் தமிழகத்தின் பகுதிகளாகிய சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு என்னும் நாடுகளுள், ஒன்றாகிய தொண்டைநாடு, 'தெண்ணீர் வயல் தொண்டை, நன்னாடு சான்றோ ருடைத்து,' என்று ஔவை யார் கூறியபடி கல்விகேள்விகளிற் சிறந்த மதிநுட்பம் வாய்ந்தவர்களும் அக்கல்வி கேள்விகளுக்கு ஏற்ப நல் லொழுக்கம் வாய்ந்தவர்களும் ஆகிய சான்றோர்களால் அழகுற்று விளங்குவதாகும்.

இந்த நாட்டில் மேகங்கள் திருமகள்நாதன் கைச் சங்கம் என வானில் வெண்ணிறம் உற்று விளங்கிக், கடலிற் சென்று, அதன் நீரை யுண்டு, அப்பெருமானுடைய திரு மேனியின் உருவம்கொண்டு மீண்டு, ஊழிமுதல்வனாகிய அவனுடைய கையின் ஆழிபோல் மின்னி, அவன் கைச் சார்ங்கம் என்னும், வில் சொரியும் சரமழைபோல் நீரைச் சொரிதலால், ஆற்றில் பெருகி வரும் வெள்ளம், யாவரும் அஞ்சும்படி வரும் மதங்கொண்ட யானை யெனச் செல்லும். அம்மதகரியை அறிவின் திறமிக்க பாகன் தோட்டியினால் மெல்ல அடக்கித் தன்வயப்பட்டு அமைதியாகச் செல்லச் செய்தல்போல உழவர்கள் அங்கங்குக் கரைகளில் இடும் படல்களால் அவ்வெள்ளத்தின் வேகத்தைப் பையப் பையத் தணித்துத் தம்வயப்படுத்தி, அமைதியாகச் செல்லச் செய் வார்கள். அப்பாகர்கள் அங்ஙனம் அமைதியாகச் செல்லும்

யானையைத் தாம் கூறுவனவற்றைச் செய்யும்படி செய்தல் போல, உழவர்கள், அங்ஙனம் அமைதியாகச் செல்லும் ஆற்றுவெள்ளத்தைக் கால்களின் வழியாக வயல்களிற் பாயச் செய்வார்கள். பிறகு உழவர்கள் நாள் பார்த்துத் திருமகளைப் போற்றித் தம்முடைய உழுதொழிலுக்கு உற்ற துணையாகி விளங்கும் மேகங்கள், கடல் நீரைப் பருகுதற்கு முன் பெற்றிருக்கும் உருவத்தினையும் பருகியபின் பெறும் உருவத்தினையும் யாவருக்கும் காட்டுவார்போல் வெண்ணிறம் வாய்ந்த எருதுகளையும் கருநிறம் கொண்ட எருமைகளையும் பூட்டி வயல்களை உழுவார்கள். குளங்களிலும் ஓடைகளிலும் குவளைப்போதுகள் அவ்வுழவர்களின் செயல்களைப் புவிமகள் நன்கு நோக்குதல் போல மலர்ந்து பொலியும். தாமரைப்போதுகள் அவ்வுழவர்களின் குன்றாத முயற்சியைக் கண்டு பூதேவி அகமகிழ்ச்சியினால் முகமலர்ந்து விளங்குவதுபோல மலர்ந்து விளங்கும். அம்மலர்கள் தங்கள் மனைவியர்களின் கொங்கைகளையும் கண்களையும் ஒத்து விளங்குதலின், உழவர்கள் அவற்றையே அன்புடன் நோக்கி நிற்பார்கள். அவர்கள் உழும் உழுபடைச் சால்களில் தவழ்ந்து செல்லும் சங்குகள் ஈனும் முத்துக்கள், பூதேவி அவ்வுழவர்களின் நிலையைக் கண்டு புன்முறுவல் புரிதலைப்போல ஒளிரும்.

உழவர்கள் விதைத்த விதைகள் சங்கு ஈன்ற முத்துக்களின் இனம் என்று சொல்லும்படி முளைவிட்டுப், பொன் என இதழ்கள் காட்டிப், பவழம் போலக் கால்களை நீட்டி, மரகதம்போல இலைகளை விரித்து, நீலமணிகள் போன்றொளிரும் நாற்றுக்களைத் தோற்றுவிக்கும். உழவர்கள் அங்ஙனம் தோன்றிய நாற்றுக்கள், பக்குவம் அடைந்துள்ளமையை அறிந்து, அவற்றைப் பறித்து நடுதற்பொருட்டுக் கழனிகளில் சேறு தோன்ற உழுது, அச்

சேறுகளையும் பக்குவப்படுத்தித், திருமகளைப் போற்றி அந்நாற்றுக்களைப் பறித்து எடுத்துப், பல அரிகளாகக் கட்டி, அவற்றை வெவ்வேறாக வைத்துப், பின்பு சுமந்து சென்று வயல்களில் நடுவார்கள். அங்ஙனம் நட்ட நாற்றுக்கள் வளர்ந்து, கருவுற்று, கருப்பம்கொண்ட பசும் பாம்பின் தோற்றத்தைக் காட்டி, பகைவர்க்கு வணங்குதல் இல்லாத வீரர்களைப்போலத் தலைநிமிர்ந்து நின்று, தெளிந்த நூற்கல்வியை உடைய மாந்தரைப்போலத் தலை வணங்கி, நுண்மதியுடையான் நூற்பொருள்போல ஒன்று பல ஆயிரமாகக் காய்க்கும். உழவர்கள் அச் செந்நெற்பயிர்களை அறுத்துக்கொண்டுபோய்க், களத்தில் போராக அமைத்து, அப்போர்களை எருதுகளைக்கொண்டு சரித்துத் துவைப்பித்து, வைக்கோலை நீக்கி, நெற்களை அளந்து, தங்கள் நலத்தினைக் கருதாமல் உலகம் நலம் உறுதலையே எண்ணி முயலும் நற்குணப் பெரியோர்கள் மேன்மை போல மேலும் மேலும் உயர்ந்து விளங்கும் பொலிகளாகக் குவிப்பார்கள். அங்ஙனம் அமைத்த நெற்போரில் ஆறில் ஒரு பகுதியை அரசருக்குத் திறையாக அளித்து, மற்றையன கொண்டு தென்புலத்தார் தெய்வம் விருந்தினர் சுற்றத்தார் தாம் என்று சொல்லப்படும் ஐந்திடத்தும் செய்தற்குரிய அறங்களை வழுவாமல் செய்து, செல்வந் தழையப்பெற்று விளங்குவார்கள். இந்த நாட்டில் கைத் தொழிலாற் செய்யப்படும் பொருள்களுள் பல, கலங்கள் பலவற்றின் மூலமாகப் பல நாடுகளுக்கும் அனுப்பப்படும். இந்த நாட்டினருடைய செல்வமிகுதியைக் கண்ட பிற நாட்டவர்கள், "உலகில் செல்வத்தின் மிக்கவர்களுக்கு மக்களால் காணப்படாமல் வானுலகில் இருக்கும் குபேரனைப் புலவர்கள் உவமையாகக் கூறுவதைப்பார்க்கிலும் இந்த நாட்டுச் செல்வர்களை உவமையாகக் கூறுதலே தகுதி

யாகும்," என்று உரைப்பார்கள். இந்நாட்டு வீரர்கள் குடிகளுக்குப் பிறரால் துன்பம் சிறிதும் அணுகாதபடி குடிகளைக் காத்தலையே தங்கள் வெற்றி யெனக்கொண்டு நாட்டினைக் கண்ணிமை எனக் காப்பார்கள். இந்நாட்டில்,

"பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே".

—(க ரா. நாட். செய். 36)

இந்நாட்டு வேந்தர்கள் இந்நாட்டு உயிர்களை எல்லாம் தம் உயிர்போல ஓம்பி நிற்பவர்கள். இந்நாட்டு அமைச்சர்கள் உற்றது கொண்டு, மேல்வந்துறுபொருள் உணரும் அறிவினர்; ஊழையும் உப்பக்கம் காணும் பெற்றியர்; அரிய நூல்கள் பல கற்ற மேன்மையர்; மானத்தை என்றும் மதிக்கும் நீர்மையர்.

இந்நாட்டாசிரியர் ஆறு, நீர்ப்பெருக்கற்று நடப்பார் அடியைச் சுடும் அந்நாளிலும் ஊற்றுப் பெருக்காலும் தன் அருகுள்ள கயங்களாலும் உலகை உண்பித்துச், செழிக்கச் செய்தல்போல வருவாய் அற்றுத் தம் அகத்தார் வருந்தும் படியான காலத்திலும் உலக மக்களைக் கலையமுது உண்பித்து, அறிவிற் சிறந்து விளங்கச் செய்வார்கள். இந்நாட்டரசர்களும் செல்வர்களும் மனைக்கு ஒளியீனும் விளக்குகளைக் குறைவற நெய்பெய்து காப்பாரைப்போல அவ்வருங்கலை ஆசிரியர்களை உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் குறையுறாதபடி காப்பார்கள்.

## திருமழிசை ஆழ்வார் அவதாரம்

இங்ஙனம் பல வளங்களும் இனிதமைந்த இந்நாட்டில் கடலுக்கு மேற்கில் திருக்கச்சிப்பதிக்குக் கிழக்கில்

திருமழிசை யென்னும் பதி ஒன்று உண்டு. அது, பூமிக்குக் கனியின் சிறந்த சாரம்போன்று விளங்குவது. ஆதலின், அதனை மகிசாரப்பதி என்றுங் கூறுவர். அவ்வூரில் மறை ஓதுவார் இடங்களும், அருந்தமிழ் நூல்களைக் கற்பார் கழகங்களும், எங்கும் பொலிந்து விளங்கும். அவ்வூரில் விருந்தினரை உபசரிப்பார் ஒலியும், வறியவர்கள் தாம் விரும்பியவற்றைப் பெற்ற மகிழ்ச்சியினால் ஈந்தவர்களை வாழ்த்தும் வாழ்த்தொலியும் எப்புறத்தும் கேட்கும். அதன் சிறப்பைப் பிரமதேவர்பால் கேட்டறிந்த பார்க்கவர் முதலிய சில முனிவர்கள் அப்பதியில் வந்து தங்கித் தவம் புரியலாயினர். அவர்களுள், பார்க்கவர் என்னும் முனிவர் திருமகள் நாதனைக் குறித்துத் தீர்க்கசத்திரயாகம் என்னும் ஒரு யாகத்தைச் செய்யலானார். அப்போது அவருடைய மனைவியார் கருவுற்றுப் பன்னிரண்டு திங்கள் கழித்துக், கை கால் முதலிய உறுப்புக்கள் இல்லாத ஒரு பிண்டத்தைப் பெற்றனர். பார்க்கவ முனிவரும் அவர் மனைவியாரும் மனம் தளர்ந்து, அதனைப் பிரம்புத்தூற்றின்கீழ் இட்டுச் சென்றுவிட்டார்கள். பிறகு ஆழியங்கையனாகிய பெருமான் திருமாமகளுடன் அங்கு வந்தருளி, அதனை அன்புடன் நோக்கி, அருள்புரிந்து சென்றனன். அதனால், அப்பிண்டம் எல்லா வுறுப்புக்களும் அமையப்பெற்ற ஓர் அழகிய ஆண்மகவாகி அழத் தொடங்கியது. அப்போது பிரம்புத் தொழில் புரிபவனாகிய திருவாளன் என்பவன், பிரம்பு அறுத்தற் பொருட்டு அப்பிரம்புத்தூற்றின் அருகில் வந்து, குழந்தை அழும் ஒலியைக்கேட்டு, "அஃது எங்கிருக்கின்றது," எனத் தேடிச் சென்று, அக்குழந்தையைக் கண்டான். கண்டு, "என்னே! இவ்வழகிய குழந்தை இங்குத் தனியாக இருத்தற்குக் காரணம் யாது? இதன் பெற்றோர்கள் இங்கு அருகில் எவ்விடத்திலேனும் இருக்கின்றார்களா

பார்ப்போம்,'' என்று எண்ணி, நாற்புறத்தும் சுற்றித் திரிந்து பார்த்தான். அங்கு ஒருவருங் காணப்பட்டிலர். அவன் மகப்பேறு இல்லாதவன். ஆதலின், "நம்முடைய மகப்பேறு இல்லாத குறையைத் தீர்க்கக் கருதித் திருமகள் நாதனே இக்குழவியை நமக்களித்தருளினன்போலும். இக்குழவி நாம் முற்பிறப்பில் செய்த அருந்தவப்பேறே யாகும்,'' என்று எண்ணி, மிக்க ஆர்வத்தோடு இரு கைகளாலும் அக் குழந்தையை யெடுத்து, முத்தமிட்டு, உச்சி மோந்து, மார்புடன் அணைத்துப் பிறவிக்குருடன் கண் பெற்றாற் போன்ற மகிழ்ச்சியை அடைந்து, தன் மனைக்குச் சென்று, தன் மனைவியாகிய பங்கயச் செல்வியை அழைத்து, அம் மகவை அவள் கையிற் கொடுத்து, அது கிடைத்த வரலாற்றையும் அவளிடம் கூறினன்.

அந் நற்குண நங்கையும், "ஆ! இன்றே நம்முடைய குறை நீங்கியது; இன்றே நாம் நமது வாழ்க்கையின் இன்பத்தைப் பெற்றவர்கள் ஆயினோம். இவ்வுலகில் எவ்வளவு செல்வம் உடையவர்களாய் வாழ்ந்தாலும் எவ்வளவு நீண்ட நாள் வாழ்ந்தாலும் 'இன்னடிசில் புக்களையும் தாமரைக் கைப் பூநாறும் செய்யவாய் மக்களை' இல்லாதவர்களுக்கு இன்பம் உண்டாகுமோ? எம்பெருமான் நமது மனத் துயரைத் தீர்த்தருளினன்,'' என்று கூறி, முத்தமளித்து, அன்போடு மார்புடன் அணைத்துக்கொண்டனள். அக் குழவியை அவள் தானே பெற்றாள் என்று கண்டார் கூறும்படி அவள் மார்பில் பால் சுரந்தது. ஆயினும், அப் பாலை அம்மகவு உண்டிலது. அக்குழவி பலநாள் வரையினும் பாலுண்ணாமல் இருத்தலைக் கண்டு, திருவாளனும் அவன் மனைவியும் மிகவும் மனம் வருந்தினார்கள். அக் குழவி பால் உண்ணாமல் இருந்தும் உடல் சிறிதும் வாடுதல் இன்றிப் பொலிவுற்று விளங்குதலைக் கண்டு, அவ்விருவரும்

பெருவியப்பெய்தினர்கள். இச்செய்தி அவ்வூர் முழுதும் பரவியது. அவ்வூரிலுள்ள பலரும் வந்து பார்த்து, "ஆ! இஃதொரு தெய்வக் குழவிபோலும்! இக்குழவியின் முகப் பொலிவு, இது தன்னைப் பலரும் வணங்குதற்குரிய நிலையை எய்தும் என்பதனை நன்கு விளக்குகின்றது," என்று கூறலாயினர்.

## கணிகண்ணர் அவதாரம்

திருமழிசையில் உறைபவரும், மகப்பேறு இல்லாதவரும், திருமகள்நாதன்பால் பேரன்பு உடையவரும் ஆகிய ஒரு முதியவர், அவ்வியப்பான செய்தியைக் கேட்டு, அக் குழவிக்குக் கொடுக்கப் பாலைக் காய்ச்சி எடுத்துக்கொண்டு வந்து, அம் மகவின்முன் வைத்து, "அரும்பெறல் குழவியின் வடிவில் எழுந்தருளியுள்ள பெரியீர்: இதனை ஏற்றருளல் வேண்டும்," என்று வேண்டி, அப்பாலை உண்பித்தார். அக் குழவியும் அதனை விரும்பி உண்டது. திருவாளனுடைய மனைவியாகிய பங்கயச் செல்வி, "ஆ! என்னே வியப்பு! என் மார்பில் சுரந்து வந்த பாலைக் குடிக்காமல் இருந்த என்னருமைச் செல்வனை இம் முதியார், தாம் கொண்டு வந்த பாலைக் குடிக்கும்படி செய்து, எங்கள் மனக்குறையைப் போக்கியருளினர். இவர் அருந்தவச் செல்வர் போலும். இவர் இவ்வாறே நாள்தோறும் பாலைக் கொண்டு வந்து, நம்மருமைச் செல்வனை உண்பிக்கின் நலமாம்," என்றெண்ணித் தன் கொழுநனாகிய திருவாளனை நோக்கி, "என் அன்பிற்குரியீர்! இம் முதியவர் இதுவரையினும் பால் குடிக்காமல் இருந்த நம்முடைய அருமைச் செல்வனைத் தாம் கொண்டு வந்த பாலைக் குடிக்கச் செய்தனர். இவர் ஓர் அருந்தவப் பெரியாராயிருப்பர் என்று எண்ணுகின்றேன். இங்ஙனமே தாங்கள் அருள்கூர்ந்து

பாலைக் கொண்டுவந்து இப் பச்சிளங்குழவியை உண்பித் தருளல்வேண்டும் என்று இம் முதியவரை நீங்கள் கேட் டுக்கொள்வது நலமாம் என்று கருதுகின்றேன்,'' என்று கூறினள். அங்ஙனமே திருவாளன் அம்முதியவரை வேண்ட அவர், "அன்புடையீர்! எனக்கும் அது விருப்ப மானதே! அவ்வாறே நான் நாள்தோறும் பால் கொண்டு வந்து இவ்வருமைக் குழந்தையை உண்பிக்கின்றேன்,'' என்று கூறிச் சென்று. அவ்வாறே நாள்தோறும் தம் முடைய மனைவியாரோடு பாலைக் கொண்டுவந்து அக் குழவியை உண்பிக்க அவ்வருமை மகவும் அப்பாலை உண்டு வந்தது. ஒருநாள் அக்குழவி அப்பாலில் ஒருபகுதி எஞ்சி நிற்கும்படி வைத்து, மற்றப் பகுதியை உண்டது. அம் முதியவரும் அவர் மனைவியாரும் அங்ஙனம் எஞ்சிநின்ற பாலை உண்டார்கள். அதனுல், அவர்கள் தக்க உடல் வன்மையினைக்கொண்ட இளமைப்பருவத்தினை யுடையவர் கள் ஆனுர்கள். பிறகு, அப்பெரியவரின் மனைவியார் கருவுற்றுப் பத்துத்திங்களும் சென்று, ஓர் அரும்பெறல் மகவை ஈன்றனர். அவர்கள் பத்துநாளுங் கடந்த இரண்டாம் நாள் அம் மைந்தருக்குக் 'கணிகண்ணன்' என்று பெயரிட்டு வயது வந்தவுடன் அச்செல்வருக்கு மக்கள் கற்கவேண்டிய நூல்களை எல்லாம் கற்பித்தார்கள்.

பார்க்கவ முனிவருடைய தவப்பேருய்த் திருவாள னும், அவனுடைய மனைவியாகிய பங்கயச்செல்வியும் ஆகிய அவ்விருவருடைய ஆருயிராய் விளங்கும் அவ்வருமை மைந் தருக்கு அவர் திருமழிசையில் அவதரித்த காரணத்தால் **'திருமழிசைப்பிரான்'** என்னும் பெயர் வழங்குவதாயிற்று. கண்ணன் வசுதேவர் மைந்தனுகத் தேவகியின் திருவகட் டில் தோன்றி, நந்தகோபர் யசோதைப்பிராட்டி என்னும் இவர்களுடைய செல்வமைந்தன் என வளர்ந்தாற்போலவே

திருமழிசைப்பிரானும் பார்க்கவமுனிவருடைய மகவாய் அவருடைய மனைவியின் திருவகட்டில் தோன்றித், திருவாளன் பங்கயச்செல்வி என்னும் இவர்களுடைய செல்வ மைந்தர் என வளர்ந்துவருவாராயினர்.

## திருமழிசைப்பிரான், பல சமயங்களிற் புக்கு முதற்பொருளை ஆராய்தல்

இங்ஙனம் வளர்ந்துவந்த திருமழிசைப்பிரானர் ஏழு ஆண்டுகளானபோது எம்பெருமானாகிய திருமகள்நாதன் திருவருளால்,

"இளைப்பினை இயக்கம் நீக்கி
இருந்துமுன் இமையைக் கூட்டி
அளைப்பிலைம் புலனடக்கி"

யோகம் புரியும் கருத்து உடையவரானர். யோகம் புரிதற்கு எல்லா எழுத்துக்களுக்கும் முதல் ஆகிய அகரம் போல எல்லா உலகுக்கும் முதல் ஆகிய பரம்பொருளின் தியானம் இன்றியமையாதது என நூற்கள் கூறுதலின், அம்முதற்பொருளை அறிதல்வேண்டும் என்று கருதினர். ஆனல், "ஒன்றினேடொன்று ஒவ்வாமற் பிணங்குவனவும் பலவாய் இருப்பனவும் ஆகிய சமயங்களுள் ஒவ்வொன்றும் தான்தான் கூறுவதே அம் முதற்பொருள் என்று கூறுதலால், எச்சமயம் கூறும் பொருள், அம் முதற்பொருள் என்று துணிவது," என்று ஐயம் கொள்வாராயினர். பிறகு, "நாம் ஒவ்வொரு சமய நூல்களையும் நன்கு ஓதி உணர்ந்தால் அன்றி, அம் முதற்பொருள் இன்னதென்பதனை நன்கு அறிதல் இயலாது. ஆதலின், ஒவ்வொரு சமயமாகப் புக்கு ஆராயக்கடவோம்," என்று கருதிச் சாக்கியம் சமணம் என்னும் சமயங்களில் உள்ள நூல்களை ஓதியுணர்ந்து,

அவற்றைவிட்டுப் பின் *சைவசமயத்தை அடைந்து, அச்சமய நூல்களை ஆராய்ந்துகொண்டு சைவராய் விளங்கினர்.

## திருமழிசையார் பேயாரை ஆசிரியராகப் பெறுதல்

திருமழிசையார் அங்ஙனம் சைவசமயத்தைக் சார்ந்திருக்கையில் பல திருக்கோயில்களுக்கும் சென்று, சிவபிரானைச் சேவித்துவிட்டுத் திருமயிலையை அடைந்தனர். அப்பதியிலே அப்போது முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய பேயாழ்வார் ஒரு பூஞ்சோலையில் இருந்தனர். அவர் திருமழிசையாரைக் கண்டு, அவருடைய மனநிலையை முன்னரே கேள்வியுற்றிருந்தவர் ஆதலின், அவரைத் திருத்திப் பணிகொள்ள எண்ணி, அவர் காணும்படி செடிகளைத் தலைகீழாக நட்டு, அறுந்து முடியிடப்பட்ட கயிற்றால் கட்டப்பட்ட ஓர் இல்லிக்குடத்தினால் நீரை முகந்து, அச்செடிகளுக்கு ஊற்றிக்கொண்டிருந்தனர். திருமழிசையார் அதனைக் கண்டு நகைத்தனர். பேயாழ்வார் திருமழிசையாரை நோக்கி, "யோகியாரே! என்ன நகைக்கின்றீர்?" என்றார். திருமழிசையார், "செடிகளை எப்பக்கம் நட வேண்டும் என்பதை யுணராமல் தலைகீழாக நட்டு, அறுந்து முடியிட்ட கயிற்றால் கட்டிய இல்லிக்குடம் கொண்டு நீர் முகந்து அச்செடிகளுக்கு ஊற்ற முயலும் உம்முடைய பித்துக்கொண்ட செய்கையைக் கண்டால், யாரே! நகைக்காமல் இருப்பர்!" என்றார். பேயார், "யோகியாரே! பித்துக்கொண்ட செயலைப் புரிபவர் நீரோ? யாமோ? யாம் புரியும் செயலின் கருத்தை உணர்ந்துகொள்ளும் ஞானம் இல்லாத நீரோ, உலகத்தவர்களுக்கு வீடுபேற்றைப் பெறும் வழி காட்டுதற்கு உரியீர்?" என்றனர்.

---

*இவர் சைவ சமயத்தைச் சார்ந்து இருக்கையில் இவருக்குச் சிவவாக்கியர் என்னும் பெயர் வழங்கியது என்பர்.

திருமழிசையார், திகைப்புற்றுச் சற்று எண்ணி "அன்புடையீர்! நீர் புரியும் செயலின் கருத்தை உரைத்தருள்வீர்!" என்றார். பேயார், "யோகியாரே! யாம் புரியும் இச்செயல் உம்முடைய மனநிலையைக் குறிப்பதேயாகும். அஃது எவ்வாறு எனின், அறுந்து முடியிட்ட கயிறு உமது மனம் சிறிது காலம் ஒரு மதத்தைச் சார்ந்திருந்து, அதை விட்டு மற்றொரு மதத்தைப் பற்றிக்கொள்ளுதலைக் குறிப்பதாகும். இல்லிக்குடம், அதில் விட்ட நீர் தங்காமல் ஒழுகி விடுதல்போல உம்முடைய மனத்தில் எம்மதக்கொள்கையும் நிலைகொள்ளாமல் நீங்கிவிடுதலைக் குறிப்பதாகும். செடிகளைத் தலைகீழாக நட்டமை, எது உலகத்துக்கு முதற்பொருளோ, அதனை அறிந்துகொள்ள முடியாமல் முதற்பொருள் அல்லாதவற்றை எல்லாம் முதற்பொருள் என எண்ணி மயங்கிநிற்கும் உம்முடைய ஞானநிலையைக் குறிப்பதாகும்," என்றருளினர்.

திருமழிசையார், உடனே உள்ளம் நடுங்கப்பெற்றவராய்ப் பேயார் திருவடிகளை வணங்கி நின்று "சுவாமி! அடியேனுக்கு உலகமுதற்பொருள் இன்னது என்பதை உணர்த்தியருளுதல் வேண்டும்," என்று வேண்டினர். பேயார், "அருந்தவச் செல்வரே! நீர் உலகமுதற்பொருள் இன்னதென்பதை உள்ளபடி உணரவேண்டும் என்னும் கருத்துக்கொண்டே பல சமயங்களையும் அடைந்து ஆராயலானீர். ஆயினும், உலகமுதற்பொருள் இன்னதென்பதை இதுகாறும் நீர் உணர்ந்திலீர். மக்கள்,

**கலித்துறை**

**"உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்தவிந் நிலைமை**
**உணர்ந்துணர்ந் துணரினும் இறைநிலை உணர்வரிது"**

**—திருவாய்மொழி, முதற்பத்து. 3ஆம் திருவாய்மொழி, செ. 6.**

இறைவன் அருளாலேதான் இறைநிலை யறிதல்கூடும். இறைவன் அருளாலே யான், அறிந்ததைக் கூறுகின்றேன். மரங்கள் தோன்றுவதற்கு விதை காரணமாயிருப்பது போலச் சத்துவகுணம் உடைய பொருள் எதுவோ, அதுவே உலகத்து எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும் காரணமாகும். ஆகவே, அதுவே முதற்பொருளாகும். கடலினின்று அலைகள் தோன்றிக் கடலிலேயே அடங்கி விடுதல்போல் அப்பொருளினிடத்தினின்றே எல்லாப் பொருள்களும் தோன்றி அப்பொருளிலேயே அடங்கி விடுகின்றன. அம் முதற்பொருளை உணர்ந்து அடைந்து வீடுபெறுதலே ஞானத்தின் பயனாகும். பல சமய நூல்களையும் நன்காய்ந்துள்ள உமக்கு இதினும் அதிகமாகக் கூற வேண்டுவதின்று," என்றருளினர். உடனே திருமழிசையார், பேயாரை நோக்கிச் "சுவாமி! தாங்கள் என்னை வலிய வந்து, ஆட்கொண்டு, இன்னருள் புரிந்தீர்கள். இன்று தங்களை என் அருமைக் குரவராகப் பெறும் பேற்றைப் பெற்றேன். இன்றே நான் உய்யும் நெறியைப் பெற்றவன் ஆனேன். நான் திருமகள் நாதன் திருவடித் தாமரைகளை யடைந்து, பேரின்ப வாழ்க்கையை எய்தும் பெரும்பேற்றை எனக்குத் தாங்கள் அருளுதல் வேண்டும்," என்று வேண்டினர். பேயார், உடனே, அவருக்குத் திருமந்திரத்தை முறைப்படி உபதேசித்தருளினர். திருமழிசையார் பேயாரை வணங்கிப் பின் திருமந்திரத்தை மனகமலரின்கண் பொருந்தக்கொண்டு, யோகத்தில் எழுந்தருளினர்.

## திருமகள்நாதன் திருமழிசையாருக்குச் சேவை அளித்தருளுதல்

பரந்தாமனாகிய இறைவன் மேகத்தினிடையில் மின்னல் ஒளிவிட்டு விளங்குவதுபோலத் திருமகள் திரு

மார்பில் பொருந்தியிருக்க, நீலவானில் நிலவொளி பரவித் தவழ்வதுபோலத் திருமுகத்தில் புன்முறுவலின் ஒளி பரவித் தவழத், தேன் நிரம்பித் ததும்பும் செந்தாமரை மலர்கள்போல அருள் நிரம்பித் ததும்பும் திருக்கண்கள் பொலிந்து விளங்க, எல்லா உலகங்களுக்கும் இறைவன் இப்பெருமானே என்று குறிப்பிப்பதுபோல மணிமுடி சிரத்திற் பொலியப், பரிதிவானவன் கதிர்கள் நீலமலையைச் சூழ்ந்து விளங்குதல் போலத் திருமேனியில் பொன்னுடை இனிது விளங்க, நீலவரையின் இடையில் மேருவரையின் நிழல் படிந்து விளங்குதல்போல அரையில் பீதகஆடை பொலிவுறக், குழவிகள் என்றும் நோக்கற்குரிய தாயின் தனங்களைப்போல அடியவர் என்றும் நோக்கற்குரிய திருவடித் தாமரைகள் இன்பக் காட்சியை இனிது அளிக்கப், பல நிற மணிகளின் ஒளியோடு கூடிய நீலமலை பொன் வரையின்மீது இவர்ந்து வரும் பொலிவே போலக் கருடன்மீது இவர்ந்து சேவையளித்தருளினன். திருமழிசையார் அப் பெருமானைச் சேவித்துத் தம்முடைய மனம் முழுதும் அவ்விறைவன்பால் செல்லக், கண்களினின்று நீர் அருவி யெனப் பெருக, ஆடி ஆடி, அகங்கரைந்து, இசை பாடிப்பாடி, வணங்கிப் பரவசமுற்று, அக் கார்முகில் வண்ணனுடைய எழிலுருவைப் பருகுவார் போலச் சேவித்துக் கொண்டு நின்றனர். உலக அன்னையாகிய திருமகள் அவ்வன்பின் செல்வரை அன்புடன் நோக்கி அருள் புரிந்தனள். எல்லா உயிர்களுக்கும் அப்பனாகிய அச் செந்தாமரைக் கண்ணன் அவ்வடியவரை அன்புடன் நோக்கி, அவருக்கு மதிநலம் அருளி மறைந்துவிட்டனன். அவ்வரும்புலச் செல்வர், அம் முதல்வனுடைய பேரருளை யெண்ணி யெண்ணி, மனம் கரைந்து, போற்றிப் பின்,

**நேரிசை வெண்பா**

**"சாக்கியம்கற் ருேம்சமணம் கற்ருேமச் சங்கரனர்**
**ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்—பாக்கியத்தால்**
**செங்கட் கரியானைச் சேர்ந்தியாந் தீதிலோம்**
**எங்கட் கரியதொன் றில்"**

என்னும் வெண்பாவைப் பாடினர்.

## திருமழிசையாருக்கு முன் முக்கண்ணர் தோன்றுதல்

பிறகு திருமழிசைப்பிரானுர் திருவல்லிக்கேணியை அடைந்து, திருமகள்நாதனைக் கருத்துட்கொண்டு, ஒரு பொய்கையின் கரையில் பல ஆண்டுகள் யோகத்தில் எழுந்தருளியிருந்தனர். அப்போது முக்கண்முதல்வர், பார்வதி தேவியாருடன் இடபத்தில் இவர்ந்து வானத்தில் சென்று கொண்டிருந்தனர். அங்ஙனம் செல்கையில் பார்வதி தேவியார் திருமழிசையாரைப் பார்த்துத், தம் கொழுநராகிய பிறைமுடிச் சென்னியாரை நோக்கி, "அன்புடையீர்! இவர் யாரோ? ஒப்பரிய யோகம் புரிந்துகொண்டிருக்கின்ருர்! இவரை நாம் பார்த்துச் செல்வோம்," என்றனர். தண்புனல் வேணியர், "அன்புடையாய்! இவர், திருமகள்நாதன் திருவருளையன்றி வேருென்றையும் விரும்பாதவர். இவர்பால் நாம் செல்வதால் பயனில்லை," என்று கூறினர். உமாதேவியார், "அங்ஙனம் ஆயினும் இவ்வரிய யோகியாரைக் கண்டு செல்லுதலே தங்கள் திருவருளுக்கு ஏற்றதாகும்," என்றனர். பொன்னுர் மேனியர், அவர் சொற்கு இசைந்து, அத் தேவியாருடன் திருமழிசையாருக்கு முன் வந்தனர். திருமழிசையார், பிறைமுடியாரை நோக்காமல் யோகத்திலேயே இருந்தனர். பிறகு முக்கண்ணர் திருமழிசையாரை நோக்கி, "அருந்தவச் செல்வரே! நாம் உமது அரிய யோகநிலையைக் கண்டு, உமக்குச் சிறந்ததொரு வரத்தை அளிக்கும் பொருட்டு வந்தோம்.

உமக்கு வேண்டிய வரத்தைக் கேட்பீராக!" என்று கூறினர். திருமழிசையார், "முக்கட் செல்வரே! எனக்கு ஒன்றும் வேண்டா," என்றனர். மங்கைபாகர், "அருந்தவச் செல்வரே! நமது வருகை வீணாகாதபடி உமக்கு விருப்ப மான ஒரு வரத்தினைக் கேளும்," என்றனர்.

திருமழிசையார், "அங்ஙனம் ஆயின் அழிவில் இன்பத்ததாகிய வீடுபேற்றை அளித்தருள்வீர்," என்றனர். கைலைவரை முதல்வர், "அருந்தவச் செல்வரே! அஃது என்னால் தரக்கூடியது அன்று; திருமகள்நாதனே அதனை அளித்தற்குரியவன்," என்றனர். திருமழிசையார், "ஆயின் இன்று சாவாரை நாளைச் சாகும்படி பண்ணவல்லீரோ?" என, வரைமகளார் பங்கர், "அது, வினைவயத்ததாம்,'' என்றனர். திருமழிசையார், "அங்ஙனம் ஆயின், இவ்வூசியின் பின்னே நூல் வரும்படி வரம் தந்தருள்வீர்!" என்றனர். திங்கட்கண்ணியர், அதனைக் கேட்டு, மிக்க சினங்கொண்டு, "இவன் இங்ஙனம் நம்மை அவமதித்துக் கூறினன்! ஆதலின், இவனை மலர்க்கணைக் கிழவனைப்போல அநங்கன் ஆகும்படி செய்யக் கடவேன்," என்று பொறியும் புகையும் கிளம்பும்படி தம்முடைய நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டனர். அக் கண்ணினின்று வெந்தீ அழல் சிகை கிளர்ந்து எழுந்து, பரவி, நீர்நிலைகள்யாவும் வற்றிப் பசையறும்படி ஊழித்தீயெனக் கொதித்து, எல்லாப்பொருள்களையும் சுட்டெரிக்கலாயிற்று. திருமழிசைப்பிரானர், அதனைக் கண்டு, தம் யோகவன்மையாலே தம்முடைய வலத்திருவடியின் பெரு விரலில் ஒரு கண்ணை உண்டாக்கி, அதனைத் திறந்துவிட்டனர். அக்கண்களினின்று வெய்ய தீயானது பல்லாயிரம் பரிதிகள் ஒன்றாய்க் கூடினாற்போல வெம்மையும் ஒளியும் கொண்டு, அண்டமுகட்டைப் பிளந்து, அப்பாற்சென்று, பெரும்புறக்கடலையும் வற்றச்

செய்யவல்லதாய் மண்டிக் கிளர்ந்து, எழுந்து, காலகால ருடைய கண்நெருப்பை அடக்கி, அப் பிறைமதிவேணி யரையும் சூழ்ந்து வருத்தி, மண்ணினின்றும் வானினும் பரவிப், பிரமன் உலகினும் சென்று, அங்கு உள்ளாரை யும் தவிக்கச் செய்தது. அதனல் இந்திரன் முதலிய தேவர்கள் அயனுடன் வைகுந்தம் அடைந்து, திருமகள் நாதனை வணங்கி, அதனை விண்ணப்பித்து, "எங்களைப் பாது சாத்து அருள்க!" என்று வேண்டினர்கள். திருமகள்நாதன் அத் தேவர்களை நோக்கித், "தேவர்களே! யாம் புட்கலா வர்த்தம் என்னும் ஊழிக்கால முகிலை ஏவி மழை பொழி வித்து, அந் நெருப்பைத் தணிவிக்கின்றோம்; அஞ்சன் மின்!" என்று, கூறியருளினன். இந்திரன். "எம்பெரு மானே! கருப்புவில்லியையும் முப்புரங்களையும் எரித்துப் பொடியாக்கிய பொருப்பு வில்லியின் நெற்றிக்கண்ணின் நெருப்பை அடக்கி அவரையும் சூழ்ந்து வருத்திக், கிளர்ந்து மேல் எழுந்து வந்துள்ளதாகிய திருமழிசைப் பிரானுடைய யோகவன்மையாலே தோன்றிய அவ் வெய்ய தீயை அம் மேகங்கள் தணிக்க வல்லனவோ?" என்று கேட்டனன். திருமகள்நாதன், "தேவர்கள் தலைவனே! யாம் அம்மேகங்களுக்கு அத்தீயை அணைக்கும் வன்மையினை அளித்து அவற்றை அனுப்புவோம். அஞ் சலை," என்று கூறி அருளி, அவ்வாறே அம் முகில்களுக்கு அத் தீயை அணைத்தற்கு ஏற்ற வன்மையை அளித்து அனுப்பியருளினன். அம் மேகங்களும் வானின்கண் இடம் அற வந்து நிறைந்து, மின்னி, முழங்கி, எல்லா வெப் பங்களும் அடங்கும்படி பெருமழையைச் சொரிந்து, அவ் வெய்ய தீயைத் தணித்தன. அப் பெருமழையினல் எங்கும் பெருவள்ளம் கோத்துக்கொண்டது. திருமழிசைப் பிரானர், அப் பெருவெள்ளத்திற்குச் சிறிதும் அஞ்சாமல்

திருமகள்நாதனைக் கருத்துட்கொண்டு, அசைவு இன்றி யிருந்தனர். வரைமங்கையார் பங்கர், திருமழிசையாரது அவ் வசைவில் நிலையைக் கண்டு, வியப்புற்று, அவரை நோக்கி, "மெய்ஞ்ஞானச் செல்வரே! உம்முடைய பத்தி ஒப்புயர்வு இல்லது ஆகும். ஆதலின், உமக்குப் **பத்தி சாரர்** என்னும் சிறப்புப்பெயர் வழங்குவதாக!" என்று கூறியருளி, வெற்பரையன் செல்வியாருடன் விடையின் மேல் இவர்ந்து வான்வழிச் சென்றனர். திருமழிசையார் அருளிய நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் ஆகிய இவ்விரு நூல்களிலும் இவ் வரலாற்றைக் குறிப் பனவாகிய சில பாசுரங்கள் காணப்படுகின்றன.

திருமழிசைக்கோமானர் மீண்டும் முன்போல யோகத் தில் அமர்ந்திருந்தனர். அப்போது சுத்திகாரன் என்னும் தவசி கொடுவரியின்மீது இவர்ந்து, வானவழியில் சென்று கொண்டிருந்தான். அப்போது அப் புலி திருமழிசைப் பிரானர் யோகம் புரியும் இடத்தின் அருகில் வந்தவுடன் மேலே செல்லாமல் திகைத்து நின்றது. சுத்திகாரன் அதனைக் கண்டு, "இவ்வயமா, இங்ஙனம் திகைத்து நிற்றற்குக் காரணம் யாது? அதனை அறிவோம்," என்று நாற்புறமும் சுற்றிப் பார்த்துப், பின்பு பூமியை நோக்கி, யோகத்தில் அமர்ந்திருக்கும் திருமழிசைப்பிரானரைக் கண்டு வியப் புற்று, அவர் அருகில் வந்து, அவர் சிதைதலான ஆடையை உடுத்திருத்தலை நோக்கி, மனம் ஆற்ருனாய், "என்னே! இவ் வருந்தவச்செல்வர் இங்ஙனம் சிதைந்த சீலையை உடுத் திருக்கின்றனரே! இதனை நாம் கண்டும் வாளா விருப் பதோ," என்று மனங் கரைந்து, அவரை நோக்கிப் "பார்க்கவமுனிவருடைய அருந்தவச்செல்வரே! இக்கிழிந்த சீலையை யெறிந்துவிட்டு, நான் தரும் ஆடையையும் மணி மாலையையும் அணிந்துகொள்வீராக!" என்று கூறிக்

கொடுத்தனன். திருமழிசைப்பிரானர் அதனை வாங்காமல், தாம் வேறோர் ஆணிப்பொற் சட்டையையும், பரிதியென ஒளிவிடும் சிறந்த மணிமாலையையும் தம்முடைய யோக வன்மையால் உண்டாக்கிக் கொடுத்தனர். அவன் திருமழிசைப்பிரானருடைய அருந்தவமாண்பை வியந்து, அவரை வணங்கி விடைபெற்றுச் சென்றனன்.

## கோங்கணச் சித்தன் வருதல்

பிறகு, திருமழிசைப்பிரானர் முன்போல் யோகத்தில் அமர்ந்திருந்தனர். 'கொங்கணச்சித்தன்' என்னும் ஓர் இரசவாதி, திருமழிசைப்பிரானருடைய மேன்மையை அறிந்து, அவர்பால் வந்து, அவரை வணங்கி நின்று, "அருந்தவச்செல்வரே! யான் ஓர் இரசவாதி; இரும்பைப் பொன்னுக்கவல்ல இரசக்குளிகையைத் தருகின்றேன்; ஏற்றருளுவீர்" என்று கூறி, ஓர் இரசக்குளிகையைக் கொடுத்தனன். திருமழிசைப்பிரானர் அதைப் பெற்றுக்கொள்ளாமல், தம்முடைய திருமேனியில் படிந்துள்ள புழுதியைத் திரட்டியெடுத்து, அந்த இரசவாதியை நோக்கி, "அன்புடையீர்! இக்குளிகை திரண்ட கல்லைப் பொன்னுக்க வல்லது, இதனை ஏற்றுக்கொள்வீராக!" என்று கூறிக் கொடுத்தனர். அவன் அதனை ஏற்றுப் பரிசோதித்தனன்; அவ்வாறே அது திரண்ட கல்லைப் பொன்னுக்கிற்று. அச்சித்தன் அதனல் பெருவியப்பெய்தித் திருமழிசைப்பிரானரை நோக்கி, "அடிகாள்! உங்கள் அருந்தவத்தின் மேன்மைக்குமுன் என் வித்தையின் மேன்மை, பரிதியின்முன் மின்னும் மின்மினியின் ஒளிபோன்றதே யாகும். தேவரீருடைய மேன்மையை நன்கு உணராமல், யான் கூறிய மிகைமொழியின் குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும்," என்றுகூறி, அவரை வணங்கி விடைபெற்றுச் சென்றனன்.

## முதல் ஆழ்வார்கள் வருதல்

பிறகு, திருமழிசைப்பிரானுர் அவ்விடத்தினின்றும் சென்று ஒரு மலையின் குகையை யடைந்து, அதன்கண் யோகத்தில் அமர்ந்திருந்தனர். அப்போது பொய்கை யார், பூதத்தார், பேயார், என்னும் முதல் ஆழ்வார்கள் மூவரும் அரங்கன் எம்மானுக்கே காதல் செய்தொண்டர்க ளாய், ஒருநாள் இருந்த இடத்தில் மறுநாள் இராமல், பல இடங்களுக்கும் சென்று வருகையில், ஓரிடத்தில் இவ் வுலகில் காணப்படாததாகிய பேரொளியைக் கண்டு வியப் பெய்தி, "இவ்வொளி எவ்வாறு உண்டாயிற்று? எங்கிருந்து வருகின்றது? என்பனவற்றை ஆராயக்கடவோம்," என்று கொண்டு, அவ் வொளியைத் தொடர்ந்து சென்றார்கள். அவ்வொளி சிறிது தூரத்தில் உள்ளதொரு வரைமுழையில் சென்று மறைந்தது! அவர்கள் மூவரும் அதனைப் பின் தொடர்ந்து சென்று, அக் குகையில் யோகத்தில் அமர்ந் திருக்கும் திருமழிசைப்பிரானுரைக் கண்டு, "இவ் வருந் தவச்செல்வர் யாரோ? அறியோம்," என்று எண்ணி, நெஞ் சென்னும் உட்கண்ணுல் நோக்கி, அவர் பார்க்கவமுனிவ ருடைய அருந்தவச்செல்வர் என்பதனை அறிந்து, அவர் அருகிற் சென்றார்கள். அவர் உடனே எழுந்துவந்து, அவர்களை வணங்கி நின்றார். அம் மூவரும் அவரை நோக்கி, "பார்க்கவரின் அருந்தவப்பேருனவரே! தங்கள் நலம் பொலிந்து விளங்குகின்றதோ?" என்று கேட்டார்கள். திருமழிசையார், "தாமரை, குருக்கத்தி, செவ்வல்லி யென் னும் முப்பூக்களும் உலகில் புகழ் எய்த வந்த மெய்ஞ் ஞானச்செல்வர்களே! உங்கள் அருள் நலம் பெற்றவனுகிய என் நலம் பொலிந்து விளங்குதலில் தடையாவது யாது உளது?" என்றனர். அவர்கள் அன்பின் மிகுதியினுல் கண் களில் நீர்மல்கத் திருமழிசையாழ்வாரைத் தழுவிக்கொண்டு

மகிழ்ந்தனர். பின்பு அந்நால்வரும் திருமகள்நாதனைத் தங்கள் உள்ளக்கமலத்தில் இருத்தி யோகத்தில் அமர்ந்திருந்தார்கள். பின்னர் அந்நால்வரும் மாடமாமயிலையை யடைந்து, பேயாழ்வார் அவதரித்த கிணற்றின் அருகில் யோகத்தில் அமர்ந்திருந்தார்கள். பிறகு ஓடித்திரியும் யோகிகள் ஆகிய பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் முதல் ஆழ்வார்கள் மூவரும் திருமழிசைப் பிரானிடம் விடைபெற்றுக்கொண்டு, அவரை அரிதிற் பிரிந்து சென்றார்கள். திருமழிசைப்பிரானர், "ஆ! இவர்களோடு பழகுந்தோறும் நவில்தொறும் நூல்நயம் போன்ற பேரின்பம் உண்டாய்க்கொண்டிருந்ததே! இவர்கள் பிரிவால் யான் அதனை இழந்தேன். எம்பெருமானே! மீண்டும் இவர்களோடு பழகும் இன்பத்தை எனக்கு அளித்தருளுதல் வேண்டும்," என்று திருமகள் நாதனை வேண்டிக்கொண்டு திருமழிசை என்னும் தமது பதிக்குச் சென்றனர்.

## திருமழிசையார் திருமண் கண்டு எடுத்தல்

திருமழிசைப்பிரானர், திருமழிசைக்குச் சென்று ஓரிடத்தைக் கல்லித் திருமண் இருக்கின்றதா என்று சோதித்துப் பார்த்தனர். அவ்விடத்தில் திருமண் கிடைக்காமையின் வருந்தியிருந்தனர். அன்றிரவு திருவேங்கடநாதன் திருமழிசைப்பிரானருடைய கனவில் எழுந்தருளித் திருமண் உள்ள இடத்தைக் குறிப்பிட்டுக் கூறியருளினன். பிறகு அவ்வாறே, திருமழிசைப்பிரானர் திருவேங்கடநாதன் குறித்த இடத்தைத் தோண்டி, அங்குத் திருமண்ணைக் கண்டெடுத்து, பன்னிரண்டு திருநாமம் அணிந்து கொண்டு,

**நேரிசை வெண்பா**

"என்றும் மறந்தறியேன் என்னெஞ்சத் தேவைத்து
நின்றும் இருந்தும் நெடுமாலை—என்றும்
திருவிருந்த மார்பன் சிரீதரனுக் காளாய்
கருவிருந்த நாள்முதலாக் காப்பு"

(நான்முகன் திருவந்தாதி—92)

என்றுகொண்டு, திருமகள்நாதன் திருவடிகளை மனமலரில் அமைத்துப் போற்றுவாராயினர்.

## திருமழிசைப்பிரானார் திருவெஃகாவுக்குச் செல்லுதலும் அங்கெழுந்தருளியுள்ள பெருமான் இவர் சொன்ன வண்ணம் செய்தலும்

பிறகு, திருமழிசைப்பிரானார். பொய்கையாழ்வார் அவதரித்ததும், திருக்கச்சிப்பதியைச் சார்ந்ததும் ஆகிய திருவெஃகாவுக்குச் சென்று, அப்பதியில் அரவணையில் துயில் அமர்ந்துள்ள இறைவனைச் சேவித்து, அப்பதியில் சிறிதுகாலம் உறைய எண்ணி, அப்பதியை அடைந்து, பாம்பணையிற் பள்ளிகொண்டுள்ள பெருமானைச் சேவித்து, அவனை உள்ளத்துக்கொண்டு, யோகத்தில் அமர்ந்திருந்தார், பக்திசாரர் அங்ஙனம் யோகத்தில் அமர்ந்திருக்கையில். கணிகண்ணர் அவர்பால்வந்து, அவர் திருவடிகளை வணங்கி, அவர் திருவருளைப் பெற்று, அவருக்குச் சீடர் ஆகி, பல தொண்டுகள் செய்துவரலாயினர். அப்போது, முதியாளாகிய ஒருமாது, திருமழிசைப்பிரானருடைய மாட்சியையுணர்ந்து வந்து, நாள்தோறும் அவர் உள்ள இடத்தை அலகுகொண்டு, தூய்மைப்படுத்திக், கோலமிட்டு, அலங்கரித்து வருவாளாயினள். ஒருநாள் திருமழிசைப்பிரானார், திருக்கண்கள் விழித்துப் பார்த்து, அம்முதியாள் செய்யும் தொண்டுகளைக் கண்டு, உகந்த உள்ளத்தராய், அம் முதியாளாகிய நங்கையை நோக்கி, "அன்னாய்! நாம் உனக்கு ஒரு வரம் தருகின்றோம்; நீ விரும்புவதனைக் கூறு,"

என்றருளினர். அம்முதியாள், அவரை வணங்கி, "அடிகாள்! இக் கிழப்பருவம் நீங்கும்படி அருள்புரிதல்வேண்டும்," என்றனள். பக்திசாரர், "அங்ஙனமே ஆகக்கடவது," என்று அருளினர். உடனே அம்மாது, காரன்ன கருங் குழலும், முகிலிடைத் தோன்றும் முழுமதி அன்ன முகமும், பிறையன்ன நுதலும், சூழ்ந்து செவ்வரி பரந்து மதர்த்துக் கருங்குவளைபோல் பொலிந்து விளங்கும் கண்களும், பொன்னன்ன மேனியும், துடியன்ன இடையும் உடையவளாய்த் தேவ மாதர்களும், "இவ்வுரு, பொற் பாவையோ? பொன்தானே?" என்று ஐயுறும்படி இள நங்கையாகிப், பக்திசாரரை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு தன் மனையை அடைந்தாள். அவள் ஒருநாள் தன் மனையின் மாடியில் நின்றுகொண்டிருந்தாள். அப்போது கச்சிப்பதியில் இருந்து அரசுபுரிந்துகொண்டிருந்த பல்லவ அரசன் தன் பட்டத்து யானையின்மீது இவர்ந்து அவ்வழியாக வந்தான். அவன் அந்நங்கையைக் கண்டு காதல்கொண்டு, அவள்பால் தூதர்களை அனுப்பித் தன் வருகையைத் தெரிவித்து, அவள் அனுமதிபெற்று, அவளிடம் சென்று, தன் விழைவை அறிவித்தனன். அந்நங்கையும் அவ்வேந்தன் கருத்திற்கு இசைந்து, அவனுக்கு மனைவியாயினள். அம்மன்னன் அந்நங்கையோடு கூடி இன்புறலாயினன். அவன் வயது முதிர்ந்தவன் ஆதலின், நாளுக்குநாள் உடல் தளர்ந்து, முதுமையின் தன்மை வளர்ந்து வரலாயிற்று. அவ்வேந்தன் அதனை எண்ணி, மனம் தளர்ந்தவனாய், ஒருநாள் அந்நங்கையை நோக்கி, "அன்புடையாய்! நீ முன் முதியவளாய் இருந்தனை! உனக்கு இத்தகைய இளம்பருவம் எவ்வாறு உண்டாயிற்று?" என்று வினவினான். அந்நங்கை, பக்திசாரரால் தனக்கு இளம்பருவம் உண்டான படியைக் கூறிப் பின்,

"அன்புடைய மன்னரே, அப்பெரியாருடைய சீடராகிய கணிகண்ணர் என்பவர் நாள்தோறும் அரண்மனைக்குப் பிச்சை ஏற்றற்காக வருகின்றனர். அவரது துணைகொண்டு, அப்பெரியார் அருளைப் பெறுவீர்களாயின், தங்களுக்கும் இத்தகைய இளம்பருவம் எய்தும்!" என்றனள்.

அம்மன்னன் அதனைக் கேட்டு, மறுநாள் கணிகண்ணருடைய வருகையை எதிர்நோக்கியிருந்து, அவர் வந்ததும் அவரை வணங்கி, அவரை நோக்கி, "அருட்குணச்செல்வரே! யான் தங்கள்பால் ஒன்றை விரும்புகின்றேன். அது தங்கள் குரவரைத் தாங்கள் அழைத்துக்கொண்டு வர வேண்டும் என்பதே!" என்றனன். கணிகண்ணர் "அரசரே! எம்முடைய குரவர், எவர்மனைக்கும் வாரார்," என்றனர். அரசன், அங்ஙனமாயின் "நீரே நம்மீது ஒரு பாட்டுப் பாடுதல்வேண்டும்," என்றனன். கணிகண்ணர், "யான் வாய்கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன்," என்றார். அரசன், "அறிஞரே! அரசர்கள் திருமாலின் அமிசமாய் வருகின்றவர்களாதலின், அரசரைப் பாடுவது திருமாலைப் பாடுவதேயாகும். ஆகையால், நீர் நம்மைப் பாடுவது குற்றமாகாது; நம்மைப் பாடுவீராக," என்று வற்புறுத்திக் கூறினன். கணிகண்ணர் அங்ஙனமாயின், பாடுகின்றேன் என்றுகூறி,

**"ஆடவர்கள் எங்ஙன் அகல்வார் அருள்சுரந்து**
**பாடகமும் ஊரகமும் பாம்பணையும்— நீடியமால்**
**நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ**
**மன்றார் பொழிற்கச்சி மாண்பு"**

என்று பாடினர். அரசன், "நம்மைப் பாடும் என்றால் நீர் திருமாலைப் பாடியது என்?" என்றார். கணிகண்ணர். "வேந்தரே! அரசர்கள் திருமாலின் அமிசமாய் வருகின்றவர்கள். ஆதலின், அரசரைப் பாடுவது திருமாலைப் பாடு

வதேயாம் என்றீர்! அங்ஙனமாயின், திருமாலைப் பாடுவதும் அரசரைப் பாடுவதாம் அன்றோ? ஆதலின், திருமாலைப் பாடினேன்,'' என்றனர். அம்மன்னன், அதனைக் கேட்டுச் சினமுற்று, "இனி நீர் நமது நகரில் இருக்கத்தக்கவர் அல்லீர்! இன்றே நம்முடைய நகரைவிட்டுச் செல்வீராக!'' என்று கடிந்து கூறினன்.

கணிகண்ணர், "வேந்தரே! இன்றே யான் உமது நகரைவிட்டுச் செல்கிறேன்!'' என்று கூறிவிட்டுத், தம்முடைய குரவராகிய திருமழிசைப்பிரானுரை அடைந்து, நிகழ்ந்தவற்றைக்கூறி, அடியேன், இந்நகரை விட்டுச்செல்ல விடையளித்தருளுதல் வேண்டும்,'' என்றனர்.

பக்திசாரர், "அன்பரே! நீர் செல்வீராஞல் பின் யாம் இங்கு இருப்போமோ? எம்பெருமானை எழுப்பிக்கொண்டு வருகின்றோம். அதுவரையிலும் இங்கு இருப்பீர்,'' என்று சொல்லிக் கோயிலுக்குச் சென்று, அரவணைச் செல்வனாகிய திருமகள்நாதனை நோக்கி,

**நேரிசை வெண்பா**

*** " கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''**

என்று விண்ணப்பம் செய்தனர். அப் பெருமானும் தன்னுடைய பைந்நாகப் பாயைச் சுருட்டிக்கொண்டு, திருமழிசைப்பிரானுரைப் பின் தொடர்ந்து செல்லலானான். அப் பெருமான் செல்லவே அப்பதியில் உள்ள மற்றைத் தேவர்களும் அப்பெருமானைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

---

* "பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே!'' என்று இச் சரித்திரக்குறிப்பைக் குமரகுருபரர், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் மூன்றாம் பாட்டில் குறித்துள்ளனர்.

பிறகு திருமழிசைப்பிரானும் திருமகள்நாதனும், மற்றைத் தேவர்களும் கணிகண்ணரோடு அப்பதியை விட்டுச் சென்று, ஓர் இடத்தில் அன்றிரவு தங்கினர்கள். அதனல், கச்சிப்பதி முழுதும், இராமனைப் பிரிந்தபோது அயோத்தி நகரம் பொலிவற்றிருந்ததுபோல், பொலிவற்று இருள் சூழ்ந்துகொள்ளப் பெற்றது. மரம், செடி, கொடி, புல், பூண்டுகளும் வாடிக்கிடப்பனவாயின. அரசன் தன் நகரம் பொலிவற்றிருத்தலை நோக்கி, மிக்க கவலை கொண்டு, அமைச்சர்களை வருவித்து, அவர்களை நோக்கி, "அறிஞர்களே! இந்நகரம் இங்ஙனம் பொலிவற்றிருத்தற்குக் காரணம் யாது? அதனை யாய்ந்து, அறிந்து கூறுங்கள்," என்று உரைத்தனன். அமைச்சர்கள் அதன் காரணத்தை அறிந்துகொண்டு வரும்படி ஒற்றர்களை அனுப்பினர்கள். ஒற்றர்கள் சென்று, கணிகண்ணருடன் திருமழிசைப் பிரானும், திருவெஃகாவில் அரவணையில் அறிதுயில்கொள் ளும் இறைவனும், மற்றைத் தேவர்களும் கச்சிப்பதியை விட்டுச் சென்றமையை அறிந்துவந்து கூறினர்கள். அமைச்சர்கள் அதனை அரசனுக்குச் சொல்ல, அரசன் மறு நாள் அமைச்சர்கள் முதலியவருடன் கணிகண்ணரைத் தேடிச் சென்று, அவரைக் கண்டு வணங்கி, "மெய்ஞ்ஞானச் செல்வரே! யான் தங்கள் மேன்மையை அறியாமையால் கூறிய கொடுமொழியைப் பொறுத்தருளிக் கச்சிப்பதிக்கு எழுந்தருள்க!" என்று வேண்டினன். கணிகண்ணர், திருமழிசைப்பிரானரை வேண்ட, அவர் திருமகள்நாதனை நோக்கி,

**"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்கவேண்டும்—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்படுத்துக் கொள்"**

என்று விண்ணப்பம் செய்யத் திருமகள் நாதனும் கணி கண்ணருடனும், பக்திசாரருடனும், மற்றைத் தேவர்களுட னும் மீண்டும் வந்து திருவெஃகாவில் தன் பைந்நாகப்பாயை விரித்துப் பள்ளிகொண்டருளினன். அன்றுமுதல் அப் பெருமானுக்குச் **'சொன்னவண்ணம் செய்த பெருமாள்'** என்னும் பெயர் வழங்குவதாயிற்று. அம்முதல்வன் கணி கண்ணர் முதலியவர்களுடன் சென்று ஓர் இரவு தங்கிய இடத்திற்கு **ஓரிரவிருக்கை** என்பது பெயராயிற்று. மற் றைத் தேவர்களும் தத்தம் இடம் உற்றனர். மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலியனவும் செழுமையுற்று விளங் கின. நகரமுற்றும் முன்போல் பொலிவுற்று விளங்கியது. அரசன் முதலியவர்களும் மகிழ்வெய்தினர்கள். பின்பு, திருமழிசைப்பிரானர் திருமகள்நாதனை உள்ளத்தில் கொண்டு, யோகத்தில் எழுந்தருளியிருந்தனர்.

### பெரும்புலியூர் மறையவர்கள், முன்னே திருமழிசைப் பிரானர்பால் அவமதிப்புக்கோண்டு, பின் அவர் மாண்பை அறிந்து வணங்கிப் போற்றுதல்

திருமழிசைப் பிரானர், பின்பு "சாலி வேலி தண்வயற் றடங்கி டங்கு பூம்பொழில், கோல மாட நீடு தண்கு டந்தை யின்கண்" உறைதல் வேண்டும் எனத் திருவுளம் கொண்டு, 'விருப்புடைய வெஃகாவே சேர்ந்த பெருமானை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, கணிகண்ணருடன் புறப் பட்டுப் போகையில், இடையில் உள்ள பெரும்புலியூர் என் னும் ஊரிலே ஒரு வீட்டின் திண்ணையில் தாம் நடந்து வந்த தனல் உண்டான அயர்ச்சி நீங்க வீற்றிருந்தனர். அத் திண்ணையில் இருந்து வேதம் ஓதிக்கொண்டிருந்த மறை யவர்கள் இவரைக் கண்டு, "நான்காம் வருணத்தினனகிய இவன் கேட்க நாம் வேதம் ஓதுதல் ஆகாது," என்று

எண்ணி, வேதம் ஓதுதலை நிறுத்திவிட்டார்கள். அதனால் பக்திசாரர் அவர்கள் கருத்தை அறிந்து, "இவர்கள் வேதம் ஓதுதற்கு இடையூறாக நாம் இங்கு இருத்தல் ஆகாது," என்றெண்ணி, அத்திண்ணையை விட்டிறங்கினர். மறையவர்கள் உடனே வேதம் ஓதத் தொடங்கி, விட்ட வாக்கியம் தெரியாமல் திகைக்கலானார்கள். பக்திசாரர் அதனை அறிந்து, அங்குக் கீழே சிந்திக் கிடந்த நெற்களுள் ஒரு கரிய நெல்லை யெடுத்து, அவர்கள் பார்க்கும்படி *உகிரால் அதனை யிடந்து, அதன் குறிப்பால் அவர்கள் விட்ட வாக்கியத்தை அவர்களுக்கு உணர்த்தியருளினர். அம் மறையவர்கள் உடனே விரைந்து எழுந்து வந்து, அவர்களுடைய திருவடிகளில் வணங்கி, "மெய்ஞ்ஞானச் செல்வம் வாய்ந்த பெரியீர்! அடியோங்கள் தங்கள் மேன்மையை அறியாமையால் செய்த பிழையைப் பொறுத்தருள்க," என்று வேண்டினார்கள்.

பக்திசாரரும் அவர்களுக்குப் பல இன்மொழிகளைக் கூறி, விடைபெற்றுக்கொண்டு சென்றனர்.

## திருமழிசைப்பிரானார் தம்மையிகழ்ந்த வேள்விச்சடங்கர் செருக்கடக்கல்

பக்திசாரர், அப் பதியில் பிச்சையின் பொருட்டுப் பல தெருக்களுக்கும் செல்லலாயினர். அப்பதியின் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பக்திசாரர் அவ்வாறு செல்லுந்தோறும் அவர் சென்றுள்ள திசையின் பக்கமாகத் தன் திருமுகத்தைத் திருப்பியருளுவானான். அத்திருக்கோயிலின் அர்ச்சகராகிய நம்பியார், அச்செயலைக் கண்டு, அளவிடற்கரிய வியப்படைந்து, அதனைச் சில மறையவர்களுக்குக் காட்டினர். அம்மறையவர்

---

*அவ்வாக்கியம் "கிருஷ்ணாநாம் வ்ரீஹீணும் நகநிர்ப்பிந்நம்" என்பது என்பர்.

களும் சொல்லற்கரிய வியப்பெய்தி, அப்போது அப்பதியில் நடந்துகொண்டிருந்த வேள்விக்குத் தலைவராகிய பெரும் புலியூர் அடிகள் என்னும் பெரியாரிடம் சென்று, அவ் வற்புதச் செய்கையைக் கூறினார்கள். அவர், "மெய்யடியார்கள் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது, காணும் கண்பயனவதே," என்னும் கருத்தினராதலின், யாகசாலையினின்றும் விரைந்து சென்று, திருமழிசைப்பிரானாரைக் கண்டு, அவர் திருவடிகளில் தமது முடிபட வணங்கிப்போற்றி, "யாகசாலைக்கு எழுந்தருளுதல் வேண்டும்," என்று விண்ணப்பம் செய்து, அழைத்துச்சென்று, சிறந்ததொரு பீடத்தில் வீற்றிருக்கச்செய்து, பலவகையாக உபசரித்தனர். அந்த யாகத்தலைவர் யாகத்திற் செய்யும் அக்கிர பூசையை (முதற் பூசை) அவருக்குச் செய்தனர். வேள்விச்சடங்கர்கள் அதனைக் கண்டு, தருமர் தாம் புரிந்த வேள்வியில் கண்ணனுக்கு அக்கிரபூசை செய்தபோழ்து, சிசுபாலன், கண்ணனை யிழித்துப் பேசியதுபோலப் பக்திசாரரைப் பொறுப்பரியனவற்றைப் பேசி யிழித்துக் கூறினார்கள். யாகத்தலைவர், அதனைக் கண்டு மனம் பதறி, உடல் நடுங்கிக் கண்ணீர் பெருக்கினர். திருமழிசைப்பிரானார் அவற்றை யெல்லாம் நோக்கி, "இனி நாம் வாளா இருத்தல் ஆகாது; இச் சடங்கர்களுக்கு நல்லறிவு உண்டாகும்படி செய்தல் வேண்டும்," என்று திருவுள்ளம் கொண்டு,

"அக்க ரங்க ளக்க ரங்கள் என்று மாவ தென்கொலோ
இக்கு றும்பை நீக்கி என்னை ஈச னாக்க வல்லையேல்
சக்க ரங்கொள் கைய னேச டங்கர் வாய டங்கிட
உட்கி டந்த வண்ண மேபு றம்பொ சிந்து காட்டிடே"

என்று பாடியருளினர். திருமகள்நாதன் தனையே வணங்கித் தொழுவார்க்குத் தன்னை ஒக்க அருள் செய்பவன் ஆதலின், உடனே பாற்கடலில் அரவமாகிய அமளியில்

மலர்மகளும் மற்றை நிலமகளும் தன் மலரடிகளை வருடக் கண்வளர்ந்தருளும் படியை அனைவரும் காணும்படி பக்தி சாரர் திருமேனியில் காட்டியருளினன். பக்திசாரரும் அச் சாரூப நிலையைப் பெற்று யாவரும் காணும்படி யெழுந் தருளியிருந்தனர். சடங்கர்கள் பக்திசாரர் திருமேனியில் விளங்கும் திருமகள் நாதனுடைய பேரொளியான வடிவி னைக் கண்டு, தங்கள் மனத்துக்கொண்ட செருக்கு, சூரிய னைக் கண்ட பனிபோல் ஒழிய, விரைந்து எழுந்து சென்று, திருமழிசைப்பிரானாருடைய திருவடிகளை வணங்கி, "அருட்குணப் பெரியீர்! அடியோங்கள் அறியாமையால், தங்களைப் பலவாறு இழித்துப் பேசினேம். அடியோங்க ளது இப் பிழையைப் பொறுத்தருளுதல் அருட்குணச் செல்வராகிய தங்களுக்கு ஏற்றதாகும். ஈயானது தலை மீது உட்கார்ந்தால் அதற்காக அதன் மீது சீற்றம் கொள்வார் உண்டோ? தங்களுக்குமுன் யாங்கள் ஈயைப் போன்றவர் களே. ஆதலின், எங்கள் பிழையைப் **பொருட்படுத்தாமல்** அருள்புரிதல் மெய்ஞ்ஞானச்செல்வம் வாய்ந்த தங்கள் பெருந்தகைமைக்கு ஏற்ற இயல்பேயாகும்," என்று கூறி வேண்டினர்கள். பக்திசாரர் அவர்களுக்குப் பல நலம்தரு மொழிகளைக் கூறி, வேள்வித்தலைவராகிய பெரும்புலியூர் அடிகளிடத்தும், அவர்களிடத்தும், விடைபெற்றுக் கொண்டு திருக்குடந்தையை அடைந்தருளினர்.

## பக்திசாரர் தாம் எழுதிய நூல்களைத் திருக்குடந்தையிலே காவிரியில் விடுத்தலும், அவற்றுள் இரண்டு நீரின் எதிர் ஏறிவருதலும்

அங்ஙனம் அடைந்தவர் கோயிலுக்குச் சென்று, அக் கோயிலின்கண் எழுந்தருளியுள்ள ஆராஅமுதனைச் சேவித் துப், பின் தாம் அதுவரையில் பாடிய பாசுரங்களை யெல் லாம் காவிரி நீரிலே விட்டனர். அவற்றுள், நூற்றிருபது

பாசுரங்களையுடைய திருச்சந்த விருத்தமும் தொண்ணூறு பாசுரங்களையுடைய நான்முகன் திருவந்தாதியும் ஆகிய இவ்விரு நூல்களும் நீரோட்டத்திற்கு எதிராய் வந்து, பக்திசாரர் அருகு உற்றன. உடனே, அவர் அவ் விரு நூல்களையும் எடுத்துக்கொண்டு, மீண்டும் கோயிலுக்குச் சென்று, ஆராவமுதனைச் சேவித்துப் பிறகு அவ்விரு நூல்களையும் உலகுய்ய உபகரித்தருளி, அப்பதியிற் பல ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்திருந்து உலகை வாழ்வித்தருளினர்.

இவர் பாடியருளிய பாசுரங்களில் தத்துவப்பொருள்களை உணர்த்துவன பல; திருமகள்நாதன்பால் அன்பைத் தோற்றுவிப்பன பல. சொற்பொருட் பின்வருநிலை அணியும் சொற்பின் வருநிலை அணியும் அமைந்தன சில. இயற்கை வருணனைகளைத் தம்பால் கொண்டன பல. இவருடைய பாசுரங்கள் யாவும் பொருட்செறிவும், மிடுக்கும் இன்பமும் வாய்ந்தனவாய் விளங்குகின்றன. அவற்றுட் சிலவற்றை அடியிற் காண்க:

" தன்னு ளேதி ரைத்தெ ழுந்த ரங்க வெண்த டங்கடல்
தன்னு ளேதி ரைத்தெ ழுந்த டங்கு கின்ற தன்மைபோல்
நின்னு ளேபி றந்தி றந்து நிற்ப வுந்தி ரிபவும்
நின்னு ளேய டங்கு கின்ற நீர்மை நின்கண் நின்றதே."

(திருச்சந்த விருத்தம்—பா. 10.)

" சொல்லி னுல்தொ டர்ச்சி நீசொ லப்ப டும்பொ ருளுநீ
சொல்லி னுல்சொ லப்ப டாது தோன்று கின்ற சோதிநீ
சொல்லி னுல்ப டைக்க நீப டைக்க வந்து தோன்றினுர்
சொல்லி னுல்சு ருங்க நின்கு ணங்கள் சொல்ல வல்லரே."

(திருச்ச—பா. 11.)

" இன்று சாதல் நின்று சாதல் அன்றி யாரும் வையகத்
தோன்றி நின்று வாழ்தல் இன்மை கண்டும் நீசர் என்கொ [லோ
அன்று பார ளந்த பாத போதை யுன்னி வானின்மேல்
சென்று சென்று தேவ ராயி ருக்கி லாத வண்ணமே."

(திருச்ச—66.)

## திருமழிசையார் அவதரித்த மாதமும் நாளும்

### நேரிசை வெண்பா

"தையில் மகமின்று தாரணியீர் ஏற்றமிந்தத்
தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன்—துய்யமதி
பெற்ற மழிசைப் பிரான்பிறந்த நாளென்று
நற்றவர்கள் கொண்டாடும் நாள்."

## வாழி திருநாமம்

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

"அன்புடன் அந்தாதி தொண்ணூற்ருே டாறுரைத்தான்* வாழியே
அழகாரும் திருமழிசை அமர்ந்தபிரான் வாழியே
இன்பமிகு தையில்மகத் திங்குதித்தான் வாழியே
எழிற்சந்த விருத்தம்நூற் றிருபதீந்தான் வாழியே
முன்புகழ்சேர்† மழிசைவந்த முனிவர்கோன் வாழியே
முழுப்பொன்னிப் பெருக்கெதிர்செய் முதிர்கவியோன் [வாழியே
நன்புவியில் நவிலாண்டு‡ பலவுறைந்தான் வாழியே
நங்கள்பத்தி சாரனிரு நற்பதங்கள் வாழியே."

---

*ஈண்டு, 'தொண்ணூற் ருறுரைத்தான்' என்பதும் பாடம். இப்பாடம்கொள்ளின், ஓசையும்விருத்த இலக்கணமும் சிதையும்.

† ஈண்டு, 'முன்புகதில் வந்துதித்த' என்றும்,

‡ ஈண்டு, 'காலாயிரத் தெழுநூற்றுன்' என்றும் பாடங்கள் உள. இப்பாடங்கள் ஆய்வாருக்கு ஏலாதனவாம். அன்றியும், 3ஆம் எண்ணின்கண் உள்ள பாடம், பொருட்பொருத்தம் இல்லாததாயும், இலக்கணம் சிதைந்ததாயும் இருக்கின்றது; நன்கு ஆய்க.

# ௩. தொண்டரடிப்பொடியார்

**நேரிசை வெண்பா**

**மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயற் றென்னரங்கத் தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.**

கொண்டல் குமுறும் குடகிழிந்து, மதகு உந்தி அகில் கொண்டு, நுரை மண்டி, வரும் நீரை* உடைய காவிரியாறு பாயப்பெறுதலால், வளமிக்குத் தமிழகத்தின் செல்வக் களஞ்சியமாய் விளங்கும் சோழநாட்டில் உள்ள ஊர்களுள் மண்டங்குடி என்பதும் ஒன்றாகும். அவ்வூரிலே இருக்கு வேதியர்களும், எசுர்வேதியர்களும், சாம வேதியர்களும் ஆகிய மறையவர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள், முன்குடுமிச்சோழியப் பார்ப்பனர் ஒருவர் இருந்தார். அவர் மற்றை மறையவர்கள் யாவரும் வந்து அடி வணங்கத் தக்க கலையறிவும் ஒழுக்கமும் அமையப் பெற்றவர்; திருமகள்நாதன்பால் பேரன்புடையவர். அவர் பெயர் வேதவிசாரதர் என்பது. அவருக்குத் திருமகள், நாதன் திருவருளால் ஓர் அருமருந்தன்ன மைந்தர் மார்கழித் திங்களில் கேட்டை நாளில் அவதரித்தனர். இவரைத் திருமகள் நாதனுடைய வனமாலையின் அமிசமானவர் என்பர்.

பெற்றோர்கள் பத்துநாளும் கடந்த இரண்டாம் நாள் செய்வன செய்து, அம்மைந்தருக்கு விப்பிரநாராயணர் என்று பெயரிட்டார்கள். இவர் தக்க பருவத்தில் கல்வி கற்கத் தொடங்கி தென் மொழியினும் வடமொழியினும், கற்க வேண்டிய நூற்களை யெல்லாம் ஐயம் திரிபறக் கற்

---

* திருவரங்கக் கலம்பகம், பா—6.

றுணர்ந்து, கலையறிவு நிரம்பப் பெற்றுக், கலை நிரம்பிய முழுமதி யெனப் பொலிவுற்று விளங்கினர். இங்ஙனம் சிறந்து விளங்கிய விப்பிரநாராயணர், உலக வாழ்க்கையின் நிலை இன்மையை உட்கொண்டு,

**கலிவிருத்தம்**

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்
(பெருமாள் திருமொழி, 3ஆம் திருமொழி, பா. 1.)

எனவும்,

மார னார்வரி வெஞ்சிலைக் காட்செய்யும்
பாரி னாரொடும் கூடுவ தில்லையான்
(ஷை திரு. பா. 3.)

எனவும்,

உண்டி யேயுடை யேயுகந் தோடுமிம்
மண்ட லத்தொடும் கூடுவ தில்லையான்
(ஷை திரு. பா. 4)

எனவும் உறுதிகொண்டு, கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபாட்டுப் பாம்பணையிலே பள்ளிகொண்டருளிய திருவரங்கச் செல்வனுக்கே தொண்டுபுரியும் மனம் உடையவராய்த், திருவரங்கத்திற் சென்று, ஒரு நந்தவனம் அமைத்து, அதில் மா, பலா, கமுகு, நெல்லி, நாவல், எலுமிச்சை, மகிழ் முதலிய மரங்களையும்; பலவகையாகிய பூச்செடி கொடிகளையும் செழிப்புற வமைத்து வளர்த்தார். அதன்கண் உள்ள அம்மரம், செடி, கொடிகளுக்கு இடையில் துளவச் செடி எங்கும் காணப்படும். அச்சோலையில் உள்ள பொய்கைகளிலும், நீரோடைகளிலும் செந்தாமரை, வெண்டாமரை, கருங்குவளை, அல்லி முதலிய மலர்கள் மலர்ந்து பொலியும். இளமென் மாதர்களின்

கரிய கூந்தலுக்கு மற்றை யிடத்துள்ள இருளை உவமை கூறுதல் பொருந்தாது; இச்சோலையில் உள்ள இருளே உவமை கூறுதற்கு உரியது ஆம் என்று புலவர்கள் கூறும் படி அச்சோலையில் இருள் அடர்ந்து இருக்கும். அச் சோலையில் உள்ள மலர்களில் வண்டுகள் விப்பிரநாராயண ருடை புகழைப் பாடுவனபோல இனிமையாக முரலும். அச் சோலையில் உள்ள மரங்களின் உச்சியிலிருந்து பறவை கள் இனிமையாகப் பாடுதல், வானவர்களை நோக்கித் "தேவர்களே! உங்கள் நாட்டில் உள்ள சோலையின் மலர்கள் எங்கள் விப்பிரநாராயணர் அமைத்த சோலையின் மலர் களைப்போலத் திருவரங்கநாதன் உவப்புக்கு உரியன அல்ல. ஆதலின், உங்கள் நாட்டுச் சோலை எங்கள் விப்பிர நாராயணர் அமைத்த சோலைக்கு ஒப்பாகாது," என்று கூறுவன போன்றிருக்கும். அச் சோலையின் மரங்களில் உள்ள கிள்ளைகள் அப்பதியில் உள்ளார் எப்பொழுதும் பாடுவனவாகிய 'அருமறை துணிந்த பொருள் முடிவை இன்சொல் அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பி யருளிய' சடகோபர் இன்னிசைப் பாசுரங்களைப் பாடும். பிரமனுக்கு ஓர் அன்னமாய் மறையை உரைத்தருளிய திரு மகள்நாதன் அப்பாசுரங்களைக் கேட்கும் பொருட்டுப் பல அன்னங்களின் வடிவுகொண்டு, அச்சோலையில் தங்கியிருத் தல் போலப் பல அன்னப்பறவைகள் அச்சோலையின் பொய்கைகளிலும் ஓடைகளிலும் பூத்திருக்கும் தாமரை மலர்களில் தங்கியிருக்கும். பொதிகைமலையில் தமிழுடன் பழகிய தென்றற் காற்று அச்சோலையில் கிள்ளைகள் பாடும் சடகோபருடைய பாசுரங்களைக் கேட்டு மேன்மேலும் அவற்றைக் கேட்க வேண்டும் என்னும் விழைவால் அதிலேயே தங்கிவிட்டது போலும் என்று கூறும்படி எப் பொழுதும் அதில் மென்கால் வீசிக்கொண்டே யிருக்கும்.

## விப்பிரநாராயணரைத் தேவதேவி என்னும் பொதுமடந்தை தன்வயப்படுத்தல்

விப்பிரநாராயணர் அச்சோலையில் உள்ள மலர்களைக் கொண்டு மாலைகள் கட்டிப், பாம்பணைப் பள்ளியானுக்குச் சேர்த்துவருவாராயினர். அப்போது திருக்கரம்பனூரிலே கண்டோர் மனம் கவரும் இளமையும் வனப்பும் வாய்ந்தவர்களாகிய இரு பொதுமாதர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் உடன்பிறந்தவர்கள். அவர்களுள் மூத்தவள் பெயர் தேவி என்பது; இளையவள் பெயர் தேவதேவி என்பது. அவர்கள் ஆடல் பாடல்களில் ஒப்புயர்வு அற்றவர்கள். அவர்கள் இருவரும் அப்போதிருந்த சோழநாட்டு மன்னனைக் காணத் தங்கள் தோழியர்களோடு சென்றார்கள். அரசனும் அவர்களை வரவேற்று, உபசரித்தும், பாட்டுக்களைக் கேட்க விழைவுற்று, அவையமைத்து, அவர்களைப் பாடச் சொன்னான். அவர்களும், அரசனும் அவையின்கண் உள்ள மற்றையோரும் களிப்பென்னும் கடலில் ஆழும்படி

### தரவு கொச்சகம்

ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்
நீரெல்லாம் தேறியோர் நீளிரவாய் நீண்டதால்
பாரெல்லால் உண்டநம் பாம்பணையான் வாரானால்
ஆரெல்லே வல்வினையேன் ஆவிகாப் பாரினியே
(திருவாய்—5ஆம் பத்து—4ஆம் திருவாய்மொழி, 1.)

ஆவிகாப் பாரினியார் ஆழ்கடல்மண் விண்மூடி
மாவிகார மாயோர் வல்லிரவாய் நீண்டதால்
காவிசேர் வண்ணனென் கண்ணனும் வாரானால்
பாவியேன் நெஞ்சமே நீயும்பாங் கல்லையே ( ,, 2.)

என ஊனும் உணர்வும் உயிரும் உருக்குவனவான செஞ்சொற் பாசுரங்களைப் பாடினார்கள். அவையின்கண் இருந்த

அரசன் முதலிய அனைவருடைய கண்களினின்றும் நீர் தாரை தாரையாகப் பெருகுவதாயிற்று. அரசன் மகிழ்ச்சி மிக்கானாய், அவர்களுக்குப் பொன், மணி முதலியவற்றை அளவின்றி வழங்கி உபசரித்தனன். அவ்விருவரும் உவகை மிக்கவர்களாய் அரசனை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு, தங்கள் ஊருக்குச் செல்லப் புறப்பட்டார்கள். அவர்கள் அங்ஙனம் செல்கையில், தேவதேவி தன் தமக்கையாகிய தேவியை நோக்கி, "அக்காள்,

*'நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்'

சேவிக்க என் மனம் விரும்புகின்றது. ஆதலின் திருவரங்கத்திற்குச் சென்று, அப் பெருமானைச் சேவித்துக் கொண்டு, நம்மூருக்குச் செல்வோம்," என்றனள். மூத்தாளாகிய தேவி, "அன்புடையாய்! என் கருத்தும் அதுவே; வருக; செல்வோம்" என்றனள். பின் இருவரும் தாங்கள் கருதியபடி திருவரங்கத்தை அடைந்து, விப்பிரநாராயணராலே அமைக்கப்பட்டுள்ள சோலையை நோக்கி வியப்புற்றார்கள்; பிறகு, அதன் அருகில் வந்தார்கள். அப்போது தேவதேவி தன் தமக்கையாகிய தேவியை நோக்கி, "அக்காள்! வானவர்கோனுக்கு மனம் கவரும் எழில்மிக்க சோலை யுண்டு என நூல்களால் அறிந்ததேயன்றி எவரும் கண்டதில்லை. அத்தேவர் கோனும் இதனைக் காண்பானானால், வானகச்சோலையை விட்டு, இச்

*சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், 11-காடுகாண்காதை அடி 35 முதல் 40 வரை.

சோலையில் வந்து தங்கவே விழைவான் என்றால், இதனை நம்போன்றார் விரும்புதல் அருமையோ? இதனை இங்ஙனம் அமைத்தவர் யாரோ? அவர் யாருக்காக அமைத்தனரோ? இதனை அமைத்தவரது அறிவின் திறம் மிகச் சிறந்ததாகும். இதன்கண் வந்து தங்கியிருப்பவர், ஒப்புயர்வற்ற இன்பத்தை நுகர்வர்,'' என்றாள். தேவி, "அன்புடையாய்! இதனை அமைத்தவர் விப்பிரநாராயணர் என்னும் திருப்பெயரை உடைய மறையவர் தலைவர். அவர் இதனைத் தேவதேவனாகிய திருவரங்கநாதனுக்குத் திருமாலை கட்டிச் சமர்ப்பிக்கும்பொருட்டே அமைத்தனர்,'' என்றனள். இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், விப்பிரநாராயணர் இவர்கள் இடத்தின் அருகிலுள்ள மரங்களுக்கும் செடி கொடிகளுக்கும் களைகளைக் களைந்து நீர் பாய்ச்சுதற்காக வந்தனர். தேவதேவி அவரது எழிலால் மனம் கவரப்பட்டுத், தன்னை அவர் நோக்கும்படி செய்தற் பொருட்டு, காதல் விளைக்கும் இன்மொழிகள் பலவற்றைத் தன்னுடைய தமக்கையிடம் கூறலானாள். அங்ஙனம் அவள் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தும் விப்பிரநாராயணர் அவளைச் சிறிதும் திரும்பிப் பாராமல் தாம் புரியும் தொண்டிலேயே தமது கருத்தைச் செலுத்திக்கொண்டிருந்தனர்.

தேவதேவி, அதனைக் கண்டு, "அக்காள்! இவர் என்ன அலிப்பிறப்பினரோ? உன்மத்தரோ? நாம் இதுகாறும் காதல் விளைக்கும் பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந்தும் இவர் நம்மைத் திரும்பியும் பார்த்திலரே?'' என்றாள்.

தேவி, "அன்புள்ள தங்கையே, இவர் அலிப்பிறப்பினரும் அல்லர். உன்மத்தரும் அல்லர். உலகப்பற்றினை யொழித்து, உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும்

வெற்றிலேயும் எல்லாம் பாம்பணைப் பள்ளி மேய பரமனே எனக் கொண்டு, அப்பெருமானுக்குத் தொண்டு புரிவதி லேயே தமது மனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பவர் ஆதலின், அவருக்கு நாம் பேசியவற்றில் ஒன்றும் கேட் டிராது,'' என்றனள்.

தேவதேவி, "அக்காள்! நீ சொல்வது விந்தையாயிருக் கின்றது! என்னதான் உலக இன்பங்களை வெறுத்தவர்க ளாய் இருப்பினும இளமையும் எழிலும் வாய்ந்த பெண் களின் தேனினும் இனிய சொற்களைக் கேட்டு அவர் தம் கண்வலேயில் அகப்படாமல் இருக்கக்கூடியவர்கள் எங்கும் இரார்கள். விசுவாமித்திரர் முதலிய சிறந்த முனிவர்களும் பெண்களின் கண்வலேயில் அகப்பட்டுத் தங்கள் தவத்தை யிழந்த வரலாற்றை நாம் நூல்களில் படித்திருக்கின் ேறாமே! ஆதலின், நீ சொல்வதனை நான் சிறிதும நம்பேன்,'' என்ருள்.

தேவி, "அன்புடைய தங்கையே! நீ நம் பெருமாளுகிய திருமகள்நாதனுடைய அடியவர்களின் மேன்மையை அறியாமையின் இவ்வாறு கூறுகின்றனே. அவர்கள்,

*'இடரான ஆக்கை இருக்க முயலார்
மடவார் மயக்கின் மயங்கார்—கடவுளர்க்கு
நாதனூர் ஆதரியார் நானென தென்னூர்."

அவர்களுடைய மேன்மை சொல்லுதற்கரிது. அவர்கள் குணமென்னும் குன்றேறி நிற்பவர்கள். அவர்களை உல கத்து மற்றவர்களோ டொக்க வைத்து எண்ணிப் பேசுதல் தகுதி அன்று,'' என்றனள். தேவதேவி, "அக்காள்! நான் ஒரு மதிக்குள், இவரை என்வயப்படுத்துகின்றேன் பார்" என்றனள். அதனைக் கேட்ட தேவி, புன்னகை புரிந்து,

*நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, செ. 9.

"அன்புடையாய்! நீ அவ்வாறு ஒருமாதத்திற்குள் இவரை உன்வயப்படுத்திவிடுவையாஞல் நான் உனக்கு ஆறுமாதம் வெள்ளாட்டியாய்த் தொண்டு புரிவேன்," என்றனள்.

தேவதேவி, "நான் இவரை ஒருமதிக்குள் என் வயப்படுத்தாவிடின், உனக்கு ஆறுமாதம் வெள்ளாட்டியாய்ப் பணி புரிவேன்," என்று கூறித் தன் ஆடை அணிகளைக் களைந்து தன் தமக்கையிடம் கொடுத்துவிட்டு, ஒரு பழைய ஆடையை உடுத்துக்கொண்டு, தன் தமக்கையை நோக்கி, "அக்காள்! நீ இவற்றையும் அரசர் அளித்தவற்றையும் கொண்டு நம் மனைக்குச் செல்க. நான் கூடிய விரைவில் வந்து உன்னைக் காண்கின்றேன்," என்றனள்.

தேவி, "அன்புடையாய்! நினக்கு நலம் உண்டாகுக. நீ சாதிக்கத் துணிந்த செயல் மிக்க அருமையுடையது," என்று கூறித் தேவதேவியின்பால் விடை பெற்றுக் கொண்டு சென்ருள். பிறகு தேவதேவி விப்பிரநாராயண ரிடம் சென்று, அவரைக் கண்டு, அடிபணிந்து "மெய்ஞ் ஞானச் செல்வரே! அருந்தவமுதல்வரே! அன்புறுமுளத் தரே! அருள்மனப்பெரியீர்! அடியாளைக் காத்தருளல் வேண்டும். அடியேன் முற்பிறப்பிற் செய்த தீவினையால் ஒருபரத்தையின் மகளாய்ப் பிறந்தேன். அப்பரத்தையர் செய்யும் செயல்கள் எனக்கு நாள்தோறும் நாணத்தையும் வெறுப்பையும் வளர்த்துவந்தன; ஆதலின், அவர்களுடன் உறைவதை நரகத்தின் உறையுள் எனவே என் மனம் கொள்வதாயிற்று; ஆதலால், இவர்களை விட்டு நீங்கித் தக்காராகிய பெரியோரை அடைந்து, நாம் உய்தற்குரிய நெறியைப் பெறுதல்வேண்டும்,' என்று எண்ணினேன். தேவரீரது மேன்மையைப் பலரால் முன்னரே கேட்டு

அறிந்திருந்தேன்; ஆதலின், தங்கள் திருவடித்தாமரைகளை என் உயிருக்கு அரண் எனக்கொண்டு வந்தடைந்தேன். அடியேனை உய்வித்தருளுதல், எல்லா உயிர்கள்பாலும் அன்பு நீங்காதவராகிய தங்கள் கடமையாகும்," என்று கூறி, மீண்டும் அவருடைய பொற்றாமரை அடிகளை வணங்கிக் கண்களினின்று நீர் தாரை தாரையாகப் பெருகிவர நின்றாள்.

விப்பிரநாராயணர் மாசற்ற மனம் உடையவராதலின், அவளுடைய மெய்ப்பாடுகளைக் கண்டு அவள் கூறியவற்றையெல்லாம் உண்மையாகிய கூற்றுக்கள் என்றே எண்ணினார். இதுபற்றியன்றோ அவ்வையார், 'வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை,' என்றார்?

ஆகையால், அவளிடத்தில் அவருக்கு மிக்க இரக்கம் உண்டாயிற்று. ஆதலின், அவர் அவளை நோக்கி "நற்குணச் செல்வியே! நம் பெருமானுக்கு நான் செய்யும் தொண்டை நீயும் செய்துகொண்டிரு; நம் பெருமான் தன்பால் அன்பு செலுத்தும் அடியவர்களுக்கு எப்போதும் எளியனாயிருந்து அருள்புரிவன். ஆதலின், அவன் அருளை நீ பெறுதலில் யாதும் ஐயுறவின்று. உனக்கு நலம் உண்டாகுக," என்று அருள் நிறைந்த மனத்துடன் கூறியருளினார்.

தேவதேவி, அதுமுதற்கொண்டு விப்பிரநாராயணருக்கு உதவியாக மரம், செடி, கொடிகளுக்கு நீர் பாய்ச்சுதல், பாத்திகளை அமைக்க வேண்டிய இடத்தில் அமைத்தல், மடைகளைத் திருப்பி நீரைச் செலுத்தவேண்டிய இடத்திற் செலுத்துதல், களைகளைக் களைதல் முதலிய தொண்டுகளை விப்பிரநாராயணரும் உகக்கும்படி செய்து வரலானாள். விப்பிரநாராயணர் தொண்டு செய்வதில் தேவதேவிக்கு

உள்ள சிறந்த ஊக்கத்தைக் கண்டு, "இவ்வருங்குணச் செல்வி, எம்பெருமானிடம் பேரன்பினை உடையவள்," என்று கொண்டு, ஈடும் எடுப்பும் இல்லாத இறைவனுக்கு ஆராதிக்கும் அடிசிலில் ஒரு பகுதியை அன்புடன் அவளுக்கு அளித்து, மறு பகுதியைத் தாம் உட்கொள்வாராயினர்.

தேவதேவி, சற்றேறக்குறைய இருபது நாட்கள் வரையிலும் இங்ஙனம் நீர் பாய்ச்சுதல் முதலிய தொண்டுகளைப் புரிந்து வந்ததோடு விப்பிரநாராயணருடைய மனத்தைத் தன்வயமாகத் திருப்புதற்காகக் கொடிஇடை துவள அன்னம் என மென்னடை நடந்து, மான் எனப் பலவற்றை மருண்டு நோக்கித், தேன் எனப் பல இன்மொழிகளைக் கூறிவருவாளாயினள். விப்பிரநாராயணருடைய மனம் அச்செயல்கள் எவற்றாலும் மாறித் தன்வயமாகக் கண்டிலள். "ஆ! என்னே! இவ்வருங்குணச் செல்வரது மனநிலை! 'நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை, பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்' என்பர். அதுபோல இவர்பால் நாம் இதுகாறும் கூறிவந்த தேனினும் இனிய மென்மொழிகளுக்கு எத்தகைய வலிய மனமும் வலி குன்றிக் கரைந்துவிடுமே! இவர் மனம் அங்ஙனம் கரைந்திலதே. இவர் எல்லா உயிர்களிடத்திலும் இரங்கி அருளும் இயல்பு இவர்பால் காணப்படாமை மிக்க வியப்பையே விளைக்கின்றது. இவரது இயல்பு ஒரே இடத்தில் மென்மையும் வன்மையும் ஒருங்கு கூடி அமைந்திருத்தல் போலன்றோ இருக்கின்றது! நம்முடைய தமக்கை, 'நீ சாதிக்கத் துணிந்தது மிக்க அருமையுடையது,' என்று உரைத்தது ஒரு சிறிதும் தவறாத உரைதான் போலும். இன்னும் ஒருமதி ஆதற்குப் பத்து நாட்களே இருக்கின்றன. பின் நாம் மனைக்குச் சென்று நம்முடைய தமக்

கைக்கு ஆறுமதிவரையினும் பணிப்பெண்ணா யிருந்து பணிபுரிய வேண்டிய கடமை நம்மை விட்டுத் தப்பாது போலும்," என்று எண்ணினள். 'இறும் உயிர்க்கும் ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்று; அல்லனபோல் ஆவனவும் உண்டு சில.' ஆதலின், மற்றும் ஒருவகையான் முயன்று பார்ப்போமாக, என்று எண்ணி, மர முதலியவற்றிற்கு நீர் பாய்ச்சுதல் முதலிய தொண்டுகள் செய்கையில்,

**வெண்டுறை**

**" திருத்தாய் செம்போத்தே**
**திருமாமகள் தன்கணவன்**
**மருத்தார் தொல்புகழ் மாதவனைவரத்**
**திருத்தாய் செம்போத்தே.**

**கரையாய் காக்கைப்பிள்ளாய்**
**கருமாமுகில் போல்நிறத்தான்**
**உரையார் தொல்புகழ் உத்தமனைவரக்**
**கரையாய் காக்கைப் பிள்ளாய்."**

(பெரிய திருமொழி, 10-10, 1-2.)

என்று கேட்டார் மனத்தை முற்றும் கவரும் தன் குரலின் இனிமையும் இசையின் இன்பமும் நன்கு கலந்து தோன்றப் பாடிக்கொண்டே செய்யலானாள். விப்பிரநாராயணர், மனத்தை முற்றும் அப்பண்ணார் பாடல்கள் கவர்ந்துவிட்டன. அவர் தேவதேவியின் அருகிற்சென்று "நற்குணச்செல்வி! மர முதலியவற்றை நீ இனிது பாய்ச்சும் நீரினும் உனது இன்னிசை அமுதம் செழிப்பிக்கும் ஆற்றல் வாய்ந்தது என்பதிற் சிறிதும் ஐயுறவின்று. நம் பெருமானுக்கு நீ புரியும் தொண்டைப்போல நின்னிசையும் உகப்புடையதேயாகும். நீ இன்று நெடுநேரம் நீர் பாய்ச்சுதல் முதலிய தொண்டில் ஈடுபட்டிருந்து விட்டனை;

இன்னும் காலம் தாழ்க்கின் உனக்குச் சோர்வு உண்டாம். நாம் நம் பெருமானுக்கு இன் அடிசிலை ஆராதனை செய்து விட்டுப் பின்பு நாமும் அமுது செய்வோம். நீ சென்று நீராடிவிட்டு விரைவில் வருக,'' என்றனர். தேவதேவி அவ்வாறே நீராடிவர விப்பிரநாராயணர் அரங்கநாதருக்கு ஆராதித்த அடிசிலில் ஒரு பகுதியைத் தேவதேவிக்கு அளித்து, மற்றைப் பகுதியைத் தாம் அயின்றனர். அன்று முதல் நீர் பாய்ச்சுதல் முதலிய தொண்டு புரிகையில் தேவ தேவி அவ்வாறே பாடுவாளானாள். விப்பிரநாராயணரும் அவள் பாடும் பாட்டுக்களை மிக்க விருப்புடன் கேட்பா ராயினர். இங்ஙனம் இரண்டு நாட்கள் சென்றன. பிறகு மூன்றாம் நாள் பெருமழை பெய்தது. விப்பிரநாராயணர் பன்னசாலைக்குட் சென்றனர். தேவதேவி அப்பன்ன சாலையின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தனள். அவள்மீது மழைநீர் விழுவதாயிற்று. விப்பிரநாராயணர் அதனைக் கண்டு, “அருங்குணச் செல்வி! நீ ஏன் பொன் அன்ன நின் மேனி நனைய மழையில் நிற்கின்றாய். உள்ளே வருக!” என்றார். தேவதேவி, அவ்வாறே உட்சென்றனள். விப்பிரநாராயணர், “மெல்லியலாய்! உன்னுடைய மென்மை யாகிய உடம்பு மழைநீரால் நனைந்துவிட்டது. உனது மெல்லிய உடம்பில் அதனால் நோயுண்டாதல் கூடும். இந்த ஆடையினால் உடம்பைத் துடைத்துக்கொள்,'' என்று தமது மேலாடையை ஈந்தனர்.

தேவதேவி, அவ்வாடையினால் தன்னுடம்பை நன்றாய்த் துடைத்துக்கொண்டு, “கேட்டார் மனம் கவரும் இன் மொழிச் செல்வரே, நம் பெருமானுக்குத் தங்களுடன் இருந்து தொண்டு புரியும் பேறுபெற்றேன்! தங்கள் திரு மேனியை மருவியிருக்கும் வாய்ப்பினைப் பெற்ற ஆடை யால் என் உடம்பில் படிந்த மழை நீரைத் துடைத்துக்

கொள்ளும் பேற்றையும் இன்று பெற்றேன்! தங்கள் திருவடிகளைப் பிடித்துத் தாங்கள் இச் சோலையைச் சுற்றி வருவதால் ஆன நோவினைத் தீர்க்கும் நல்வினையைப் பெற விரும்புகின்றேன்,'' என்றாள். விப்பிரநாராயணர், "பொற் பாவையன்னாய்! நின் விழைவு அன்னதாயின், அவ்வாறே செய்க,'' என்றனர். தேவதேவி, உடனே தன் கைகளால் அவர் திருவடிகளைப் பிடிக்கலானாள். அப்போது அவளது மென்மலர்க் கைகளின் ஊற்றின்பம் விப்பிரநாராயண ருடைய மனத்தை முழுவதும் கவர்ந்துவிட்டது. அவர் தம்மை மறந்து தேவதேவியின் வயமாய் விட்டனர். ஆதலின், அவர் தேவதேவியை நோக்கிப், "பொலிகுழல் மானே! எழிலுடைய நங்கையர் மென்மலர்க்கைகளின் ஊற்றின்பத்தைப் பெற்றறியாத என்போன்றவர்கள் பெண்களை வெறுத்துக் கூறுதல், அக்கார அடிசிலை உண் டறியாதவர் அதனை வெறுத்துக் கூறுவதனையே ஒக்கும். உன் மென்மலர்க் கைகள் பட்டவுடன் என் காலில் உண் டான நோக்காடு முற்றும் நீங்கிவிட்டது. உன் குரல் இசை செவிக்கு இன்பம் பயக்கின்றது. நல்லாய் நீ ஒரு பாட் டுப் பாடு,'' என்றார்.

தேவதேவி, "அன்பிற் சிறந்த அறிஞரே, அங்ஙனமே பாடுகின்றேன் :

**எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

" உள்ளூரும் சிந்தைநோய் எனக்கே தந்தென்
ஒளிவளையும் மாநிறமும் கொண்டா ரிங்கே
தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச்
சேலுகளும் திருவரங்கம் நம்மூர் என்ற
கள்ளூரும் பைந்துழாய் மாலை யானைக்
கனவிடத்தில் யான்காண்பன் கண்ட போது
புள்ளூருங் கள்வாநீ போகேல் என்பேன்
என்றாலும் இதுநமக்கோர் புலவி தானே''

(திருநெடுந்தாண்டகம், பா. 23.)

என்று, கேட்ட பறவைகளும் அசைவற்றிருக்கும்படி பாடினாள். விப்பிரநாரயணர், "பொறிவரிய வண்டே! நல்லாருடைய அன்பு நிறைந்த விழிபோன்ற உருவினைக் கொண்டிருக்கின்றாய்; அன்றியும், 'அளி' என்னும் பெயரையும் பெற்றிருக்கின்றாய். அங்ஙனம் இருந்தும், அவற்றிற்கு ஏற்ப அன்பும் அருளும்கொண்டு, 'இம்மெல்லெழிலிடையாருடைய குழலில் நாம் அமர்ந்து இருந்தால் இவருடைய இடை நில்லாமல் ஒடிந்துவிடுமே' என்று எண்ணி அகன்று போகாமல் இவர் குழலில் அமர்ந்திருக்கின்றனையே! என்னே நின் வன்கண்மை!" என்று கூறி, அவ்வண்டை ஓட்டுவார்போலத் தேவதேவியைத் தொட்டனர்.

தேவதேவி, புன்முறுவல் புரிந்து, விப்பிரநாராயணரைக் கண்ணால் தன் அன்பு தோன்றப் பார்த்துத், தலைகவிழ்ந்து தரையை நோக்கினள். விப்பிரநாராயணர், "வானவரும் பெறுதற்கரிய இவ் வின்னமுதை யான் பெறும்படி அருளிய ஊழே, நீ நீடுவாழ்க," என்று தேவதேவியைத் தழுவிக்கொண்டனர். அவ்விருவர் உடலங்களும் ஒருடல் ஆயின. இருவர் மனமும் இன்பநிலையில் கலந்தன. தேவதேவி, மறுநாள் அங்குத் தன்னைக் காணுதற்கு வந்த தோழியினால் தன் ஆடை அணிகளை வருவித்துத், தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு, விப்பிரநாராயணரை மகிழ்வித்து, அவருடைய மனத்தை முற்றும் தன் வயப்படுத்திச் சிலநாட்கள் அப் பூங்காவிலே தங்கியிருந்தனள். பிறகு விப்பிரநாராயணரை நோக்கி, "அன்புடையீர், இப் பூஞ்சோலையிலே தங்களுடன் தங்கியிருத்தல் எனக்கு இன்பமாகவே இருக்கின்றது. ஆயினும், யான் மனையை விட்டு வந்து பலநாட்கள் ஆயினமையின், எங்கள் மனையில் உள்ளாரைக் காண விழைகின்றேன். ஆதலின், தாங்கள் என்னுடன் வருதல் வேண்டும் என விரும்புகின்றேன். அதில்

தங்கள் திருவுள்ளம் யாதோ? அதனைத் தெரிவிக்கக் கோரு கின்றேன்,'' என்றனள். விப்பிரநாரயணர், “என் அன்பிற்குரியாய், உன்னுடைய அன்னை முதலியவர்கள் உன்னைக் காணும் விருப்புடையவராகவே யிருப்பர். என் மனமும் உன்னைப் பிரிந்திருக்க ஒருப்படாது. ஆதலின், நீ கூறியபடி உன்னுடன் வருதலில் எனக்குத் தடை சிறிதும் இன்று,'' என்றனர்.

தேவதேவி, “அன்புடையீர், தாங்கள் என்னுடன் வர உடன்பட்டது, என் முற்பிறப்பின் நல்வினையின் பயனே ஆகும். அஃது எனக்கு மிக்க மகிழ்ச்சியை விளை வித்தது; செல்வோம்; வந்தருள்வீர்,'' என்று கூறி, விப்பிர நாராயணரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு தங்கள் இல்லத்திற்குச் செல்லப் புறப்பட்டுத், தங்கள் வீட்டின் அருகில் வந்தவுடன் தனக்கு ஆடை அணிகளைக் கொண்டு வந்து கொடுத்த தோழியைத் தன் தமக்கைக்குத் தன் வருகையை முன்னே சென்று தெரிவிக்கும்படி அனுப்பி னள். அவளுடைய தமக்கையாகிய தேவி, வியப்புற்று, எதிர் கொண்டு வந்து, அழைத்துச் சென்று, விப்பிரநாராயண ருக்குச் சிறந்ததான ஓர் ஆதனம் இட்டு, அவரை வீற் றிருக்கச் செய்தாள். அவள் பிறகு தேவதேவியை நோக்கி, *“ அன்புடைய தங்கையே! நீ இவ்வருங்குணச் செல்வரை உன் அன்பினுக்கு உரியவராகப் பெற்றது, விண்ணவர்க் குரிய மணியைப் பெறுவதினும் அருமையானதே! நீங்கள் இருவரும் அன்பு கலந்த மனத்தினராய்க் கூடியிருத்தலை யான் கண்டு களித்து, உங்களுக்குரிய தொண்டு புரிதலை

* இது “நாம் இருவரும் செய்துகொண்ட உறுதியின்படி நான் உனக்கு ஆறுமாதம் வரையிலும் பணிப்பெண்ணாய் இருந்து பணி செய்தற்கு உரியவளானேன்” என்பதனைத் தேவதேவிக் குத் தேவி குறிப்பித்தது ஆம் என்க.

எனது முன்னை நல்வினைப்பயனால் பெறுதற்குரியவளானேன்," என்றனள்.

தேவதேவி, *புன்முறுவல்பூத்து, "என் அன்பிற்குரிய தமக்கையே, நீ எனக்குச் செய்வன என்றும் நமக்கு நம் மன்னை செய்வனவற்றின் வேறானவை ஆகுமோ? இங்ஙனம் அன்புடைய உன்னைத் தமக்கை ஆகப் பெற்றமையால், என் மனமாகிய பொய்கையில் மகிழ்ச்சியாகிய நீர் என்றும் நிறைந்து விளங்குவது ஆயிற்று," என்றனள்.

பிறகு, அவ்விரு தேமொழி மாதர்களின் தாயாகிய முதியவள் அங்கு வந்து, விப்பிரநாராயணரை நோக்கி மகிழ்ந்து, தேவதேவியை நோக்கி, "என் அருமைச் செல்வமே, †இவர் வாடாத செல்வச்சிறப்பினர் என்பதனையும், அன்பு நிறைந்த மனத்தினர் என்பதனையும் இவரது முகப்பொலிவே இனிது உணர்த்துகின்றது," என்றனள்.

தேவதேவி, "என் அருமை அன்னாய், ‡இவருடைய அன்பு நீரிலும் தண்ணிது; வானினும் பெரிது; அன்புள்ள

---

* இது, "நாம் இருவரும் செய்துகொண்ட உறுதிமொழியின் படி நீ எனக்குப் பணிப்பெண்ணாயிருந்து செய்யும் பணிகளை நம் அன்னை நமக்குச் செய்யும் பணிகள் ஆகக் கருதுவேனே யன்றிப் பணிப்பெண் செய்யும் பணிகள் ஆகக் கருதேன்," என்று தேவதேவி தேவிக்குக் குறிப்பித்ததாம்.

† அம்முதியவள் முதலில் செல்வத்தைப் பற்றிக் கூறியதனால் விப்பிரநாராயணர் செல்வம் உடையவரா? என்பதனை அவள் முன்னே நோக்கினள் என்பது நன்கு விளங்குதல் அறிக. அவள் பின்பு அவரை அன்பு நிறைந்த மனத்தினர் என்றது அவரது அன்பைத் தன் மகள் பெறின், அவரது செல்வத்தைத் தாங்கள் அடைதலாம் என்னும் கருத்தால் அவரது அன்பு தன் மகள்பால் உண்டாகும்படி கூறிய தந்திரமொழியாம் என அறிக.

‡ தேவதேவி உண்மையாகவே விப்பிரநாராயணர்பால் அன்பு கொண்டிருந்தனள். ஆதலின், அவள் அம்முதியவளைப் போல முன்னே செல்வத்தைப் பற்றிக் கூறாமல் அன்பைப்பற்றிக்

அன்னையே, இவரை நீ வாடாத செல்வச்சிறப்பினர் என்று தில் ஐயுறவின்று'' என்றனள்.

விப்பிரநாராயணர் தேவதேவியுடன் கூடியிருந்து, இன்பம் நுகரலாயினர். அவர்தம் முன்னோர் ஈட்டிய பொருள்களை எல்லாம் தேவதேவிக்குக் கொடுத்துவிட்டுப் பின் அவளுக்குப் பொருள் கொடுக்க இயலாதவராயினர். தேவதேவியின் தாயாகிய முதியவள் விப்பிரநாரயணரினின்றும் தேவதேவியை மறைவான இடத்தில் அழைத்துச் சென்று, அவளை நோக்கி, "என்னருமைச் செல்வியே, இம் மறையவன் சில நாட்களாக ஒரு காசும் கொடாதிருக்கின்றான். இவன் மிக்க உலோபகுணம் உடையவன் போலும்! இத்தகையோன்பால், நீ நிறைந்த அன்பைச் செலுத்துதல் தகுமோ? பொற்பில் மன்மதனேயாயினும் பொருள் கொடாதவனை விட்டு, அருவருக்கும் வடிவினனேயாயினும் பொருள் கொடுப்பவனை ஏற்று, அவனை மகிழ்விப்பது அன்றோ பொதுமகளிர் புரிதற்குரிய செயலாவது? நீ இனி இவனை நம்மனைக்குள் அரைக்கணமும் தங்கவிடாமல் வெளியில் அனுப்பிவிடுக," என்றாள். தேவதேவி, அம் முதியவள் சொன்ன சொற்களைக் கேட்டு, நீரினின்று வெளியில் எடுத்தெறியப்பட்ட, தாமரைமலர்போல முகம் வாடி, மறுமொழி கூறாமல் தலைகவிழ்ந்து, தரையை நோக்கி நின்றனள்.

முதியவள், "பேதைப்பெண்ணே' உலகில் பொருள் இல்லாதவர்களை எவரும் வேண்டார். இளமையில் பொருளைத் தேடிக்கொள்ளாமல் இன்பக் களிப்பிலேயே தங்கள்

---

கூறினள் எனவும், தன் தாயின் கருத்தின்படி குறையாத செல்வத்தினர் என்பதனையும், தன் கருத்தின்படி கெடாத வீட்டின்பத்தை யெய்துதற்கு உரியர் என்பதனையும் பொருளாகக் கொண்டு அவரை வாடாத செல்வத்தினர் என்று கூறினள் எனவும் அறிக.

காலம் முழுதையும் செலுத்திக்கொண்டிருப்பவர்கள் முது மையில் வறுமையால் வருந்தி வாடுவார்கள். அறிவு மயங்கி, இம்மறையவனது எழிலால் மனம் கவரப்பட்டனை போலும்! உன் தமக்கைதான் என் சொற்களைக் கேட் காமல் இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நூல் களைப் பாடிப்பதிலேயே தன் காலத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கின்றாள். நீ அவளைப் போன்றிராமல்; பொருள் ஈட்டும் வழியில் ஊக்கம் உடையவளாய் இருந் தமையின், உன்னால் நன்மை பெறலாம் என்றெண்ணி, அவளைப் பற்றிக் கவனிப்பதை விட்டுவிட்டேன். அப் படியே உன்னையும் உன் வழியில் விட்டுவிட்டால், பிறகு நாம் வறுமைப்பிணியினால் வருந்தி வாடுவோம் என்பதில் ஐயுறவில்லை. அம்மறையவன்பால் உன் மனம் முழுதும் சென்றுவிட்டது. ஆதலின், அவனை வெளியில் அனுப்ப உனக்கு மனம் வாராது. இதோ நானே போய் அவனை வெளியில் அனுப்பிவிடுகின்றேன்'' என்று விப்பிரநாரா யணரிடம் விரைந்து சென்று, அவரைச் சினத்துடன் நோக்கி, ''மதியில்லாத மறையவனே, திறல்மிக்க அரசர் களும் என்னுடைய இளமான்விழியாளாகிய செல்வியின் அருளைப் பெற நாள் ஒன்றுக்கு அளவில்லாத பல்லாயிரம் பொன்களைக் கொடுப்பர். நீ இங்கு வந்து பல நாட்க ளாயின. இதுவரையிலும் நீ கொடுத்த பொருள் மிகச் சொற்பமானதே யாகும். அங்ஙனமிருந்தும் என்னுடைய இளம் பொற்பாவை உன்பாற் சிறிதும் வெறுப்புக் கொள் ளாமல் இருக்கின்றனள். அவள் மனம் அப்படி உன்வசம் ஆகும்படி அவளுக்கு நீ ஏதோ மருந்தைக் கொடுத்திருக் கின்றாய். உன்னால் யாங்கள் பெற்ற பயன் இதுதான். இதனை யன்றி வேறு தக்க பயனை நாங்கள் அடையவில்லை. நீ இனி இமைப்பொழுதும் எங்கள் வீட்டில் இருக்கத் தக்க

வன் அல்லே. உடனே வெளியிற் செல்; நிற்காதே,'' என்று கூறினாள். விப்பிரநாராயணர், அவளுக்கு மறுமொழி கூருமல் வெளியில் வந்து, அவ்வீட்டின் திண்ணையில் உட்கார்ந்து மிகவும் வருந்தலானர். ஈண்டு அடியில் வரும் செய்யுட்களை நோக்குக.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

1. " பொறுக்கலா உளத்தள் ஈன்ற
புதல்வியைச் சுளித்து நோக்கி
வெறுக்கைநீ குயிற்றின் அல்லால்
வேறுமோர் விபவம் உண்டோ
மறுக்கலாய் முனிவன் றன்னை
எனக்கொடு வசனம் பேசி
ஒறுக்கலாத் தளர்ந்தாள் உள்ளம்
அவளுமற் றவன்பால் உற்ருள்.''
(அரிசமயதீபம், விப்பிரநாராயணச் சருக்கம், செ. 100.)

2. " அருந்திறல் நிருபர் நாளும்
அலகிலா யிரம்பொன் அன்பால்
தருந்திறை கவர்மான் சிந்தை
தளர்ந்துநின் வயத்தள் ஆக
மருந்தினை அளித்தாய் நின்னால்
வருவதோர் பயன்மற் றுண்டோ
இருந்திடல் போதி யென்னுப்
புறப்படுத் திடுக்கண் செய்தாள்.''
(ஷை செ,101.)

1. (இ - ள்.) (தேவதேவியின் தாய்) விப்பிரநாராயணர் பின் ஒன்றும் கொடாமல் தேவதேவியோடு கூடியிருத்தலைப் பொருத மனம் உடையவளாய்த், தான் பெற்ற பெண்ணுகிய அத்தேவதேவியைச் சினந்து பார்த்து, ஒன்றும் கொடாமல் இருக்கும் அம்மறைபவனை நீ வெறுத்து நீக்காமலிருக்கின்ருய். நீ பொருளைச் சம்பாதித்

தல் நமக்குப் பெருமையாகுமே யன்றி, வேறு ஒரு பெருமை நமக்கு உண்டோ? என்று கொடிய சொற்களைச் சொல்லத், தேவதேவி அதனைக் கடியக் கூடாமல் மனம் தளர்ந்து இருந்தனள். அம்முதியவளும் விப்பிரநாராயண ரிடம் சென்று (எ - று.)

வெறுக்கை-பொருள், மறுத்தல்-நீக்குதல், கொடுவசனம் - கொடிய சொற்கள், பேசி - பேச, (சொல்ல, எச்சத் திரிபு) ஒறுக்கல் - கடிதல், உற்ருள் - உற்று: முற்றெச்சம்.

2. (இ - ள்.) (பிறரால் வெல்லுதற்கு) அரிய வன்மையை உடைய மன்னர்கள் அன்போடு திறையாகக் கொடுக்கும் அளவில்லாத பல ஆயிரம் பொன்களைப் பெறும் மான்போன்றவளாகிய (என்) பெண் தன் மனம் தளர்ந்து உன் வசம் ஆகும்படி நீ மருந்தைக் கொடுத்தாய். (இதனை அன்றி) உன்னால் வருவதாகிய பயன் வேறென்றுண்டோ? (இங்கே) இருக்காதே; (வெளியிற்) போவாய் என்று சொல்லி அவரை வெளியில் அனுப்பி அவருக்குத் துன்பத்தை உண்டாக்கினள் எ - று.

நிருபர் அன்பால் திறைதரும் அலகில் ஆயிரம்பொன் என இயைக்க. அன்பால் - அன்போடு (இதில் ஆல் உருபு ஒடு உருபின் விசேடணப் பொருளில் வந்தது.) மான் - மான்போன்ற பெண் (உவமை ஆகுபெயர்) என்ன - என்று சொல்லி.

பரிதிவானவன் பின்பு, விப்பிரநாராயணரது துன்ப நிலையைக் கண்டு பொறுக்க முடியாமையால், அவரைக் காணமல் இருத்தற்கு உரிய இடத்தில் சென்று மறைந்திருக்கக் கருதியவன்போல் மேற்றிசையைச் சென்றடைந்து மறைந்தான். விப்பிரநாராயணர், "என் அன்பிற்கு உரிய பெண்ணமுதே, உன்னைப் பிரிந்திருக்க முடியாமல்

யான் வருந்துதலை நீ இம்மனையினுள் இருந்தும் வந்து தீர்க்காமல் இருக்கின்றனையே! நீ முன்னே இத்திருக்கரம்பானூரினின்று திருவரங்கத்தில் யான் இருந்த சோலையில் என்னைத் தேடி வந்து மகிழ்வித்தாய். அத்தகைய நீ உன் வீட்டின் புறத்திண்ணையிலேயே இப்போது நான் இருக்கவும், நீ வந்து பார்த்து ஓர் இன்மொழி கூருமல் இருத்தற்குக் காரணம் யாது? ஓ! அறிந்தேன். உன் தாயின் கொடுவிடம் போன்ற சொற்களுக்கு அஞ்சியே நீ என்னிடம் வாராமல் இருக்கின்ருய். என் அன்பிற்கு உரியவளாகிய அம் முழுமதி முகத்தாளுடன் இருக்கையில், தன் அமுதக் கதிர்களை என்மேற் சொரிந்த இச் சந்திரன், இப்போது கோடைகாலத்து நடுப்பகலில் சூரியன் சொரியும் கதிர்களினும் வெப்பமுடைய கதிர்களை என்மேற் சொரிகின்றனனே! இஃதென்ன கொடுமை! இவ்வாடைக் காற்றுக் காதலரைப் பிரிந்தால் உயிர் கவரவரும் கருவேள் ஆகிய கூற்றுவன் என் உயிர் கவர வீசிய பாசந்தான்போலும். ஆ! இது புரியும் கொடுமை என்னுல் ஆற்ற முடியாததாய் இருக்கின்றதே!" என்று பலவும் கூறி வருந்தலானுர். அப்போது திருமகளநாதன் திருமகளோடு விப்பிரநாராயணருடைய கண்களுக்குப் புலப்படாமல் எழுந்தருளினன். திருமகள், திருவரங்கநாதனை நோக்கி, "அன்புடையீர், இங்கு இங்ஙனம் வருந்திக்கொண்டிருக்கும் இவ்வருங்குணச் செல்வன் நமக்கு மிக்க அன்புடன் திருமாலைத் தொண்டு செய்துகொண்டிருந்த நல்லியலாளன் அல்லனே? இச் செல்வனை இங்ஙனம் வருந்தும்படி விட்டிருத்தல் தங்கள் திருவருளுக்கு ஏற்றதாகுமோ? இனி இவனை இங்ஙனம் வருந்த விடாமல் தாங்கள் இவன்பால் அருள் புரிதல்வேண்டும்" என்றருளினள். திருவரங்கநாதன், "அன்புடையாய்! அங்ஙனமே செய்கின்ருேம்," என்று

கூறி, உலக அன்னை ஆகிய திருமகளுடன் சென்று விட்டனன். அங்ஙனம் திருவரங்கநாதன் சென்றவுடன் அப் பெருமானுடைய திருவருளால் விப்பிரநாராயண ருக்குத் தூக்கம் வந்துவிட்டது. அவர் அத் திண்ணையி லேயே படுத்துக்கொண்டு துயின்றுவிட்டனர். அப்போது திருவரங்கநாதன் தன் ஆராதனைக்கு உரிய பொன் வட்டில் களுள் ஒன்றைக் கொண்டு வந்து தேவதேவியின் வீட்டுக் கதவைத் தட்டினர். தேவதேவியின் தாய் கதவைத் திறந்து, "நீர் யார்?" என்று கேட்டனள். அரங்க நாதன், அவளை நோக்கி, "மூதாட்டியே! நான் அழகிய மணவாளன் என்னும் பெயரையுடையவன்; விப்பிர நாராயணருடைய தூதன். அவர் இப் பொற்கிண்ணத் தைத் தேவதேவிக்குக் கொடுக்கச் சொல்லி என்னிடம் கொடுத்தனுப்பினர்," என்றருளினன். அம்முதியவள் அப்பொற்கிண்ணத்தைக் கண்டவுடன் பேருவகை கொண்டு, அரங்கநாதனை நோக்கி, "அன்புடைய தூதனே, என்னருமைச் செல்வி அவரைக் காணுமையால் மிகவும் வருந்துகின்றனள். நீ சென்று அவரை இங்கு விரைந்து வரச்சொல்," என்றாள். அரங்கநாதன், "அங்ஙனமே போய்ச் சொல்லுகின்றேன்," என்று கூறியருளி, வெளி யில் வந்து திண்ணையில் படுத்துக்கொண்டிருக்கும் விப்பிர நாராயணரை எழுப்பித், "தேவதேவியினுடைய தாய் உம்மை உள்ளே வரச் சொன்னாள்; நீர் விரைந்து உள்ளே செல்வீராக," என்று கூறியருளினன். விப்பிரநாராயணர் அச் சொல்லைக் கேட்டவுடன் மிக்க பசிகொண்டவன் தேவர்களின் இன்னமுதம் பெற்று மகிழ்ந்தாற்போல மகிழ்ந்து அவ்வீட்டினுட் சென்றார். தேவதேவியினுடைய தாய் அவரைக் கண்டவுடன் எதிர்கொண்டழைத்து, "அருங்குணச்செல்வரே! என் முதுமைப் பருவத்தின்

தன்மையினுல் அறிவு தடுமாறித் தங்களிடம் ஏதோ கூறி விட்டேன். அதற்காக என்னை மன்னித்தருளவேண்டும். என் அருமைச் செல்வி தங்கள் பிரிவால் மிகவும் வருந்து கின்ருள். நாங்கள் என்ன சொல்லியும் அவள் மனம் தெளியவில்லை. நீங்கள் தாம் அவள்பால் சென்று அவளைத் தெளிவித்தல் வேண்டும்,'' என்ருள். விப்பிரநாராயணர் அச் சொற்களைக் கேட்டு நீர்வேட்கை மிக்கவன் குளிர்ந்த பொய்கையைக் கண்டாற்போல மகிழ்ந்து தேவதேவியி னிடம் சென்றனர். தேவதேவி அவரைக் கண்டவுடன் எழுந்து வந்து, அவரைத் தழுவிக்கொண்டு நின்ருள். அவள் கண்களினின்று நீர் தாரை தாரையாகப் பெருகி வரலாயிற்று. விப்பிரநாராயணர், தேவதேவியை நோக்கி, "என் ஆருயிர் அனையாய், ஏதோ ஊழின் வலியால் இவ் விரவின் முற்பகுதியில் என்னை நீ பிரிந்திருக்க நேர்ந்தது. அதற்காக நீ இங்ஙனம் வருந்துதல் ஆகாது,'' என்றனர். "அன்புடையீர்! என் மனம் வருந்துவது தங்களை இவ் விரவின் முற்பகுதியில் பிரிந்திருந்ததற்காக அன்று; தங்களை நோக்கி என் தாய் கூறிய கொடுஞ்சொற்களை எண்ணியே என் மனம் வருந்துகின்றது. பொருளிலே பேராசையுடையவர்களுக்கு அறநெறியும், அன்பின் தன்மையும் விளங்குவனவாமோ?'' என்றனள். விப்பிர நாராயணர், ''மான்விழியாய்! என்பால் அன்புமிக்க உன் தாய் சொற்களை என் தாய் கூறிய சொற்களாகவே கருது கின்றேன். நீ அவற்றிற்காக வருந்தாதே. இவ்விரவின் மற்றைப் போதும் நமக்குத் துன்பம் தருவதாகாமல் இன்பம் தருவதாதல் வேண்டும்," என்றனர்.

தேவதேவி அவரை அன்புடன் கடைக்கண்ணுல் நோக்கித் தழுவிக்கொண்டனள். அவள் கூறியபடியே அவ் விருவருக்கும் அவ்விரவின் பிற்போது நற்போதாகக் கழிந்

தது. விப்பிரநாயணருடைய மனப்போது மலர்ந்து, மகிழ்ச்சி யென்னும் தேன் நிறையப் பெற்றூர்போலச் செந்தாமரைப்போது மலர்ந்து. தன்கண் தேன் நிறைந்திருத்தலைப் பெறும்படி சூரியன் குணதிசைவரையின் சிகரம் வந்தணைந்தான். காலையில் கோயில் அர்ச்சகர் காப்பு நீக்கி ஆராதனைக்குரிய பொன் வட்டில்களுள் ஒன்றைக் காணுமல் அதனை அதிகாரிகளுக்கு அறிவித்தனர். அதிகாரிகள் அதனை அரசனுக்கு அறிவித்தனர். அரசன், அர்ச்சகர், பரிசாரகர் முதலியவர்களை வருவித்துத் தேரடியில் நிறுத்தித், தண்டித்து, வருத்தி விசாரிக்கலாஞன். அங்ஙனம் விசாரிக்கப்பட்டவர்களுள் ஒருவனுடைய மனைவி, தேவதேவியின் பணிப் பெண்ணுய் இருந்தனள். அவள் நீர் கொண்டு வரும் பொருட்டுச் செல்பவள், அவ்வழியாகச் சென்ருள். தன் கணவன் முதலியவர்கள் அரசனல் விசாரிக்கப்படுதலை அவள் கண்டு, அதன் காரணத்தை விசாரித்து அறிந்துகொண்டு, அரசன்முன் சென்று, வணங்கி, “வாழ்க அரசே, என் தலைவியாகிய தேவதேவியினுடைய காதலனுகிய ஒரு மறையவன் அவள் தாயிடம் ஒரு பொற்கிண்ணத்தைத் கொண்டு வந்து கொடுத்தனன். அம்முதியவள் அதனைத் தன் தலையணையின்கீழ் வைத்திருக்கின்ருள்,” என்று கூறினுள். அரசன் உடனே சேவகர்களை அனுப்பினன். அவர்கள் சென்று அப் பொன்வட்டிலுடன் தேவதேவியின் தாயையும், விப்பிரநாராயணரையும் கைப்பிடியாகப் பிடித்து வந்து அரசன் முன்னே நிறுத்தினுர்கள். அரசன் தேவதேவியின் தாயை நோக்கி, “இவ்வட்டில் உன்னிடம் எப்படி வந்தது?” என்று கேட்டனன். அம்முதியவள், “வாழ்க மன்னர் மன்னரே. இந்த விப்பிரநாராயணருடைய தூதன், அழகிய மணவாளன் என்பவன், ‘விப்பிரநாராயணர் இப் பொன்வட்டிலைத் தேவதேவிக்குக்

கொடுக்கச் சொன்னர்' என்று என்னிடம் கொண்டுவந்து கொடுத்தான். நான் இஃது அவருடைய தாயிருக்கும் என்று எண்ணி வாங்கிக்கொண்டேன்,'' என்றனள். விப்பிர நாராயணர், “நான் அவ் வட்டிலையும் அறியேன்; எனக் கொரு தூதனும் இலன்,'' என்ருர். அரசன் அமைச்சர்க ளுடன் மறைவிடத்திற் சென்று, அவர்களை நோக்கி, “ஆய் வன ஆராய்ந்துணர்ந்த அறிஞர்களே, இதைப்பற்றி நீங்கள் யாது கூறுகின்றீர்கள்?” என்று கேட்டான். முதல் அமைச்சர், “அரசர்க்கரசே, தம்பால் வருவோர் கொடுப் பனவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் பொதுமகளிர்க்கு இயல்பு. ஆதலின், அம் முதியவளை விட்டுவிடுதல் வேண்டும். விப்பிரநாராயணர் முகத்திலே களவு செய்தமைக்கு உரிய குறி ஒன்றும் காணப்பட்டிலது. அவரது முகத்தின் குறி, அவர் களங்கமற்றவர் என்பதனையே குறிப்பிக்கின்றது. அம் முதியவள், அவ் வட்டிலைக் கொண்டு வந்து கொடுத்த வன் தன் பெயர் அழகிய மணவாளன் என்று சொன்னன் எனக் கூறினள். இதில் ஏதோ நன்கு ஆய்தற்கு உரிய செயல் இருக்கின்றது. இது தீர விசாரித்தற்கு உரிய வழக்காகும்,'' என்றனர். அரசன் மற்றை அமைச்சர்களை நோக்கினன். அவர்களும், “வாழ்க அரசே, எங்களுக்கும் அதுவே கருத்து,'' என்ருர்கள். அரசன் அமைச்சர்களுடன் விப்பிரநாராயணர் முதலியவர்கள் உள்ள இடத்திற்கு வந்து, அம் முதியவளை வீட்டிற்குப் போகச் சொல்லிவிட்டுச், சேவகர்களை நோக்கி, “சேவகர்களே, இந்த வழக்கு நன்கு ஆய்தற்கு உரியதாய் இருக்கின்றது. இந்த விப்பிரநாரா யணனை இன்று சிறையிலிட்டு நாளைக்கு நீதிமன்றத்திற்கு அழைத்து வம்மின்,'' என்று கூறி, அமைச்சர்களுடன் சென்றுவிட்டனன். அங்கு வந்திருந்த மாந்தர்கள் “அந்தோ! இந்த மறையவர் மிக்க தூயவர்; அரங்கநாதன்

பால் மிக்க அன்பு கொண்டவர்; தீமை சிறிதும் அறியாதவர்; மெய்ம்மொழியாளர். இவருக்கு இத் துன்பம் முன்னை வினையினால் நேர்ந்ததுபோலும். நாளை அரசர் என்ன தீர்ப்புக் கூறப்போகின்றாரோ? யாருக்குத் தெரியும்? நம்பெருமானாகிய திருவரங்கநாதனே இவர்பங்கில் இருந்து இவரைக் காப்பாற்றுதல் வேண்டும்," என்று பலவாறு பேசிக்கொண்டு சென்றார்கள்.

சேவகர்கள், அரசன் கட்டளைப்படியே விப்பிரநாராயணரை அழைத்துக்கொண்டு சென்று சிறையில் இட்டார்கள்.

விப்பிரநாராயணர், "ஆ! எம்பெருமானே, இதுவோ உன் திருவருள்! நீ யாதுசெய்யினும் செய்க," என்று கூறித் திருவரங்கநாதனை மனத்தில் கொண்டு போற்றுவாராயினர். திருவரங்கநாதன் அன்றிரவில் சோழநாட்டு வேந்தன் கனவில் தோன்றி, "அரசனே, அந்த விப்பிரநாராயணர் மிகத் தூயர்; நம்முடைய அடியவர்களுள் சிறந்தவர்; நற்குணக் குன்று; நம்மிடம் மிக்க அன்புடையவர்; திருமாலைத் தொண்டு நாள்தோறும் நமக்குச் செய்தவர். அத்தகையவர் முன்னை வினைவயத்தால் தேவதேவியின் வயப்பட்டு, அவள்பால் அன்புமிக்கவராய் அவளோடு கூடியிருந்து, தம் முன்னோர் ஈட்டிய பொருள்களையெல்லாம் அவளுக்குக் கொடுத்துவிட்டனர். பிறகு அவரால் அவளுக்குப் பொருள் கொடுக்க முடியாமையின், அவளுடைய தாய் அவரைப் புறப்படுத்தினள். அவர் அன்றிரவு தேவதேவியைப் பிரிந்திருக்கலாற்றாமல் அவள் வீட்டுத் திண்ணையில் இருந்து வருந்திக்கொண்டிருந்தனர். நாமே அவரது துன்பத்தைப் போக்கி, அவரை ஆட்கொள்ளும்பொருட்டு நம்முடைய திருவாராதனைக்கு உரிய பொன்வட்டில்களுள், ஒன்றை எடுத்துச்சென்று, அவள் தாயினிடம், 'விப்பிரநாராயணர்

தேவதேவிக்குக் கொடுக்கச் சொன்னர்; நான் அவர் தூதன் அழகியமணவாளன் என்னும் பெயருடையேன்,' என்று கூறி அதனைக் கொடுத்தோம். நீ உடனே அவரைச் சிறையி னின்று விடுத்திடுக,'' என்றுரைத்து மறைந்தருளினன். அரசன், நெஞ்சம் திடுக்கிட்டு, மறுநாட் காலையில் அமைச் சர்களை வருவித்து, இரவில் தன் கனவில் திருவரங்கநாதன் தோன்றிக் கூறியருளியதை உரைத்து, "ஈடும் எடுப்புமில் லாத இறைவனுடைய அடியவராகிய அப் பெரியாரைச் சிறையிலிட்டதனுல் ஆகிய பாவத்தைப் போக்கிக்கொள்ளு வதற்கு உரிய வகை யாது? கூறுமின்," என்றனன். அமைச் சர்கள், "வாழ்க வேந்தர் வேந்தே, நம் பெருமான் அடியவ ராகிய அப் பெரியாருடைய அருளாலேயே அப் பாவத் தைப் போக்கிக்கொள்ளுதலாம்,'' என்ருர்கள். அரசன், உடனே அவ் வமைச்சர்களோடு விப்பிரநாராயணர்பால் சென்று, அவருடைய திருவடிகளில் தனது முடிபட வணங்கித், "திருமகள்நாதன்பால் மெய்யன்புடையீர், யான் தங்கள் மேன்மையை அறியாமையின் தங்களைச் சிறையில் இடுவித்தேன். அக் குற்றத்திற்கு யான் பெரிதும் அஞ்சு கின்றேன். தாங்கள் என்னை மன்னித்து, என்பால் அருள் புரிதல் வேண்டும்," என்று வேண்டினன். விப்பிரநாரா யணர், "வாழ்க அரசரே, நம் பெருமானுகிய திருவரங்க நாதனே உலக இன்பத்தில் ஆழ்ந்து கிடந்த என்னை ஆட் கொள்ள வேண்டிச் சிறையிடுவித்தனன். தாங்கள் ஒரு குற்றமும் புரியவில்லை. அதற்கு உரிய குற்றம் என் னுடையதே. நம்பெருமானே தங்கள் கனவில் தோன்றி நிகழ்ந்தனவற்றை உரைத்தருளினன் எனின், தங்கள் நல் வினையின் மேன்மை அளவிடற்கு உரியதாகுமோ? தங்கள் பால் நம்பெருமானுடைய இன்னருள் நோக்கம் நன்கமைந் துள்ளது; தாங்கள் அஞ்சுவதற்கு உரிய தீமை யாதும்

இன்று, தங்கள் நலங்கள் மேன்மேலும் பெருகுவனவாக'' என்றருளினர்.

''மெய்ஞ்ஞானச்செல்வம் வாய்ந்த பெரியீர், தங்கள் அன்பும் அருளும் வாழ்க. தாங்கள் நம்பெருமானுக்குப் புரியும் தொண்டுகள் இனி யாதோர் இடையூறும் இன்றி முற்றுறும் என்பதில் சிறிதும் ஐயுறவின்று. தாங்கள் செல்ல விரும்பும் இடம் யாது? அருள்க,'' என்றனன். விப்பிரநாராயணர், ''வாழ்க அரசே, நம்பெருமான் திருக் கோயிலுக்குச் செல்ல விரும்புகின்றேன்,'' என்றனர்.

அரசன் உடனே ஏவலாட்களை நோக்கிச், ''சிறந்த தொரு பல்லக்கைக் கொண்டுவாருங்கள்,'' என்று கூறினன். விப்பிரநாராயணர், ''அன்புள்ள அரசரே, நான் நம்பெரு மான் திருக்கோயிலுக்கு நடந்துசெல்ல விரும்புகின்றேன். பல்லக்கு வேண்டா. விடையளிக்க,'' என்றனர்.

அரசன், ''அருட்குணப் பெரியீர், தங்கள் கருத்து அதுவாயின், அங்ஙனமே செய்க,'' என்றுகூற, அவர் திருக் கோயிலை நோக்கிச் செல்லலானர். அரசனும் அமைச்சர் களும் அவரோடு சிறிது தூரம் சென்று, அவர்பால் விடை பெற்றுக்கொண்டு திரும்பித் தங்களிடம் சென்றார்கள்.

விப்பிரநாராயணர், ''ஆ! எம்பெருமான் பேரருளின் திறம் என்னே! தன்னை முற்றும் மறந்து, ஒரு பெண்ணி னது காதல் வயத்தனாய், மதிமருண்டு கிடந்த கயவனாகிய என்பொருட்டுத் தன் ஆராதனத்திற்கு உரிய பொன் வட்டிலை யெடுத்துக்கொண்டு, தன்னுடைய திருவடித்தாம ரைகள் புழுதி நிறைந்த நிலத்திலே படியச் சென்று, நான் விழைந்த மாதுக்கென அவள் தாயினிடம் கொடுத்தனனே! அன்றியும், அரசன் என்னைச் சிறையில் இட, அவன் கனவிலே தோன்றித் தான் ஆற்றிய செயலைக் கூறி, என்னைச் சிறையினின்று விடுவித்தனனே! தன்பாற் சிறிது

அன்பு கொண்ட எனக்காக இவ்வளவு எளிவந்த செயலைச் செய்தனனே! தன்பால் பேரன்பு கொள்பவர்களுக்காக இன்னும் எத்தகைய எளிவந்த செயல்களைச் செய்வானோ! ஆயர்குல நங்கையாகிய யசோதைப்பிராட்டி கயிற்றால் உரலில் பிணித்துச் சிறுகோல் கொண்டு ஓச்சத் தன் காயாம்பூவண்ணக் காமர் திருமேனியில் முத்தினம் எனக் கண்ணீர்த் துளிகள் சிந்த அழுதிருந்தேங்கிய கூத்தப் பிரான் அல்லனோ? அடியவர்களுக்கு அவன் எளிவந்தருளும் அன்பின் தன்மையை யாரே யுரைக்கவல்லார்? இப் பேருளாளனை மறந்திருந்த என் குற்றத்தை நான் தீர்த்துக்கொள்ளும் வழி யாது? ஆ! அறிந்துகொண்டேன்! அறிந்துகொண்டேன்.

"ஆடிப் பாடி அரங்க வோவென்
　　றழைக்கும் தொண்ட ரடிப்பொடி
ஆட நாம்பெறில் கங்கை நீர்குடைந்
　　தாடும் வேட்கையென் னாவதே"

(பெரு - திரு. 2ஆம் திருமொழி, பா - உ, அடி 3,4.)

என்று கூறியருளியபடி தொண்டர்களுடைய திருவடிப் பொடிகளைத் தலையில் அணிந்துகொள்ளுதலே அக்குற்றத்தைத் தீர்த்துக்கொள்ளுதற்கு உரிய வழியாகும்," என்று எண்ணித் திருக்கோயிலுக்குச் சென்று, அங்குள்ள தொண்டர்களை வணங்கி, அவர்களுடைய திருவடிப்பொடிகளைத் தமது தலையில் அணிந்துகொண்டு, பாடி, அவர்களைப் போற்றினர். அவருக்கு அதனாலே தொண்டரடிப்பொடியார் என்னும் திருப்பெயர் உண்டாயிற்று. அவர் பிறகு திருவரங்கநாதன் திருவடித் தாமரைகளில் நீங்காமல் மொய்த்துக் கிடக்கும் வண்டாய் விளங்குவாராயினர்.

தேவதேவி, அதனை யறிந்து தன் பொருள்களை யெல்லாம் திருவரங்கநாதன் அடியார்களுக்கும் திருவரங்க

நாதனுக்குமாகக் கொடுத்துவிட்டுத் திருவரங்கநாதனுக்குப் பலவகைத் தொண்டுகளைப் புரிந்து, மெய்ஞ்ஞான அன்பராகிய தொண்டரடிப்பொடியாருடைய கூட்டுறவைப் பெற்றதனால் பேரின்ப வீடாகிய பரமபதத்தை யடைந்தனள். தொண்டரடிப்பொடியார் திருவரங்கநாதன் இன்னருளையே எண்ணித் தீயில்பட்ட மெழுகென மனம் கரைந்து, பல படியாகப் பன்முறை போற்றி நாற்பத்தைந்து பாசுரங்களை உடைய திருமாலை யென்னும் பாமாலையையும், பத்துப் பாசுரங்களை யுடைய திருப்பள்ளியெழுச்சி என்னும் பாமாலையையும் புனைந்து, அப்பேரருளாளன் திருவடியில் சூட்டி உலகை வாழ்வித்தருளினர். இவர் திருமாலையின்கண் பதினாறும் பாசுரத்தில் தாம் தேவதேவியின் கண்களாகிய வலையில் சிக்குண்டிருந்ததையும் திருவரங்கநாதன் வலிய வந்து ஆட்கொண்ட செயலையும் குறிப்பித்திருக்கின்றார்.

திருமாலையின்கண்,

"வேதநூல் பிராயம் நூறும்
மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே" (திருமா - 3.)

என வரும் மூன்றும் பாசுரத்தில் ஆடவர்களுடைய குழவிப் பருவம் குமாரப்பருவம் காளைப்பருவம் முதுமைப்பருவம் என்னும் பருவங்களைக் கூறப் புக்க இவர், குழவிப் பருவத்தையும் குமாரப்பருவத்தையும் கூறிப், பின் காளைப் பருவத்தைத் தொடங்கும்போது திருவரங்கச் செல்வ

னூர்க்குத் தொண்டு புரிவதிலேயே உறுதிகொண்டிருந்த தம் மனம் அப்பருவத்திலே அதனை மறந்து, தேவதேவி யின் வயப்பட்டிருந்த செய்தி நினைவுக்கு வர, அப்பருவத் தின் பெயரைச் சொல்லாமல் அப்பருவத்தினை 'அது' எனச் சுட்டுப்பெயரால் கூறினர் என்பர் பெரியோர்.

இவருடைய பாசுரங்கள் யாவும் இன்னிசை உடை யனவாய்ப், பத்திச்சுவை நிறைந்து, தேனினும் இனிமை பயப்பனவாய்ப் பொலிகின்றன. அவற்றுள், சிலவற்றைக் கீழே காண்க.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

"மெய்யர்க்கே மெய்ய னாகும்
விதியிலா என்னைப் போலப்
பொய்யர்க்கே பொய்ய னாகும்
புட்கொடி உடைய கோமான்
உய்யப்போம் உணர்வி னார்கட்
கொருவனென் றுணர்ந்த பின்னை
ஐயப்பா டறுத்துத் தோன்றும்
அழகனூர் அரங்க மன்றே." (திருமா - 15)

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

"கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புனல் அரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி என்னும்
அடியனை அளியனென் றருளியுன் அடியார்க்
காட்படுத் தாய்பள்ளி எழுந்தரு ளாயே." (திருப்ப-10.)

இவரை ஈடும் எடுப்புமில் இறைவன் திருமார்பில் விளங் கும் வனமாலையின் அமிசமானவர் என்பர் பெரியோர்.

## இவர் அவதரித்த மாதமும் நாளும்

### நேரிசை வெண்பா

" மன்னியசீர் மார்கழியில் கேட்டையின்று மாநிலத்தீர்
என்னிதனுக் கேற்றம் எனினுரைக்கேன்-துன்னுபுகல்
மாமறையோர் தொண்ட ரடிப்பொடியாழ் வார்பிறப்பால்
நான்மறையோர் கொண்டாடும் நாள்."

## வாழி திருநாமம்

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

" மண்டங்கு டியதனை வாழ்வித்தோன் வாழியே
மார்கழியில் கேட்டைதனில் வந்துதித்தான் வாழியே
தெண்டிரைசூழ் அரங்கரையே தெய்வமென்றான் வாழியே
திருமாலை ஒன்பதிற்றைந்தும் செப்பினான் வாழியே
பண்டுதிருப் பள்ளியெழுச்சிப் பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவிதனைப் பழித்தசெல்வன் வாழியே
தொண்டுசெய்து துளவத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப் பொடியெம்மான் துணைப்பதங்கள் வாழியே."

# ௪. திருப்பாணாழ்வார்

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

"காட்டவே கண்ட பாதம்
கமலநல் லாடை உந்தி
தேட்டரு முதர பந்தம்
திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி
முனியேறித் தனிபு குந்து
பாட்டினாற் கண்டு வாழும்
பாணர்தாள் பரவி னோமே."

## திருப்பாணாழ்வார் அவதாரம்

சந்தினோடு மணியும் கொழிக்கும் புனற்காவிரி பாயப் பெற்ற சோழநாட்டு அரசர் பலருக்கு உறையூரே தலை நகராக விளங்கியது. அது, மாந்தருக்கு இன்றியமையா தனவாகிய கல்வியும் செல்வமும் வாய்ந்து விளங்குவதாத லின், பூமியாகிய மங்கையின் கண் என்று சொல்லுதற்கு உரியதாகும்; 'ஆழியங்கையனாகிய இறைவன், அக் கண்ணை இடையறாது நோக்கிக்கொண்டிருத்தற்காகவே பரந்தாமத்தை விட்டு வந்து, திருவரங்கத்தில் அரவணையில் பள்ளிகொண்டனன் போலும்' என்று யாவரும் கூறும்படி அமைந்த பெருவனப்பை உடையதாகும். அந்நகரின் சோலைகளில் உள்ள மலர்களின் தேனை அருந்திய வண் டினங்கள் தமக்கு நல்விருந்து அளித்த அம்மலர்களின் புகழை இன்னிசையில் அமைத்துப் பாடுவனபோல இனிமையாகப் பாடும். அந்நகரத்து மாளிகைகளில் தீட்டப் பட்டுள்ள வெள்ளிய சுதையைச் சந்திரன் கண்டு, இத் தகைய வெண்ணிறம் தனக்கில்லையே யென்று அகத்தில் கொண்ட அழுக்காற்றினால் அவன் முகத்திலே தோன்றும்

கறுப்பையே உலகினர் களங்கம் என்கின்றனர். கார்காலத்து அந்நகரத்து மாளிகைகளின் மேல்நிலைகளில் உலவும் மாதர்களின் தோற்றம், மேகத்தின் வரவை நோக்கி வரைகளின் மீது மயிலினங்கள் உலவல் போலும். அம் மாளிகைகளின் மீது மாதர்கள் நிற்கையில் மேகம் வானின்கண் தோன்றித் தங்கி இருத்தல், இந்திரன், "திருப்பாற்கடலையும், அதினின்று திருமகள் தோன்றுதலையும் காட்டும் பல படங்களை இங்கு யாரோ தீட்டி வைத்திருக்கின்றனர்; இவை மிக்க பொருத்தம் வாய்ந்தன; எழில் உடையன; தம்மைத் தீட்டியவருடைய ஓவியக்கலையறிவை யாவரும் புகழும்படி செய்தற்கு உரியன; நன்கு நோக்கத்தக்கன," என்று எண்ணி, வானின்கண் தங்கி நோக்குதல் போலும். அந்நகரில் உள்ள வணிகர்கள்பால் இருக்கும் மணிக்குவியல்களைக் காண்பவர்கள், "குபேரனைச் செல்வத்திற் சிறந்தவன் என்று புலவர்கள் கூறுதல் வெறும் புகழ் உரையே" என்று கருதுவார்கள். அந்நகரின் ஆவணங்களில் மக்களுக்கு வேண்டியனவாகிய எல்லாப் பொருள்களும் கிடைத்தலின், பிற நாட்டு மக்களும் அங்கு வந்து தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டு செல்வார்கள். அந்நகரம் இந்திரனது நகரத்தின் தன்மையை யாவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு அறிஞர் பலரால் ஆய்ந்து அமைக்கப்பட்டது போன்றது. இந்திரன் நகரின் அருகில் அமைந்துள்ள கந்தருவர் பதிபோல அந்நகரின் அருகில் பாணர் சேரி ஒன்று அமைந்து பொலிந்தது. அதில் உறைபவர்களாகிய பாணர்கள் யாவரும், 'உலகத்து உயிர்களை எல்லாம் மகிழ்விக்கும் இசையின் விழைவுக்கு இவர்களே இடமானவர்கள்,' என்று யாவரும் கூறும்படி இசையிற் சிறந்து விளங்கினார்கள்.

அவர்கள் வீணைகளின் இசையோடு குரல் இசை பொருந்தப் பாடுகையில், வானின்கண் உள்ள கந்தருவர்

களும் மாந்தர்கள்போல வடிவுகொண்டு வந்து, அவ்விசையைக் கேட்டு, மனம் உருகித், தம்மை மறந்து மகிழ்ச்சியென்னும் கடலில் மூழ்குவார்கள். அவர்கள் வீணையை மீட்டு, இலக்கணத்தோடு பொருந்த இசை யெழுப்பிப் பாடும்போது விலங்குகளும் பறவைகளும் அங்கு வந்து கூடிக், கேட்டு இன்புறும்.

அத்தகைய பாணர் சேரியில் உலகம் உய்யவும், இசை நலம்பொலியவும், அன்பின் சிறப்பு யாவர்க்கும் விளங்கவும் கார்த்திகைத் திங்கள் உரோகிணி நாளில் ஓர் அமுதனைய மைந்தர் அவதரித்தனர். அவருடைய பெற்றோர்கள் அம் மைந்தரைத் தங்கள் ஆருயிர் எனப் போற்றி வளர்த்து வந்தனர். அவர் திருமகள்நாதன் அருளால் இளமையிலேயே கற்க வேண்டிய இயற்றமிழ் நூல்கள் எல்லாம் நன்கு பயின்று, இசையின் திறமெல்லாம் நன்குணர்ந்து, வீணை வாசித்தலினும் சிறந்து விளங்கினர். அவர் கல்வி, இசைப்பயிற்சி, யாழ் வாசிக்கும் திறம், சீரிய ஒழுக்கம் முதலிய நலங்களால் சிறந்து விளங்கினமையின், மற்றைப் பாணர்களுக்கெல்லாம் தலைவர் என்பது தோன்ற அவரை யாவரும் **திருப்பாணர்** என்று அழைப்பாராயினர்.

தாமரைமலர் சூரியனுடைய கதிர்களையே வேண்டுதல் போல, அவர் மனம் திருமகள்நாதன் அருளையே வேண்டுவதாயிற்று. திருமகள்நாதன் திருப்பெயர்களைக் கூறுதலே அவருடைய நாவுக்கு இன்சுவையமுதமாயிற்று. அப்பெருமானுடைய திருப்புகழைக் கேட்டலே அவர் மனத்துக்கினிய இசையாகும். அவர் நாள்தோறும் காலையில் எழுந்து, நீராடித், திருமண் அணிந்து, துளவமணிமாலையையும் தாமரைமணிமாலையையும் கழுத்திலே தரித்துக் கொண்டு, வீணையைக் கையில் ஏந்திச் சென்று, காவேரியாற்றின் தென்கரையில் திருமுகத்துறைக்கு அருகில்

திருவரங்கநாதனை நோக்கி நின்று, தம்முடைய மனம் முழுதையும் அப்பரமன்பாலே செலுத்தி, அவன் அருட் குணங்கள் அமைந்த பாட்டுக்களை இசையில் அமைத்து, வீணையிசையோடு தம்முடைய குரல் இசையும் பொருந்தி யிருக்கப் பாடுவர். அப்போது அவர் கண்களினின்று தாரை தாரையாக நீர் பெருகிவரும்.

## உலோகசாரங்க முனிவர் திருப்பாணாழ்வாரைத் தம்முடைய தோளில் ஏற்றிக்கொண்டு சென்று திருவரங்கநாதன் முன் விடுதல்

அங்ஙனம் ஒருநாள், பாண்பெருமாள் காவேரியின் தென்கரையில் நின்று, யாழில் இசையைக் கூட்டித், திரு வரங்கன்பாற் பொருந்திய அன்பின் வசத்தராய்க், கேட் பார் மனம் அனலில் இட்ட மெழுகே போல் உருகும்படி பாடிக்கொண்டிருந்தார். திருவரங்கநாதனை ஆராதிப்பவரா கிய உலோகசாரங்க முனிவர் என்பவர் அப்போது காவேரி யில் நீராடித், திருமண் அணிந்து, துளவமணிமாலையையும் தாமரைமணிமாலையையும் கழுத்திலே யணிந்துகொண்டு, திருவரங்கநாதன் திருமஞ்சனத்திற்கு நீர் கொண்டு செல்லப் பொற்குடத்தைக் கையில் ஏந்தி அங்கு வந்தனர். அவர் அப்பாணர் தலைவரைக் கண்டு, கைதட்டிக் கூவி, "அப்பாற்செல்" என்று கூறினர். பாண்பெருமாள் மனம் திருவரங்கநாதனிடத்திலேயே சென்று பதிந்துவிட்டமை யின், அம் முனிவர் கூறியது அவர் காதில் பட்டிலது. ஆத லின், அவர் அசையாமல் நின்றார். அதனைக்கண்ட அம்முனி வர், "என்னே! இப்புலையன் அந்தணர்கள் வருவார்களே நாம் இங்கு இருத்தல் தகுமோ? என்று எண்ணாமல், இங்கு வந்து, இருந்ததேயன்றி, நாம் கைதட்டிக் கூவி, அப்பால் செல் என்று கூறியும் அசையாமல் நிற்கின்றானே! இவன்

என்ன செவிடனு! அன்றி இவன் மனம் இசையில் மயங்கி நிற்கின்றதா! இவர் சொல்லே நாம் ஏன் கேட்டல்வேண்டும் என்னும் செருக்கான எண்ணம் கொண்டுதான் நிற்கின்ருனே? இவற்றுள் யாது? இவன் இங்ஙனம் நிற்பதற்குக் காரணம் என்பதனை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்,'' என்று எண்ணி, ஒரு கல்லை எடுத்து வீசினர். அது பாண்பெருமாளுடைய நெற்றியில் பட்டு உதிரம் பெருகச் செய்தது. அதனுல் அச் சீரிய ஞானச்செல்வர் தெளிவுற்று, முனிவர் எதிர்புறம் சேய்மையில் நிற்பதைக் கண்டு, மனமும் உடலும் நடுங்கி அவ்விடத்தினின்று சென்றுவிட்டனர்.

பிறகு, உலோகசாரங்கமுனிவர், பொற்குடத்தில் காவேரியின் நீரை முகந்துகொண்டு, திருவரங்கநாதன்முன் சென்றனர். அப்போது திருவரங்கநாதன் நெற்றியினின்று செந்நீர் பெருகி வந்து கொண்டிருந்தது. முனிவர் அதனைக் கண்டு, மிக்க அச்சங்கொண்டு, உடல் நடுங்கி, "எம் பெருமான் நெற்றியினின்று இங்ஙனம் உதிரம் பெருகு தற்குக் காரணம் யாதோ? பாண்டவர்களுக்குத் துணை யாகச்சென்று, பார்த்தன் தன் தேர்முன் நின்று, அவர்க ளுடைய பகைவர்கள் எய்த பலபடைகளைத் தன் திரு மேனியில் ஏற்றுக்கொண்டதுபோல இப்போது தன் அன்பர் யாருக்கேனும் துணையாகப் போருக்குச் சென்று, பகைவர்கள் எய்த படையைத் தன் நெற்றியில் ஏற்றுக் கொண்டனனே? அன்றி, வேறு காரணம் உண்டோ? யாதும் தெரிந்திலதே! இதற்கு என் செய்வேன்!'' என்று எண்ணித், துயரக் கடலில் மூழ்கி, மேல் செய்வன செய் தலில் மனம் செல்லாதவராய் வாடியிருந்தனர். பரிதி வானவன், உலகத்து உயிர்களின் நிலையும் இஃதேயாம் என உலகினர்க்குத் தெரிவிப்பவன்போலத் தோன்றி,

வளர்ந்து நின்று, சாயும் நிலையை அடைந்தனன். "பாண் பெருமாள் நெற்றியைத் தாக்கி, உதிரம் பெருகச் செய்த கல் வானத்தையும் தாக்கி அதினின்றும் செந்நீர் பெருகச் செய்ததுபோலும்." என்று எண்ணும்படி வானம் எங்கும் செந்நிறம் பொருந்தி விளங்கிற்று. சூரியன் உலகைச் சுற்றித் திரிந்ததனால் ஆன தளர்ச்சியை ஓர் இடத்தில் சென்று தங்கி, நீக்கிக்கொள்ளச் செல்பவன்போல மேற்றிசையை அடைந்தனன். வன்மையிற் சிறந்த வேந்தன் சேய்மையிற் சென்றிருக்கும் அற்றம் நோக்கி, மெல்ல மெல்ல வந்து, எங்கும் பரவி, மென்மைத்தன்மை உடையாரை வருத்தும் புல்லியரைப்போல இருள் மெல்ல மெல்ல வந்து, எங்கும் பரவிக் காதலரைப் பிரிந்துள்ள மெல்லியரை வருத்துவதாயிற்று.

உலோகசாரங்க முனிவருக்கு நெடுநேரம் தூக்கம் வரவில்லை. திருவரங்கநாதன் நெற்றியினின்று செந்நீர் பெருகுதலைக் கண்டதனால் ஆகிய வருத்தம் தூக்கத்தை அவர்பால் அணுகாதபடி துரத்தியது. அன்றிரவு நெடுநேரம் சென்றபின் திருவரங்கநாதன் திருவருளால் துயிலலானார். அரவணையில் அறிதுயில் கொள்ளும் இறைவன் அவர் கனவிலே தோன்றி, "அருமைச் செல்வனே! இன்று காலை நீ பெரியதொரு பிழையைச் செய்துவிட்டனை. நம்முடைய அன்பராகிய பாண்பெருமாளை இழிந்தவராகக் கருதி, அவரைத் துரத்த எண்ணி, அவர்மீது நீ கல்லை வீசினாய். அஃது அவர் நெற்றியில் பட்டு உதிரம் பெருகச் செய்தது. அக் கல்லே நம்முடைய நெற்றியையும் தாக்கிச் செந்நீர் பெருகச் செய்தது. நாம் தேவர்களுக்காக மாபலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூன்றடி மண் இரக்கக் கருதினோம். உடனே நம்முடைய வடிவம் சுருங்கிவிட்டது. நாம் அவ்வடிவுடன் மாபலிச் சக்கரவர்த்தியிடம் சென்

ரேம். அவ்வசுரர் கோமான் நம்பால் பேரன்பு காட்டினன். அவ் வன்பைக் கண்டவுடன் நம்முடைய வடிவம் மூன்றுலகும் பற்ருதனவாம் என்னும்படி மிகப் பருத்து ஓங்கி வளர்ந்துவிட்டது. நமக்குப் பசியாகும் போதாவது அடியவர்களுடைய அன்பாகிய அமுதினை உண்ணுதபோதேயாகும். உலக முடிவில் நாம் உட்கொள்ளும் உலகங்களும் நம்முடைய பசியைத் தணிப்பனவல்ல. அடியவர்களின் அன்பாகிய உணவே நமது பசியைத் தணிப்பதாகும். பாண்பெருமாள் தம்முடைய அன்பாகிய அமுதை இசையாகிய கறியொடு கூட்டி நம்மை நாடோறும் உண்பிக்கும் சிறந்த அடியவர்; ஆதலின், நீ நாளை விடியலிற் சென்று, காவேரியில் நீராடித் திருமண் அணிந்து, துளவமணி மாலையையும் தாமரைமணி மாலையையும் கழுத்திலே தரித்துக்கொண்டு சென்று, அவரை வணங்கி, உன்னுடைய தோளில் ஏற்றிக்கொண்டு வந்து, நம்மருகில் விடுக,'' என்று கூறியருளினன். உலோகசாரங்கமுனிவர் கனவு கண்டு, உடனே எழுந்து, அருணன் கீழ்த்திசையில் தோன்றியிருத்தலைக் கண்டு, "ஆ! விடியற்காலமாயிற்று. நம்பெருமாள் கட்டளை இட்டருளியபடி நாம் விரைந்து சென்று, அவ் ஆராத காதல் அடியவரை நம்முடைய தோளில் ஏற்றிக்கொண்டு வந்து, நம்பெருமாள் திருமுன் விடுதல் வேண்டும்,'' என்றெண்ணிப் பல மறையவர்களுடன் காவேரியின் ஒருபாற்போய் நீராடித், திருமண் அணிந்து, துளவமணி மாலையையும் தாமரைமணி மாலையையும் தரித்துக்கொண்டு, பாண்பெருமாள் உள்ள இடத்தை நோக்கிச் செல்லலானுர். அப்போது பாண்பெருமாள் காவேரியில் நீராடித், திருமண் அணிந்து, மணி மாலைகளைத் தரித்துக், கையில் வீணையை ஏந்தித், திருமுகத்துறைக்கு அருகில் நின்றுகொண்டு,

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

"பங்கயக் கண்ண னென்கோ
பவளச்செவ் வாய னென்கோ
அங்கதி ரடிய னென்கோ
அஞ்சன வண்ண னென்கோ
செங்கதிர் முடிய னென்கோ
திருமறு மார்வ னென்கோ
சங்குசக் கரத்த னென்கோ
சாதிமா ணிக்கத் தையே"

(திருவாய்-3 திரு. 4 பா. 3)

"சாதிமா ணிக்க மென்கோ
சவிகொள்பொன் முத்தமென்கோ
சாதிநல் வயிர மென்கோ
தவிவில்சீர் விளக்க மென்கோ
ஆதியஞ் சோதி யென்கோ
ஆதியம் புருடனென்கோ
ஆதுமில் காலத் தெந்தை
அச்சுத னமல னையே"

(திருவாய்-3. திரு. 4 பா. 4)

என்று கேட்டோர் மனம் கரையும்படி பாடிக்கொண்டிருந்தார். அப்போது உலோகசாரங்கமுனிவர் பாண்பெருமாள் இருக்கும் இடத்திற் சென்று, அவருடைய திருவடிகளிலே தமது முடிபட வணங்கினர். பாண்பெருமாள் உடனே அவரை நோக்கி, "ஆ! ஈது என்ன தகுதிபற்ற செயலைச் செய்துவிட்டீர்களே! குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து உள்ள பிறப்பினேன் ஆகிய அடியேனை மறையவர்களுட் சிறந்தவராய் விளங்கும் தாங்கள் வணங்குதலாகுமோ?" என்று பதறிக் கூறினர். "இன்தமிழும் இன்னிசையும் செய்த அருந்தவத்தின் பயனாக அவதரித்த பெரியீர்! நீங்கள் அயன் முதலிய தேவர்களும் வணங்குதற்குரிய மேன்மையினை உடையீர்கள். நம் பெருமாளின் திருவுள்ளம் முற்றும் உங்கள்பாலதேயா

யிருக்கின்றது. அப்பரமன் தேவரீரை என் தோளில் ஏற்றிக்கொண்டு வந்து, தன் அருகில் விடவேண்டும் என்று எனக்குக் கட்டளை யிட்டருளினன். தேவரீர், அதனை மறுத்தலாகாது,'' என்று கூறினர். பாண் பெருமாள், “நம்பெருமான் திருவுள்ளம் அஃதாயின், அடியேன் அதனை மறுத்துக் கூறுதல் கூடுமோ? அவன் செய்வன செய்துகொள்க,'' என்று கூறி, வயலின்கண் நாற்றுப்போல வாளா இருந்தனர். உலோகசாரங்க முனிவர் மகிழ்ச்சி கொண்டு, பாண்பெருமாளைத் தம் முடைய தோளில் ஏற்றிக்கொண்டு, தம்முடன் வந்த மறையவர் சூழச் சென்று, திருவரங்கநாதன் முன்னிலை யில் விட்டனர்.

பாண்பெருமாள் திருவரங்கநாதனுடைய மங்கல வடிவினைக் கண்டு, அரவு, தான் இழந்த மாணிக்கம் கிடைக் கப்பெற்றாற் போலவும், தம்முடைய பழைய பொருளை இழந்தவர்கள், மீண்டும் அதனைப் பெற்றாற் போலவும், மலடி மகப்பேற்றை எய்தினாற் போலவும், பிறவிக் குரு டன், கண் பெற்றாற்போலவும் பெருமகிழ்ச்சி யடைந்து, கண்களினின்று அருவி யென நீர் பெருக நின்றார்; ஆடினார்; ஓடித் திருவரங்கநாதன் திருவடிகளில் தம் முடிபட வணங்கினார். “எம்பெருமானே! என்னைப்பெற்ற தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்து; என்னை நீ ஆண்டருளியதற்குக் காரணம் உன்னுடைய இயல்பாகிய அருளேயன்றி, என்பால் அதற்குரிய நலன் சிறிதும் இன்று. அறியாமை மிக்க யான் என் மனத்துள்ளே உன்கண் அன்புகொள்ளச் செய்து, என்னை ஆண் டருளினை. இதற்கு நான் செய்தற்குரிய கைம்மாறு யாதிருக்கின்றது?'' என்று கூறிப் பலமுறையும் வணங்கி நின்றனர். அவர் மனத்துள் மகிழ்ச்சி மிக்கு எழுந்தது.

அவர், அதனால், அவ்விறைவனை இன்றமிழ்ப் பாசுரங்களாற் பாட எண்ணினர். தாயின் உறுப்புக்கள் பலவும் இருக்கக் குழவி தாயினுடைய தனத்தில் வாய்வைத்தல்போல அவர் மனம் முதலில் திருவரங்கநாதனுடைய திருவடியிலே செல்வதாயிற்று. ஆதலின், அவர், அமலன், ஆதிப்பிரான் என்று தொடங்கி, முதலிலே திருவடியைப் பாடினர். அப்பாசுரம் முதலாகப் பத்துப் பாசுரங்களைப் பாதாதிகேசமாலையாகப் பாடிப் பிரணவத்தில் உள்ள அகரம், உகரம், மகரம் என்னும் மூன்று திருவெழுத்துக்களுள் முதல் எழுத்தாகிய அகரத்தை முதற்பாசுரத்தின் முதலினும், இரண்டாம் எழுத்தாகிய உகரத்தை இரண்டாம் பாசுரத்தின் முதலிலும், மூன்றும் எழுத்தாகிய மகரத்தை மூன்றும பாசுரத்தின் முதலினும் முறையே அமைத்துப் பாடினர். அப்பாசுரங்கள் பத்தும் அன்பாகிய அமுதம் நிரம்பிய பொற்குடங்களாய் விளங்குகின்றன. அவற்றை அடியிற் காண்க :

ஆசிரியத்துறை

"அமலன் ஆதிப்பி ரானடி யார்க்கென்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவான வன் நீள்மதிள ரங்கத் தம்மான்திருக்
கமல பாதம்வந் தென்கண்ணி னுள்ளன ஒக்கின்றதே." (பா—1)

கலிவிருத்தம்

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயனென் உள்ளங் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கனென் னமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே." (பா—10)

இப்பத்துப் பாசுரங்களையும் பாடி முடித்தவுடன் திருவரங்கநாதன் வேர் சூடுவோர் மண் பற்றுக் கழற்றுமல் சூடுதல் போலப் பாண்பெருமாளை அவர் திருமேனியோடு

அங்கீகரித்தருளினன். முனிவாகனராகிய பாண்பெருமாளும் யாவரும் காணும்படி திருவரங்கநாதன் திருவடிகளிலே மறைந்தருளினர். அதனைக் கண்ட உலோகசாரங்க முனிவர் முதலிய மறையவர்களும் மற்றையோரும், "வாழ்க நம்பெருமாள் உயர்வு ஒப்பில்லாத இன்னருள். வாழ்க பாண்பெருமாளுடைய அருந்தமிழ்ப் பாசுரங்கள். அவருடைய வான்புகழ் உலகினில் நீடு வாழ்க. வாழ்க திருவரங்கநாயகி," என்று வாழ்த்தி ஆரவாரம் செய்து, ஆடிப்பாடி, ஆனந்தக் கண்ணீர் பொழிந்து, பாண் பெருமாளைப் போற்றி மகிழ்ந்தார்கள். அன்று முதல் பாண் பெருமாளை யாவரும் போற்றி வணங்கிவருவாராயினர்.

## திருப்பாணாழ்வார் அவதரித்த மாதமும் நாளும்

### நேரிசை வெண்பா

"கார்த்திகையில் ரோகிணிநாள் காண்மினின்று காசினியில்
வாய்த்த புகழ்ப்பாணர் வந்துதிப்பால்—ஆத்தியர்கள்
அன்புடனே தானமல னாதிப் பிரான்கற்று
நன்குடனே கொண்டாடும் நாள்."

(உப-ரத்தி-மா. செ—10.)

## வாழி திருநாமம்

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

"உம்பர்தொழும் மெய்ஞ்ஞானத் துறையூரான் வாழியே
உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்தவள்ளல் வாழியே
வம்பவிழ்தார் முனிதோளில் வந்தபிரான் வாழியே
மலர்க்கண்ணை மற்றொன்றில் வையாதான் வாழியே
அம்புவியில் மதிலரங்கர் அகம்புகுந்தான் வாழியே
அமலனாதிப் பிரான்பத்தும் அருளினான் வாழியே
செம்பொனடி முடியளவும் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே."

---

# ரு. நம்மாழ்வார்

**நேரிசை வெண்பா**

திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்
மருவினிய வண்பொருநல் என்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே யெப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்—ஈன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமா நுசன்.

சீர்நிரம்பிய ஞானச் செல்வர்களுடைய மனனகமலரில் விளங்குகின்றவனும், உலகம் யாவையும் தானுளவாக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடையவனும், வேண்டுதல் வேண்டாமை இலாதவனும், உயர்வற உயர்நலமுடையவனும் ஆகிய இறைவனுடைய நிலையினையும் ஆன்மாக்களின் நிலைமையினையும், ஆன்மாக்கள் இறைவனை அடைதற்குரிய நெறியினையும், அதற்குத் தடையாகவுள்ள தன்மையினையும், ஆன்மாக்கள் இறைவனை அடைதலாகிய பேரின்ப வாழ்வினையும் இனிது விளக்கிக் கூறும் மெய்ப்பொருள் நூல்களுள் நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய தமிழ்வேதமே முதன்மையானது என்பர் மெய்ப்பொருள் நூல்களை நன்காய்ந்துணர்ந்த ஆன்றோர்கள்.

"வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந் தோர்விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன் செல்க குணங்கடந்த
போதக் கடலெங்கள் தென்குரு கூர்புனி தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லு மேதொல்லை மூலப் பரஞ்சுடரே"
என்றார் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர்.

"தெரியாத மறைநிலங்கள் தெரிகின்றோமே"
என்றார் வேதாந்ததேசிகர் என்னும் பெரியார்.

சற்றேறக் குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன் ஆந்திரநாட்டில் பேரரசராய் விளங்கின கிருட்டினதேவ ராயருடைய சமூகத்தில் அட்டதிக்கஜங்கள் என விளங்கிய ஆந்திர மாபெருங் கவிஞர்கள் எண்மருள் தலைவராய்ப் பொலிந்திருந்தவராகிய அல்லசானி பெத்தன்ன என்னும் பெரும்புலச் செல்வர், ஆந்திரமொழியில் தாம் இயற்றிய மனுசரித்திரம் என்னும் நூலில் இவ்வாழ்வாரைத் தம்முடைய ஞானக்குரவர் எனக் கொண்டு போற்றிக் கூறியிருக்கும் செய்யுளின் பொருளை நோக்குவோமானால், அவருக்கு இவ்வாழ்வார்பால் இருந்த அன்பும் நன்மதிப்பும் எத்தகையது என்பது நன்கு விளங்கும்.

நான் ஆழ்வார்களுடைய வரலாறுகளை எழுதக் கருதி, இவரும் மதுரகவிகளுமாகிய இருவர் வரலாறுகள் நீங்கலாக மற்றை ஆழ்வார்களுடைய வரலாறுகளை எழுதிவிட்டு இவ்வாழ்வாருடைய வரலாற்றை எழுதத் தொடங்கிய போது, "ஒப்புயர்வு அற்ற இப்பெருமுனிவருடைய மேன்மை விளங்கும்படி இவரது வரலாற்றை எழுதி முடித்தல் எவ்வாறு?'' என்னும் கலக்கம் என் மனத்தில் உண்டாயிற்று. நான் பல ஆண்டுகளுக்குமுன் இவ்வாழ்வாரைப்பற்றி 'மாறன் பஞ்சரத்தினம்' என்னும் ஐந்து பாட்டுக்களைக்கொண்ட நூலைப் பாடினேன். "அவற்றுள், ஒரு பாட்டை அக்கலக்கம் தீர்தற்பொருட்டு முதலில் எழுதிக்கொண்டு, பின் முன்னோர்களுடைய நூல்களைக் கொள்கொம்பாகக் கொண்டு, நமது எழுத்தாகிய கொடியைப் படரவிடலாம்'' என்னும் கருத்து என் மனத்தில் தோன்றிற்று. ஆதலின், அவற்றுள், ஒரு செய்யுளை அடியில் எழுதுகின்றேன்.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தனன தனத்தத் தனதன தனதன

மதுர கவிக்குச் சிறுதொடர் மொழியினில்
மறையி னகத்துப் பொருளுற வருளிய
சதுர னெமக்குத் தனிமுத லிறையவன்
சரண மலர்ப்பொற் படியிணை நினைகுதும்
விதலை வினைசகத் தருமுடி யெனுமது
வெறுவ வுறுத்துச் செறிதர வருபல
விதமெ லகட்டுத் தொடர்தரு பிறவிகள்
வினைக ளொழித்துச் சுகமொடு நிலவவே.

இனி, இவ்வாழ்வாருடைய வரலாற்றினை முன்னோர்கள் அருளிய நூல்களின் உதவியைக்கொண்டு எழுதுதற்கு இவ்வாழ்வாருடைய திருவருள் துணை புரிவதாக.

ஐந்தியல் நூற்களும் அரும்பொருட் பனுவல்களும் நிரம்பிச் சிறந்து விளங்கும் தமிழ்மொழியைச் சங்கங்கள் நிறுவி வளர்த்த நாடு பாண்டிய நாடு. ஆதலின், அஃது உலகில் உள்ள நாடுகளுக்குள் யாவரும் விரும்புதற்குரிய முத்து எனச் சிறப்புறக் கொள்ளும் மேன்மையினை யுடையதாகும் என்பதனைக் குறிப்பிக்கவே அந்நாடு முத்துக்கள் விளையும் இடமாகி விளங்குகின்றது என்று கூறின், அதனை அறிஞர்கள் யாவரும் ஏற்புடையது எனவே கொள்ளுவர். "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து,'' என்று ஔவையார் கூறியருளியது அதனை வலியுறுத்துமன்றே. பொன்னும் மணியும் அணிந்து, சந்தனத்துடன அகிலின் மணம் கொண்டு, பலமலர் மாலை சூடி, தாமரை முகம் பொலியக் குவளைக்கண் மலர்ந்து, வண்மை மிக்க திரைக்கையில் வெள்வளை செறிந்திலகக் கங்கையாம் நங்கையுங் கண்டு வெள்கும்படி அன நடை வாய்ந்து, கொடியிடை துவள வண்டுகளாகிய கட்டியக் காரர் கட்டியம் கூற அசைந்தசைந்து வரும் பொருநை

ஆருகிய செந்நெறி யரசி, தன் ஆற்றலால், அந்நாட்டில் உள்ள உயிர்கள் எல்லாம் தீமை நீங்கி, நன்மை யெய்தி, இன்புற்று வாழச் செய்தலின், வானுலகப் புலவரும் மண்ணுலகப் புலவரும் புகழும் நலம் அமைந்து விளங்குவது ஆகிய பாண்டிய நாட்டில் பல்வளம் செறிந்து விளங்கும் திருக்குருகூர் என்னும் திருநகரம் ஒன்றுண்டு. அந்நகரில் உள்ள மாணுக்கர்கள் பாடம் பண்ணும் தொல்காப்பியச் சூத்திரங்களைக் கிள்ளைகள் கேட்டுச், சோலையின் ஒருபாலிருந்து, திருத்தமுறக் கூறுதலைக் கேட்கும் பிற நாட்டவர்கள் அந்நகரமக்களுடைய கலைப்பயிற்சியின் திறத்தினைக் கொண்டாடுவார்கள். அப்பதியின் அச்சோலைகளில் உள்ள மலர்களின் தேனை அருந்திய வண்டுகள் இனிமையாக முரலுதல், இயல்வது கரவாமல் அளிப்பவர்கள் புகழைப் புலவர்கள் இசையின் அமைத்துப் பாடுவது போலும். அந்நகரின் வெண்சுதை தீட்டிய உயர்ந்த மாடங்களின் உச்சியின்கண் நிற்கும் கொடிகள் மேகத்தைச் சார்ந்து நிற்கும் தோற்றம், திருமகள் நாதனைச் சார்ந்தவர்கள் தூய மனத்தினையுடைய மேலோர்களும் தங்கள் அடிகளைப் பற்றிப் பணியும் மேன்மையினையுடையவர்களாய் விளங்குவர் என்பதை அனைவருக்கும் தெரிவிப்பதுபோலும். அச்சோலைகளிற் செந்தாமரை மலர்களில் வெள்ளிய அன்னங்கள் பொருந்தியிருத்தல், செந்நெறியினைச் சார்ந்தவர்களையே தூயவர்கள் சார்ந்திருப்பர் என்பதனைத் தெரிவித்தல் போலும். அப்பதியில் அலைமகளும் கலைமகளும் ஒருங்குகூடி யிருப்பர் என்பதனைக் குறிப்பிப்பனபோல அப்பதியின்கண்ணுள்ள பொய்கைகளில் செந்தாமரையும் வெண்டாமரையும் ஒருங்கு பொருந்திப் பொலிவுறும். குளத்துநீர், ஏரிநீர், ஓடைநீர், ஆற்றுநீர் என்பன முதலியவாக வெவ்வேறு பெயர் பெறி

னும், நீர் ஒன்றே யாதல்போல வகுப்புவகையான் வெவ்வேறு பெயர் பெறினும், மக்கள் யாவரும் ஒருதன்மையரே என்பது அப்பதியின்கண் உள்ள மாந்தர்களின் உறுதியான கருத்து; ஆதலின், அந்நகரில் உறையும் பல வகுப்பினரும் நீரும் நீரும் சேர்ந்தாற்போல வேற்றுமையின்றி ஒற்றுமையுடையராய் வாழ்தலைத் தங்கள் முதன்மையாகிய குறிக்கோளாகக் கொள்ளும் தன்மையராவர். அப்பதியினர் தீய சொற்களை வழுக்கியும் தம் வாயாற் சொல்லாதவர்கள். ஈதலும், அதனால் இசைபட வாழ்தலும் ஆகிய இவற்றைப்போல மக்கள் உயிர்க்குப் பயன் செய்வன பிறவில்லை எனக் கொண்டார்கள். ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததென்று ஓம்புபவர். உலகத்து மக்கள் தம்முடைய நல்வாழ்வைக் கருதிச் செய்யும் தொழில்கள் எல்லாவற்றினுள்ளும் உழவுத் தொழிலே உயர் நிலையில் வைத்தற்குரியது ஆதலானும், அத்தொழிலைப் புரிவார் பிற தொழில்களைச் செய்வார் எல்லாரையும் தாங்குதலாலும், அவர்களை மக்களின் வாழ்க்கையாகிய தேரைத் தாங்கிச் செலுத்தும் அச்சாணி யென்றார் திருவள்ளுவர். அதனை,

"உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து"

என்றதனால் அறிக. அன்றியும் அவர், உழுதொழிலைச் செய்து, அதனால் உழுதுண்டு வாழ்கின்றவர்களே தமக்கு உரியவர்களாய் வாழ்கின்றவர் ஆவர். மற்றவர் எல்லாம் பிறரைத் தொழுதுண்டு, அவரைப் பின்பற்றிச் செல்கின்றவர் ஆவர் என்றனர்.

### ஆழ்வாருடைய திருமரபின் மாண்பு

அப்பதியில் அவ்வித மாண்புடைய வேளாண் குலத்தில் அப்பதியை ஆளும் உரிமையுடையார் மரபில் (1)

திருவழுதி வளநாடர் என்னும் ஓர் அருங்குணச் செல்வர் தோன்றிப் பாண்டிய மன்னர்களுடைய புகழ் நாற்றிசையி னும் பரவுதற்குக் காரணமான செயலை உடையவராய் விளங்கினர். அவருக்கு (2) அறத்தாங்கியர் என்னும் செந்நெறிச் செல்வர் மைந்தராய்த் தோன்றித் தம் பெயருக் கேற்ப அறம் தாங்கும் இயல்பினராய் விளங்கினர். அவ ருக்கு மிக்கார் புகழும் நற்குணச் செல்வராகிய (3) சக்கர பாணியார் என்பவர் மைந்தராய்த் தோன்றினர். முச் சங்கம் புகழும் (4) அச்சுதர் என்பவர் அவருக்கு மைந்த ராய்ப் பிறந்தனர். (5) செந்தாமரைக் கண்ணர் அவ ருடைய அருந்தவச் செல்வராய்ப் பிறந்தனர். அவ ருடைய அருமைச் செல்வர் (6) பொற்காரியார் என்பவர்.

இவர்கள் யாவரும் திருமகள்நாதன் திருவடிகட்கு வழிவழி ஆட்செய்யும் தொண்டர்களாய் விளங்கினர்கள். அத்தகைய சீரியல் குடியில் வந்தவராகிய பொற்காரியா ருக்கு அவர் குலம் செய்தவமோ! நிலம் செய்தவமோ செந்தமிழ் செய்தவமோ! என்று யாவரும் எண்ணும்படி ஓர் அருமை மைந்தர் தோன்றினர். பொற்காரியார் அம் மகப்பேற்றால் பெருமகிழ்ச்சி எய்தி, வறியவர்கட்கும் சான்றோர்கட்கும் வேண்டுவனவற்றை வழங்கினர். பின்பு, பத்துநாளும் கடந்த இரண்டாம் நாள் செய்வன செய்து, அம்மகவுக்குக் காரி எனப் பெயரிட்டனர். காரியார் குழவிப் பருவத்தில் தம்முடைய மழலை மொழிக ளாலும் தளர் நடையினாலும் பெற்றோரையும் மற்றோரை யும் மகிழ்வித்து வந்தனர். பிறகு, ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கத் தொடங்கிப் பல கலைகளையும் தாம் முன்னே தேடிவைத்த பொருளை எளிதில் பெறுவாரைப்போலக் கற்றுணர்ந்து கலைநிரம்பிய மதியெனப் பொலிந்து விளங் கினர். அவர் காளைப் பருவம் எய்தியபோது கண்டோர்

யாவரும், "இவன் முக்கண் மூர்த்தியின் நெற்றிக்கண்ணால் எரிக்கப்படாத மன்மதன் போலும்," என்று கூறத்தக்க எழில்கொண்டு பொலிவுற்றனர். அறிவும் ஒழுக்கமும் அன்பும் அருளும் அவரைவிட்டு நீங்காத இயற்கைச் செல்வங்கள் என்னும்படி அவர்பால் செறிந்தமைந்து விளங்கின.

## காரியார் திருமணம்

பொற்காரியார், காரியாருடைய அவ்வித மேன்மையாகிய தன்மைகளைக் கண்டு, மகிழ்ந்து, அவருக்கேற்ற நற்குணச் செல்வியைத் தேடி அவருக்கு மணம்புரிவிக்கக் கருதினர். அப்போது திருவண்பரிசாரத்தில் வாழ்பவரும், குடி, குணம், ஒழுக்கம், அன்பு முதலியவற்றால் தம்மோடு ஒப்பவரும் ஆகிய திருவாழ்மார்பர் என்பவருடைய அருந்தவச் செல்வியே தம்முடைய மைந்தருக்கேற்ற நல்லியல் செல்வி யென்னும் கருத்து அவர் மனத்திலே தோன்றியது. உடனே பல பெரியோர்களிடத்தும், தமது மனைவியாரிடத்தும், உறவினரிடத்தும் தமது கருத்தைக் கூறினர். அவர்கள் யாவரும் மிக்க மகிழ்ச்சியுடன் அவர் கருத்தை ஆதரித்துக் கூறினர். பொற்காரியார், காரியாருடைய கருத்தும் அதற்கு இசைந்ததாயிருத்தலை அவர் நண்பர்கள் மூலமாக வினவி உணர்ந்து கொண்டனர். பிறகு, அவர் அப் பதியில் எழுந்தருளியுள்ள திருமகள்நாதனை வணங்கிப் பெரியோர்களுடனும், உறவினருடனும், தம் மனைவியாருடனும் ஒரு நல்ல நாளிலே புறப்பட்டுத் திருவண்பரிசாரத்திற்குச் சென்றனர். பொற்காரியார் தமது வருகையைத் திருவாழ்மார்பருக்குத் தெரிவிக்கும்படிச் சிலரை அனுப்பியிருந்தனர். அவர்களால் பொற்காரியார் வருகையை முன்னாக அறிந்திருந்த திருவாழ்மார்பர், தம்முடைய உறவினர் முதலியோர்

புடைசூழச் சென்று, பொற்காரியாரை எதிர்கொண்டு அழைத்துவந்து, செய்வன செய்து, இன்மொழிகள் கூறிப் பலவகையான உபசாரங்களைச் செய்தனர். பொற்காரியார் மகிழ்வுற்று அவருடைய வாழ்க்கையின் நலங்களை வினவி, அறிந்து மகிழ்வுற்றனர்.

திருவாழ்மார்பர் பொற்காரியாருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் அறுசுவை அடிசிலை அமைப்பித்தனர். அனைவரும் அருந்தியபின் திருவாழ்மார்பர் பொற்காரியாரை நோக்கி, "அன்புடையீர், அருங்குணச் செல்வராகிய தங்கள் வரவு, உவாமதியின் வரவால் கடல் நீர் பொங்கி யெழுதல்போல என் மனத்தில் மகிழ்ச்சி பொங்கி எழச் செய்தது. தங்கள் வரவை யான் என்னைத் தானே வந்தடைந்த நல்வினையின் பயன் எனக் கருதுகின்றேன். தங்கள் வருகை என்னால் தங்களுக்கு ஏதேனும் ஒன்றைச் செய்வித்துக்கொள்ளுதலை உட்கொண்டதாயின், அதனைத் தெரிவிக்கக் கோருகின்றேன்," என்றனர். பொற்காரியார், திருவாழ்மார்பரை நோக்கி, "அன்புடையீர், தங்கள் இன்மொழிகள், என்னை மகிழ்ச்சியின் எல்லையைக் காணச் செய்து, என் மனத்தினைக் கைக்கொண்டு, என்றும் தங்கள் அன்பில் ஈடுபட்டிருக்கும் விழைவுடையதாகும் படி செய்வித்துக்கொண்டன. அவை யெனது வரவினது உட்கோளாகிய பயிரைச் செழித்து வளரச் செய்யும் மழை நீர் ஆயின.

என் வரவு தங்களால் செய்வித்துக்கொள்ள உட்கொண்டது ஒன்றுண்டு. அது தங்கள் உறவை நெருங்கியதாகச் செய்வித்துக் கொள்ளுதலேயாகும். அஃதாவது, என் அருமை மைந்தன் காரிக்குத் தங்கள் அருங்குணச் செல்வியாகிய உடையநங்கையை இல்லக்கிழத்தியாக்க வேண்டும் என என் மனம் விரும்பியது. அதற்குத்

தாங்கள் தங்கள் உடன்பாட்டை அளிப்பதேயாகும்'' என்றனர். திருவாழ்மார்பர், ''அன்புடையீர், தங்கள் வரவின் உட்கோள் எனக்குப் பெறுதற்கரிய பெரும் பேறேயாகும். சிறிதுபோது நான் உட்சென்று வருதற்கு விடை அளியுங்கள்,'' என்று கூறி விடைபெற்றுச் சென்று, தம்முடைய இல்லக்கிழத்தியாரை யழைத்து, அவரிடம் பொற்காரியாரது கருத்தைத் தெரிவித்தனர். அவ்வம்மையார், ''என் அன்புக்குரியீர், பொற்காரியாருடைய செல்வரை நம்முடைய சுற்றத்தினர் வீடுகளில் நிகழ்ந்தனவாகிய திருமண முதலிய விசேட நாட்களில் நாம் பல முறை பார்த்திருக்கின்றோம்; நம்முடைய செல்வியும் பார்த்திருக்கின்றனள். அவரை மணந்து கொள்ளுதலில் நம்முடைய செல்விக்கு விருப்பம் உண்டு என்பதனையும் அவள் தோழியர்களால் அறிந்துகொண்டிருக்கின்றேன். எனக்கும் அது விருப்பமானதே,'' என்று கூறினர். திருவாழ்மார்பர் உடனே பொற்காரியாரிடம் சென்று, ''பெற்றேன் நான் தங்கள் நெருங்கிய உறவை. அன்புடையீர், யான் தங்கள் நெருங்கிய உறவினன் ஆகும் பெரும்பேற்றைப் பெறுதலைத் தடைசெய்வது எதுவும் இன்று என்பதனைத் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். அத் திருமணத்தை இவ்விடத்திலேயே நடத்த விரும்புகின்றேன். அதில் தங்கள் விருப்பம் யாதோ? அதனை அறிய விரும்புகின்றேன்,'' என்றனர். பொற்காரியார் திருவாழ்மார்பரை நோக்கி, ''அன்புடையீர், அத் திருமணத்தை இவ்விடத்திலேயே நடத்துவதற்குத் தடை யாதுமின்று. அவ்வாறே செய்தலாம்,'' என்று கூறித், திருக்குருகூருக்குச் சென்று காரியாரை அழைத்து வரும்படி சிலரை அனுப்பினர். அவர்கள் சென்று, காரியாருக்கு அவருடைய தந்தையார் கூறியதைத் தெரி

வித்து, அவரைச் சிறந்ததோர் தேரிலே ஏற்றி, மற்றும் வரவேண்டிய நண்பர்கள், சுற்றத்தார் முதலியவர்களோடு அவரைத் திருவண்பரிசாரத்திற்கு அழைத்து வந்தார்கள். உடனே, திருவாழ்மார்பரும் பொற்காரியாரும் சோதிடரைக் கொண்டு அத்திருமணத்திற்கு நல்ல நாளைக் குறித்துக்கொண்டு, அதனை நண்பர்கள் உறவினர் முதலியோருக்கு அறிவித்தற்குத் திருமுகங்களை அனுப்பினார்கள். திருமணநாளுக்கு இரண்டு நாள் முன்னாகப் பலரும் தேர்களிலும் புரவிகளிலும் பலவகை ஊர்திகளிலும் இவர்ந்து வந்து, திருவண்பரிசாரத்திற் கூடிவிட்டனர். சிலர் திருவாழ்மார்பருடைய மனையைச் சூழ இடப்பட்டுள்ள பந்தர்களை அலங்கரித்தனர். சிலர் சோலைகளுக்குப் பேரெழிலை அளித்தனர். சிலர் மண்டபங்களைப் பொலிவுறச் செய்தனர். திருவாழ்மார்பர் தம்முடைய மாளிகைகளுள் பெரியதொரு மாளிகையில் அத்திருமணத்தை நடத்தத் தீர்மானித்தனர். அம்மாளிகை அமரரும் கண்டு வியக்கும்படி ஒப்பனை செய்யப்பட்டது. அதில் தேவருலகத்து மண்டபத்தினும் சிறந்து விளங்கும்படி மணமக்கள் அமர்தற்குரிய பந்தல், மண்டபத்தின் வடிவாக அமைக்கப்பட்டது அப்பந்தலில் மணமலர் மாலைகளும் மணிமாலைகளும் நாலவிடப்பட்டன. ஓவியர்கள் அப்பந்தரில் சில இடங்களில் கிடைகளால் கதிர் முற்றிய நெற்பயிர் விளைந்துள்ள வயல் வடிவம் அமைத்து, அப்பயிரின் கதிர்களைக் கவரக் கிள்ளைகள் வந்திருப்பது போன்ற உருவங்களை அமைத்தனர். சில மாதர்கள் அவற்றைக் கண்டு உண்மையாகிய பயிர்கள் கிளிகள் என்றே எண்ணி, அக்கிள்ளைகளை ஓட்டுதற்காக அருகிற் சென்று, அவை உண்மையான பயிர்களும் கிள்ளைகளும் அல்ல என்பதை யுணர்ந்து, தங்கள் மலர் முகத்தில் புன்னகையின் ஒளிதவழத்

திரும்பினார்கள். சில இடங்களில் தேமாமரங்களில் உள்ள கனிகளை அணில்கள் சென்று தின்றுகொண்டிருப்பது போன்ற உருவங்கள் அமைந்திருந்தன. அவற்றைக் கண்ட சில இளஞ்சிறுவர்கள் அக்கனிகளைப் பறித்துத் தரும்படி தங்கள் தாயர்களை வேண்டி அரற்றினார்கள். அத்தாய்மார்கள், "அருகிற் சென்றால், அவ்வணில்கள் கடித்துவிடும்,'' என்று கூறி, வேறு கனிகளைக் கொடுத்து, அம்மைந்தர்களைத் தேற்றினார்கள். மற்றும் சில இடங்களில் கரும்பாலைகளினின்று புகை பெழுவது போலவும், சிலர் கரும்பை ஆலையிலிட்டு, ஆட்டிச் சாற்றை யெடுத்துக் காய்ச்சுவது போலவும், உருவங்கள் அமைந்திருந்தன. சில இடங்களில் வெற்றி வீரர்களுக்கு மன்னர்கள் பொன் உறையிலிட்ட வாட்களைப் பரிசாக வழங்குவது போன்ற வடிவங்கள் விளங்கின. சில விடங்களில் வாழை மரங்களில் பழுத்த வாழைக் குலைகள் இருப்பது போன்ற உருவங்களும் பொலிந்தன. சில இடங்களில் சில மரங்களில் நன்றாய்ப் பழுத்துள்ள பலாக்கனிகளின் மீது தென்னையின் நெற்றுக்கள் வீழ்தல்போலவும், சில மரங்களின்மீது அவ்வாறு நெற்றுக்கள் வீழ்தலால், அக்கனிகள் பிளவுண்டு அவற்றினின்று சாறு வழிந்து வருவதுபோலவும் அமைந்த உருவங்கள் காணப்பட்டன. சில இடங்களில் வானவர்கள் மலையை நட்டுப் பாம்பாகிய கயிற்றால் அதனைப் பிணித்துத் திருப்பாற்கடலைக் கடைவதுபோலவும், திருப்பாற்கடலினின்று திருமகள் தோன்றுவது போலவும், அங்ஙனம் தோன்றிய திருமகள் கருமுகில் வண்ணன் திருமார்பிற் சென்று தங்கியிருப்பதுபோலவும், அயன் முதலிய தேவர்கள் அவர்களை வணங்குவது போலவும் விளங்கும் எழில் மிக்க உருவங்கள் காட்சி யளித்தன.

வள்ளுவர்கள் யானைகளின்மீது இவர்ந்து சென்று, பறையறைந்து, அந்நகர மக்களுக்கு அத்திருமணத்தினைத் தெரிவித்தார்கள். நகரமாந்தர்கள் வீடுகளைப் பல வகையாக அலங்கரித்து, தெருக்களில் பழைய மணல்களை நீக்கிப், புது மணல்களைப் பரப்பிப், பலவகை மணிகளின் பொடிகளால் கோலமிட்டுப், பொற்குடங்களில் நீரையமைத்து வைத்து, தோரணங்களை நாட்டி, அவற்றில் மலர் மாலைகளை நாலவிட்டார்கள். குறித்த நாளில் மணமகனாராகிய காரியார் நீராடி அழகுறத் திருமண் அணிந்து, தமக்கென வமைந்த ஆதனத்தில் சென்று அமர்ந்தனர். உறவினர் அவரைப் பல சிறந்த ஆடையணிகளால் அலங்கரித்தனர். பிறகு, பொற்காரியார் கூறக் காரியார் சிறந்ததொரு தேரில் இவர்ந்து, உறவினர் முதலியோர் சூழ உலாவரலானார். அவரைக் கண்ட நகரமாந்தரிற் சிலர், "நாம் அறக்கடவுளை நேரிற் கண்டு களித்து நலம் எய்துதற்பொருட்டு திருவாழ்மார்பர், இங்ஙனம் அக் கடவுளைத் தேரில் ஏற்றி இந்நகரில் உலாவரச் செய்கின்றனர் போலும்," என்றார்கள். சிலர், "அறிவின் ஒளி முகத்துப் பொலிய விளங்கும் இவரது இல்லக்கிழத்தியாகும் பேற்றைப் பெற்ற உடையநங்கையின் நல்வினை அளவிடற்கு அரியதேயாம்," என்றனர். சிலர், "இவர் நம்முடைய உடையநங்கையுடன் கூடி இன்புற்றுப், பல்லாண்டு வாழ்ந்து, இராமனையும் கண்ணனையும் போன்ற மக்களை ஈன்று, உலகினுக்கு நலம் பல புரிபவராக," என்று வாழ்த்தினர். சிலர், நம்முடைய திருவாழ்மார்பர் இவ்வருங்குணச் செல்வரைத் தம்முடைய மருகராகப் பெற்றது மிதிலை வேந்தன் இராமபிரானைத் தன் மருகனாகப் பெற்றது போன்றதே," என்றனர். சிலர், "இவரைத் தம்முடைய மைந்தராகப்

பெற்ற பொற்காரியார் தவம் இத்தகையது என்று எவாற் கூற இயலும்,'' என்றனர். காரியார் இவர்ந்த தேர், இங்ஙனம் கண்டோர் யாவரும் மனம் மகிழ்ந்து புகழ்ந்து வாழ்த்தச் சென்று, அந்நகரில் உள்ள தெருக்களில் உலவி, திருமண மாளிகையின் எதிரில் வந்து நின்றது. திருவாழ் மார்பரும், இளமங்கையாரும், முதுமாதரும், அவர்களுடைய கொழுநர்களும் எதிர்கொண்டுவந்து, செய்வன செய்து, காரியாரைத் திருமண மாளிகைக்குள் அழைத்துச் சென்று அவருக்கென அமைத்திருந்த ஆதனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். அம்மாளிகையில் மகளிரும் ஆடவரும் இளம் சிறுரும் வந்து நிறைந்தனர். அம் மாளிகையில் வந்து நிறைந்த மக்களின் பெருந்திரளைக் கண்ட புலவர்கள், ''வீடுகளுக்கமைந்த பெயர்களுள் நகர் என்னும் பெயர் மற்ற வீடுகளுக்குப் பொருந்துவதன்று; இம்மாளிகைக்கே பொருந்துவதாம்,'' என்று கூற லானார்கள்.

சில மலர்க்குழல் மங்கையர்கள் சூரியனுடைய கதிர்கள் நாணும்படி ஒளிவீசும் மணிவிளக்குகளையும், குளிர்ந்த முளைகள் பொருந்திய பலவகைப் பாலிகைகளையும், பொன்னால் அமைந்த விளிம்புகளை யுடையனவும் மதியை ஒப்ப வெண்ணிலவை வீசும் பளிங்குக் கல்லால் அமைந்தனவுமாகிய திண்ணைகளில் வரிசையாக முறையுற வைத்தார்கள். பல இடங்களிலும் நறுமணம் வீசும் மலர் மாலைகளை நாலவிட்டு, அகிற்பொடிகளையும் சந்தனப் பொடிகளையும் தெளித்து, எங்கும் நறுமணம் கமழச் செய்தார்கள். வீணை, குழல், மத்தளம், கஞ்சக்கருவிகள் முதலியவற்றின் இன்னிசைத்தேனை அனைவரும் பருகினர்.

முதியோரும் பொற்காரியாரும் உடையநங்கையாரை அழைத்துவரும்படி திருவாழ்மார்பரை நோக்கி யுரைத்

தனர். அவர் உடையநங்கையாரை அழைத்து வரும்படி சில மலர்க்குழல் மாதரிடம் கூறினர். அம்மங்கைபர்கள் சென்று, உடையநங்கையார் தம் அன்னையருக்குச் சொல்ல, அவர் ஏவலால், அவர் தம் தோழியர்கள் உடைய நங்கையாரைத் தூநீராட்டி, ஒளிமிக்க பொற்பாவையை ஒப்பனை செய்வார்போல அலங்கரிக்கத் தொடங்கி, அவரது கடல் அறலின் எழில் தோற்க விளங்கும் குழலில், நறுமண மலர்களால் வட்டயாகத் தொடுக்கப்பட்ட சிகழிகை என்னும் மாலையைச் சூட்டினார்கள். அது மதி தன்னைப் பற்றவரும் கரும்பாம்புக்கு அஞ்சி ஓர் இருள் நிறைந்த இடத்தினுட் சென்றிருந்து, அவ் அரவு வருகின்றதா? என்று எட்டிப் பார்ப்பதுபோல் விளங்கியது. அவரது நெற்றியில் நாலும்படி சுட்டி யென்னும் அணியை அணிந்தார்கள். சூரியன் தன் கதிர்கள் ஆகிய வாட்களை வீசித் தங்களை அழிக்காதபடி பல உடுக்கள் ஒன்றாய்த் திரண்டு சென்று மேகமாகிய காவல் இடத்தின் அருகிற் சேர்ந்திருப்பது போலத் தோன்றியது. முன் நெற்றி மயிரிலே பூட்டுதற்குரிய ஒளிமிக்க மணிகளைப் பதித்த பூட்டு என்னும் அணியை ஒளிவிட்டு விளங்கும்படி அணிந்தார்கள். அது, மேகமாகிய தாய், பிறைச்சந்திரனாகிய தன் குழவியை இராகு என்னும் அரவு விழுங்க வரின், அதனை வெட்டி விடுவதற்காக வாளைக் கையிற் பற்றி விதிர்த்துக் கொண்டிருப்பதுபோலப் பொலிந்தது. அவர் காதுகளில் மணிகளுள் ஒளியின் இவற்றை ஒப்பன இல்லை யென்று கூறும்படி சிறந்த ஒளியினை உடையனவாகிய மணிகளைப் பதித்த குழைகளை அணிந்தார்கள். அவை, திருமகள் நாதன் ஆழிப்படை, அப் பெருமானைத் தம்மருமை மைந்தராகப் பெறும் நற்றவத்தினை உடைய அச்செல்வியாருடைய கண் அருளைப் பெற அவர் காதுகளில் ஈருருவங்கொண்டு

வந்து தங்கியது போலும் என்று கூறும்படி இலகின. அவருடைய குயிலிசை காட்டும் சங்கம்போன்ற கழுத்தில் குற்றமற்ற பலவகை மணிகளைப் பதித்த பலவகை அணிகளைப் பலமுறை நன்காய்ந்து அணிந்தார்கள். அவை, சங்கநிதியையும் அக் கழுத்தையும் வேறு பிரித்து அறிதற்கிட்ட அறிகுறியாம் என்று கண்டோர் கூறும்படி விளங்கின. அவர் மார்பிலே ஒளிவிட்டு விளங்கும்படி பன்மணிமாலைகளை அணிந்தார்கள். அவை அவர் எழிலில் தேவமாதர்களை வெற்றிகொண்டதனை விளக்க இட்ட வெற்றிமாலைகள் எனப் பொலிந்தன. பல மணிகள் இழைத்த அவர் கைகளில் கடகம் என்னும் அணியை இட்டார்கள். அவை, அக்கைகள் ஏற்றார்க்கு வேண்டுவன அளிக்கும் பதுமநிதிகள்; ஆதலின், அவற்றைக் காத்தல் வேண்டும் என்று எண்ணிச் சூரியன் இரண்டு வட்ட வடிவங்களைக் கொண்டு அக் கைகளைக் காவலாகச் சூழ்ந்திருப்பதுபோல விளங்கின. அவர் தோள்களில் மான் மதம் சேர்ந்த சந்தனக் குழம்பினாலே பூங்கொடியின் உருவமும் மன்மதனுடைய வில்லுருவமும் எழுதினார்கள். அவை, பூங்கொடிபோலும் மென்மைத் தன்மையை உடைய மடவாரே, மன்மதனுடைய சேனை யென்பதனைக் குறிப்பிப்பனபோன்று பொலிந்தன. அவர் அடிகளில் சிலம்புகளை அணிந்தார்கள். அச்சிலம்புகள், இம்மெல்லியார் அடிகள் அனிச்சப் பூவினும் மெல்லிபன என்பதனைப் பலபடத் தெரிவிப்பனபோல் ஒலித்தன. அவர் கண்களில் மைதீட்டினார்கள். அஃது, இக்கண்கள் அருளில் மேகத்தினும் சிறந்தன என்பதனைக் குறிப்பன போலத் திகழ்ந்தன. அவர் நெற்றியில் திலகம் இட்டனர். அஃது, இம்மாதர் நல்லார் கற்புடைய மங்கையர்களுக்குள் திலகம் அன்னார் என்பதைத் தெரிவிப்பது போலத் திகழ்ந்தது.

கூந்தலில் பலவகை மலர்களைச் சூட்டிக், கழுத்திலும் பல வகை மலர்மாலை இட்டுப், பொன்னுடை அணிவித்தபின் அவருக்கு நெய்விளக்கைச் சுற்றிக் காட்டி, நீரும் பூவும் தூவித், திருமகள்நாதனை வணங்கித் தொழுது, அந்தணர்களுக்கும் சான்றோர்களுக்கும் செம்பொன் ஈந்து, சிறு வெண் கடுகுப் பொடிகளை நெற்றியில் தரிப்பித்துச், செந்நிறம் கலந்த ஆலத்திநீரைச் சுற்றி, அவரை வலப்புறமாகச் சூழ்ந்து வந்து காப்பிட்டு, இள அன்னத்தைச் சூழ்ந்து வரும் முது மயில்கள் போல் அச்செவிலியர் அவரைச் சூழ்ந்திருந்து அழைத்து வரலாயினர். அவர் தாம் அணிந்துள்ள அணிகலன்களின் ஒளி எங்கும் பரவவும், சிற்றிடை துவளவும், மதிமுகத்தில் பனியரும்பவும். மெல்லடிகளில் இட்ட சிலம்புகள் அக்கற்பரசியாரது வருகையைத் தெரிவிக்க வொலிக்கும் பறையென வொலிக்கவும், பூதேவியின் உடல்வலி நீங்க மலர்களைக் கொண்டு ஒற்றுதல்போலச் சிறடி பெயர்த்து நடந்துவந்தனர். அவரைக் கண்டவர்கள் காரியாரையும் உடன் நோக்கி, "இவர்களைத் திருவும் திருமாலுமே என்று கூறுவதன்றி, வேறு கூறுதல் இயலாது," என்று கூறினர்கள். உடையநங்கையார் வணங்க வேண்டியவர்களை வணங்கினர். திருவாழ்மார்பர் அவரைத் தம்மருகில் உட்காருவித்துக் கொண்டனர். திருவாழ்மார்பரும் பொற்காரியாரும் அவையின் இடையில் ஒருவருக்கொருவர் எதிர் எதிராக விற்றிருந்தார்கள். திருமணத்திற்குமுன் நடத்தற்குரிய நிச்சயதாம்பூலம் என்னும் சடங்கு நடந்தது. பிறகு காரியாரைச் சில முதியவர்கள் ஒரு கொழும்பொன் அறைக்கு அழைத்துச் சென்று, அவரைப் பலவகை அணிகளால் அலங்கரிக்கத் தொடங்கி, அவர் உடலிற் கலவைச் சாந்து பூசிப், பல வகை அணிகளை அணிவித்துப் பொன்னுடை உடுத்துக்

கொள்ளச்செய்தார்கள். காரிபார் தோழர், முதியவர்கள் சூழ, அவரை யழைத்து வந்து கலியாண மக்களுக்காக இடப்பட்ட மணையில் வீற்றிருக்கச் செய்தார். உடைய நங்கையாரைத் தோழி, முதுமாதர்கள் சூழ அழைத்து வந்து காரியார் அருகில் வீற்றிருக்கச்செய்தனள். இன்னியங்கள் ஒலித்தன. மலர்க்குழல் மங்கையர்கள் மங்கலப் பாடல்களைப் பாடினார்கள். முதியவர்கள் மலர்கள் தூவி வாழ்த்தினார்கள். கல்வி கேள்விகளிற் சிறந்த சான்றோர்கள் பல்லாண்டு பாடினார்கள். அப்பொழுது எழுந்த ஒலி, மேகத்தின் ஒலியினும் மிக்கு விளங்கியது. வேள்வீ வளர்க்கப்பட்டது. திருவாழ்மார்பர், உடையநங்கையாருடைய கையைக் காரியார் கையில் வைத்து, "இறைவனும் திருமகளும் போல நீ என் மகளுடன் அன்பு பொருந்தி இன்பமுடன் வாழ்க," என்று நன்னீர் வார்த்தனர். காரியார் மங்கலத்தாலியை உடைய நங்கையார் திருக்கழுத்தில் தரித்தனர். மங்கையர் இசைக்கும் பல்லாண்டோசையும் முதுபெரும் புலவர் கூறும் வாழ்த்தொலியும் ஒன்றாய்க் கூடிப் பேரொலி செய்தன.

காரியாரும் உடையநங்கையாரும் தீயை வலம் வந்து வணங்கினர். அம்மி மிதித்தல் அருந்ததி காணல் முதலிய சடங்குகள் முறையாகக் குறைவின்றி நடந்தேறின. பின்பு கன்னிப் பெண்களுள் பெரியளாகிய ஒருத்தி பொற்றகளியில் நெய் பெய்து ஏற்றிய விளக்கை வெள்ளித் தட்டில் திருப்பாற் கடலினின்று திருமகள் தோன்றினாற்போல் விளங்க இட்டு முன்னே செல்ல, மற்றுஞ் சில கன்னிப் பெண்கள் பாலிகைகளை ஏந்தி அவள் பின் வரிசையாகச் செல்ல, அவர்களுக்குப் பின், மணமகனும் மணமகளும் சென்று, மணப்பந்தலை வலம் வருவாராயினர். பொற்

காரியாரும் திருவாழ்மார்பரும் அத்தட்டில் பொற்காசுகளையும் மணிகளையும் இட்டார்கள். பின் மணமக்கள் மணப்பந்தலை வலம் வந்த பிறகு தோழரும், தோழியும் மணமக்களை அழைத்துச் சென்று கூடத்தில் வெண்பட்டு விரித்த பாயில் வீற்றிருக்கச் செய்தனர். பொற்காரியாரும் திருவாழ்மார்பரும் தோழருக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்த பிறகு அவர், பாலும் பழமும் சாப்பிட்டார். பின்பு மணமக்களும் பாலும் பழமும் சாப்பிட்டனர். பின் தோழர், காரியாரை அவருக்கென அமைத்த அறைக்கு அழைத்துச் சென்றனர். தோழியும் உடையநங்கையாரை அழைத்துச் சென்றாள். பின்னர்த் தேவர்களும் விழையும் அறுசுவை அடிசில் அனைவர்க்கும் இடப்பட்டது.

அன்று மாலை சிறந்த ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. அனைவரும் கண்டு கேட்டுக் கழிபேரின்ப மெய்தினர். பிறகு பொற்காரியார் சிலநாட்கள் திருவாழ்மார்பர் திருமாளிகையில் தங்கியிருந்தனர். காரியாரும் தம்முடைய அன்புக்கு உரியாராகிய உடையநங்கையாரோடு பூஞ்சோலையிலும் பொய்கைக் கரையிலும் உலவியும், மாளிகையின்கண் பஞ்சணையில் அலங்கரித்து அன்புகலந்த மனத்தினராய் இருந்தும் அளவளாவி இன்புற்றிருப்பாராயினர். பின்பு பொற்காரியார் மணமக்களுடன் திருக்குருகூருக்குச் செல்ல விரும்பி, அதனைத் திருவாழ்மார்பருக்குத் தெரிவித்தனர். திருவாழ்மார்பர் தம்முடைய மருகராகிய காரியாருக்கும் தம்மருமைச் செல்வியராகிய உடையநங்கையாருக்கும் அளிக்கவேண்டிய ஆடை அணிகலங்களை அளித்துத் தம்முடைய அருங்குணச் செல்வியாருக்குச் சீதனமாகச் சிறந்த மணிகளையும் ஊர்திகளையும் மற்றும் பல பொருள்களையும் அளித்தனர். உடையநங்கையார் தம்

முடைய பெற்றோரையும், மற்றும் பல பெரியோர்களையும் வணங்கித் தம்முடைய தோழிகளை அன்புடன் தழுவி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு காரியாரிடம் சென்றனர்.

பொற்காரியார், மிதிலையின் வேந்தராகிய சனகரிடம் விடைபெற்றுக்கொண்டு மணமக்களுடன் அயோத்திக்குச் செல்லப் புறப்பட்ட தசரதசக்கரவர்த்தியைப்போலத் திருவாழ்மார்பரிடம் விடைபெற்றுக்கொண்டு மணமக்களுடன் புறப்பட்டனர். திருவாழ்மார்பரும், மற்றும் பல உறவினரும், நண்பரும் பொற்காரியாருடன் சிறிதுதூரம் சென்று அவரிடம் அரிதின் விடைபெற்றுக்கொண்டு திரும்பினர்.

பொற்காரியார் திருக்குருகூரில் உள்ளார்க்குத் தமது வருகையைத் தெரிவிக்கும்படி சில ஆட்களை அனுப்பினர். அவர்கள் சென்று கூறத் திருக்குருகூரில் உள்ளவர்கள் மணமக்களுடன் வரும் தசரதரது வருகையைக் கேட்ட அயோத்தியின் மாந்தர்களைப் போல மிக்க மகிழ்ச்சி கொண்டு, மகரதோரணங்கள் நாட்டி, நீர் நிறைந்த பொற்குடங்களை ஆங்காங்கு வைத்துப், பந்தல்களை யமைத்து, அவற்றில் நறுமண மலர்மாலைகளை நாலவிட்டு, மாளிகைகளின் தூண்களில் வாழை, கமுகு முதலிய மரங்களைக் கட்டினார்கள். யாழ், குழல், முழவு, கஞ்சக்கருவி முதலிய இன்னியங்கள் எல்லாருக்கும் இனிய விருந்தாயின.

சான்றோரும், மறையவரும், மற்றும் பலரும் மணமக்களுடன் வரும் பொற்காரியாரை எதிர்கொண்டழைக்க எண்ணிச், சிறிதுதூரம் சென்று, அவர் வரவை எதிர்நோக்கிக்கொண்டிருந்தனர். யானை வருதற்குமுன் அதன் ஓசை வருதல் போலப் பொற்காரியார் முதலியோர் வருவதற்கு முன் அவர்கள் இவர்ந்துவரும் தேர், புரவி, யானை முதலியவற்றின் ஒலி முன் வந்து அவர்களின் வருகையை அறிவித்தன

ருக்கு உணர்த்தியது. உடனே, "பொற்காரியார் வாழ்க! மணமக்கள் வாழ்க! தமிழ்மொழியின் இனிய நயம் எங்கும் பரவுக! திருமகள்நாதன் திருவருள் எங்கும் பொலிக! மழைவளம் சுரக்க! மாநிலம் வாழ்க!" என்னும் ஓசை வானவர்கள் காதுகளிலும் சென்று நிரம்பியது.

பொற்காரியார் மணமக்களுடனும், மற்றுமுள்ள உறவினருடனும், நண்பினர்களுடனும் மாளிகையை யடைந்தனர். பிறகு பொற்காரியார் அனைவருக்கும் விருந்தளித்தனர். விருந்துண்டவர்கள் சோலைகளிலும், பொய்கைக் கரைகளிலும், மாளிகைகளிலும் சென்று தங்கினார்கள். அவர்களுள் கண்ணனார் என்பவரும் ஒருவர். அவர் திருவண்பரிசாரத்திலிருந்து வந்தவர். அவர் தம்முடைய அருமை நண்பராகிய கண்ணங்கொற்றனாரைக் கண்டார்; உடனே அவருக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. அவர் கண்ணங்கொற்றனார் அருகிற்சென்று, "அரும்புலச் செல்வராகிய என்னருமை நண்பரே, தங்களைக் காணப்பெற்ற இந்நாள் எனக்கு ஒப்பரிய இன்பம் விளைக்கும் நன்னாளாகும். உறவினரும் நண்பரும் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தமையின், தங்களை நான் முன்னே காணவில்லை" என்றனர்.

கண்ணங்கொற்றனார், "என்னருமை நண்பரே, இன்று நான் உங்களைக் காணப்பெற்றது என் நற்றவத்தின் பயனேயாகும். இன்று நான் விருந்து உண்கையில் தங்களுடன் இருந்து உண்டிருப்பின், அஃதெனக்குப் பெருமகிழ்ச்சியை விளைவித்திருக்கும். அதனைச் சில நாட்கள் வரையிலும் நான் பெறுதல்கூடும் என்று நினைக்கின்றேன்," என்றனர். கண்ணனார், "என்னருமை நண்பரே, திருவண்பரிசாரத்தில் திருவாழ்மார்பர் அருமைச் செல்வி உடையநங்கைக்கும், அருங்குணச் செல்வராகிய காரியா

ருக்கும் திருமணம் நடந்த அன்று திருவாழ்மார்பர் அளித்த விருந்தை உண்டபோது இதற்கு ஒப்பாகிய விருந்தை முன்னும் உண்டதில்லை. இனி உண்ணுதலும் அருமையென்றெண்ணினேன். இன்று பொற்காரியார் அளித்த விருந்தை உண்டபின் 'இவர் அளித்த விருந்தைச் சிறந்ததென்று சொல்வதா? திருவாழ்மார்பர் அளித்த விருந்தைச் சிறந்தது என்று சொல்வதா? என்னும் எண்ணம் உண்டாயிற்று. இன்று தங்களுடன் இருந்து நான் விருந்து உண்டிருப்பின் பொற்காரியார் அளித்த விருந்தின் சுவை தங்கள் இன்சொற் சுவையுடன் கூடித் திருவாழ்மார்பர் அன்றளித்த விருந்தின் சுவையை வென்றுவிட்டிருக்கும்,'' என்றனர். கண்ணங்கொற்றனர், "தங்கள் அன்பு வாழ்க! இச்செல்வர்களுடைய திருமணத்தை நான் கண்டுகளித்தற்காகவும், தங்களைக் காணுதற்காகவும் திருவண்பரிசாரத்திற்கு வரவே எண்ணியிருந்தேன். ஆனல், பொற்காரியார், இந்நகரின் செயல் முறைகளை இங்கிருந்து நன்கு நோக்கிச் செய்வன செய்யும்படி எனக்குப் பணித்தனர். பொற்காரியாருடைய அரசியல் செயலாளர்களுள் யான் தலைவனுயிருக்கின்றேன். அன்றியும் பொற்காரியார் என் நெருங்கிய உறவினர். என் அன்னையாரும் பொற்காரியாருடைய அன்னையாரும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள். ஆதலின், அவர் பணியை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டியவனுனேன்,'' என்றனர்.

கண்ணனர் "என்னருமை நண்பரே! தங்களைப்போல நான் திருவாழ்மார்பருக்கு நெருங்கிய உறவினனுயுள்ளேன். என் அன்னையாரும் அவர் தம் மனைவியாருடைய அன்னையாரும் ஒரு தாய்வயிற்றுப் பிறந்தவர்கள். எங்கள் தாயாரே எங்கள் அருமைச் செல்வி உடையநங்கையை அச்செல்வியின் அன்னையாருடனிருந்து பேணி வளர்த்து

வந்தார்கள். ஆதலின், எங்கள் தாயாரை 'உடையநங்கையுடன் செல்லுக,' என்று உடையநங்கையின் அன்னையார் அனுப்பினர். எங்கள் அன்னையார் என்னை 'உடன் வருக,' என அழைத்தனர். இது நம்முடைய நண்பரைக் காணுதற்கு உரிய நல்வாய்ப்பாம் எனக் கருதி உடன் வந்தேன். இங்குத் தங்களைக் கண்டு மகிழ்ந்தேன்,'' என்றனர். கண்ணங் கொற்றனர், "என் அன்புக்குரிய கண்ணரே, 'மக்கள் இரவின்கண் எய்துதற்குரிய பலவகை இன்பங்களை எய்துதற்கு நாம் இடையூருய் இருத்தலாகாது,' எனக் கருதிச் சூரியன் மேற்றிசையைச் சென்றடைந்து விட்டனன். இனிச் சிறிது போதுக்கெல்லாம் பொற்காரியார்தம் மாளிகையில் போதன்ன முகமடவார்களுடைய ஆடல் பாடல்கள் நிகழும். அவற்றைக் கண்டு கேட்டுக் களிப்போம்; வருக," என்று கூறிக் கண்ணனரை அழைத்துச் சென்றனர். அவ்வாறே அம்மாளிகையில் ஆடல் பாடல் நிகழ்ந்தன. அப்பொழுது அங்கிருந்த கண்ணனர், "இன்று இங்கு ஆடல் பாடல்களை நிகழ்த்திய மெல்லியலார்கள் இங்குள்ளார் அனைவரையும் *வானவராகச் செய்துவிட்டார்கள்," என்றனர். அதனைக் கேட்ட அக்கொடியிடையார் முகத்தாமரைகளில் முல்லையரும்புகள் முகிழ்த்துப் பொலிந்தன; அவற்றைக் கண்ட கண்ணங்கொற்றனரும் மற்றையாரும் கண்ணனரைப் புகழ்ந்து மகிழ்ந்தனர். அப்போது மன்மதனது வெண்கொற்றக் குடை எனச் சந்திரன் வானில் தோன்றி விளங்கினன். அம்மலர்க்கணை வேளினுடைய வெற்றிகளை அளவிட்டு உறையிடற்கு வைத்த மணிகளென உடுக்கள் வானில் தோன்றித் திகழ்ந்தன. சேய்மையிற் சென்றிருந்த

*கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கச் செய்தார்கள் என்பது கருத்து.

தங்கள் கொழுநர்களுடைய வருகையினால் மகிழ்வுற்ற மடவார்களுடைய முகம்போல அல்லிமலர்கள் மலர்ந்து விளங்கின. காரியார், நறுமலர் மாலைகளை நாலவிட்டுப், பலவகை நன்மணச் சுண்ணங்களைத் தெளித்து, வெண்பட்டுப் பரப்பிய வெள்ளிய பஞ்சணை அமைக்கப்பட்ட கொழும் பொன்னறையை அடைந்தனர். உடையநங்கையார், மலர்மாலைகளில் நறுமணம் கமழப், பன்மணிமாலைகளின் ஒளி மார்பில் தவழ, வாளன்ன கட்கடைகள் குழைகளைச் சென்று தடவக், காலில் அணிந்த சிலம்புகள் 'கற்பரசியார் வருகின்றனர்; பொற்பின் செல்வியார் வருகின்றனர்,' எனக் கட்டியம் கூறுவன போல ஒலிக்கத் தம் அன்பராகிய காரியார் கரும்புவில்லியினால் துன்பம் எய்த வேண்டுவது இல்லை என்பதைக் குறிப்பிக்கும் இடைதுவள மென்மைத் தன்மையில் அனிச்சப்பூச் சிறந்ததோ? இவர் தம் அடிகள் சிறந்தனவோ? என்று ஐயுறத் தக்க சீறடிகள் பூமியில் பொருந்த நடத்தலால் வருந்துமோ? எனத் தோழியர்கள் ஏங்க மெல்ல நடந்து வந்தார். உடனே காரியார் எழுந்து உடையநங்கையாருடைய மலர்க் கையைப் பற்றி, "அன்பரசீ, நீ என் மனமலரில் வீற்றிருப்பதுபோல இப்பஞ்சணையில் வீற்றிருந்தருள்க. பொற்புறு பாவாய். நின் கனிவாயினின்று வரும் இன் சொற்றேனாகிய விருந்தைப் பெற என் காதுகள் மிக்க விழைவுடையனவா யிருக்கின்றன," என்றனர்.

உடையநங்கையார் புன்முறுவல் புரிந்து, மெல்லத் தலைநிமிர்ந்தனர். அவருடைய கருங்கட் குவளைகள் காரியாருடைய கட்டாமரைகளில் சென்று கலந்து மலர்ந்தன. காரியாருடைய கட்டாமரைகள் உடையநங்கையாருடைய கருங்கண் குவளையிற் சென்று படிந்து மலர்ந்தன. அவர்களுடைய உயிரும் உணர்வும் ஒன்றாய்க் கலந்தன. காரியார்

உடையநங்கையாரை நோக்கி, "அன்புடையாய், நின் முகமதியில் பனி அரும்பியது. அதனை யான் துடைக்கின்றேன்," என்று கூறித் துடைத்தனர். பின்பு, "பொய்ம் மானின் வருகையால் இரகுகுலதிலகர் துன்பம் எய்தினர். மெய்ம்மானின் வருகையால் யான் ஒப்பரிய இன்பத்தை எய்தினேன். நல்லார் வரவால் நன்மையும் அல்லார் வரவால் தீமையும் எய்துதல் உலகத்தியற்கையே அன்றோ," என்றனர்.

உடையநங்கையார், "என் அன்பிற்கு உரியீர், தாங்கள் என் மனமாகிய வயலில் விதைத்த அன்பாகிய விதையைத் தங்கள் இன் சொல்லாகிய நீரைப் பாய்ச்சி, நன்றாய்ச் செழித்து வளரச் செய்து, என்னை இன்பத்தின் எல்லையை இனிதுணரச் செய்தீர்கள்," என்றனர். காரியார், "என் அன்பின் செல்வமே, நீ எனக்கு என் மனம் மகிழ வெய்தும்படி நின் சொல்லாகிய விருந்தினை அளித்தனை. 'பொருந்து செல்வமும் கல்வியும் பூத்த பெருந்தடங்கண் பிறைநுதலார்பால் வருந்தி வந்தவர்க்கீதலும் வைகலும் விருந்துமன்றி விளைவன யாவை,'' என்றனர். உடையநங்கையார் "என் அன்பிற்கு உரியீர், தாங்கள் வில்லேர் உழவர்களிற் சிறந்த வில்லேர் உழவர் என்பதனைப் பொன் வரைப் பழிக்கும் தங்கள் தோளிணைகள் நன்கு விளக்குகின்றன. தாங்கள் சொல்லேர் உழவரிற் சிறந்த சொல்லேர் உழவர் என்பதனைத் தங்கள் சொற்கள் பறைசாற்றுகின்றன. உழுகுல விளக்கெனத் தோன்றிய தங்கள்பால் இவை யாவும் தாமே விழைந்து வந்து எய்தியுள்ளன. இத்தகைய தங்கள் அன்பினுக்கு என்னை உரியளாகும்படி செய்தது என் முற்றவப்பயனே ஆம்,'' என்றனர். காரியார், "அருங்குணச் செல்வீ, நின் இன் சொல்லமுதம் என் உள்ளத்தையும் உயிரையும் இன்

பத்தின் வடிவாய் இலகச் செய்துவிட்டது. வானவர் உண வெனக் கூறப்படும் அமுதம் நின் இன்சொல் அமுதுக்கு உவமையாம் எனக் கூற யான் சிறிதும துணியேன். பொன்னே, நீ நெடுநேரம் துயிலைத் துறந்து இருந்து விட்டனை; இனியும் துயிலாமல் இருப்பின், நின் மேனி வாடும். என்புயத்தாமரையைப் பொலிவுறச் செய்க," என்றனர். உடையநங்கையார், "என் அன்பினுக்குரியீர், என்று என் மனத்தடத்தைத் தங்கள் கட்டாமரை தனக்கு இடமாகக் கொண்டதோ? அன்றே நான் தங்கள் அம்புயத்தை அடையும்செல்வியாவேன்" என்னும் உறுதியுடையவளானேன். தங்கள் இன்மொழி அமுதைப் பருகிய என னுடல் துயிலின்மையால் சிறிதும் வாட்டம் உருது," என்றனர். காரியார், பலகணிவழியால் வெளிப்புறம் நோக்கி, "என் ஆரமுதே! பரிதிவானவன் நின் கருத்தின்படி நின் விழித்தாமரையைக் குவியாதிருக்கும்படி செய்யக் கருதிப் போலும் குணதிசையை அணுகிவிட்டனன். இனி நான் காலைக்கடனை முடித்துக்கொண்டு, திருமகள்நாதனை வணங்கிச் செய்வன செய்தல்வேண்டும். விடைகொடு," என்று விடைபெற்றுச் சென்றனர். உடையநங்கையாரும் தம்முடைய தோழியருடன் சோலையில் உள்ள பொற்றாமரைப் பொய்கைக்குச் சென்றனர்.

ஒரு தோழி உடையநங்கையாரை நோக்கி, "தோழி, இத்தாமரை இரவெல்லாம் குவிந்திருந்து, சூரியனுடைய கதிர்களாகிய கைகள் தன்னைத் தொட்டவுடன் நன்ருய் மலர்ந்து, பொலிந்து, எழில் மிக்கு, விளங்கும் வியப்பைப் பாராய்," என்றனள்.

மற்றொரு தோழி, அத்தோழியை நோக்கிப், "பேதாய் இரவெல்லாங் குவிந்திருந்து, சூரியனைக் கண்டவுடன் மலர்ந்து விளங்கும் தாமரையை நாம் எந்நாளும் பார்த்

துக்கொண்டுதான் இருக்கின்றோம். அதில் என்னடி வியப்பிருக்கின்றது? *பகலெல்லாம் பரிதியைக் கண்டும் இரவெல்லாம் மதியைக் கண்டும் மலர்ந்து விளங்கும் தாமரையை நீ பார்த்திருக்கின்றாயோ?'' என்றனள்.

உடையநங்கையார், "என் உயிரனையீர், நல்ல மலரின்கண் மணமும் மணியின்கண் ஒளியும் போல உங்கள் சொற்களில் இன்சுவை அமைந்து இன்பம் பயக்கின்றது. பொன் மலரில் நறுமணம் சார்ந்ததுபோல உங்கள் இயற்கை யறிவோடு கலையறிவு கூடி, உங்களை நன்கு சிறப்பிக்கின்றது. உங்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, எனக்கு இன்பந் தரும்போதாய் இருக்கின்றது,'' என்று கூறி, அத் தோழியருடன் அப் பொய்கையிலே நீராடி விட்டு மாளிகைக்குச் சென்றனர்.

இங்ஙனம் சில நாட்கள் சென்ற பின் திருவாழ்மார்பருடைய மனைவியார், தம்முடைய கொழுநரை நோக்கி, "நம்முடைய அருமைச் செல்வி தன் கொழுநர் அகம் சென்று பலநாட்கள் ஆய்விட்டன. நான் அவளைக் காண விழைகின்றேன்,'' என்றனர்.

திருவாழ்மார்பர், "அன்புடையாய், நம்மருமைச் செல்வியை இங்கு வருவிக்கின்றேன்,'' என்று கூறிப், பொற்காரியாருக்கு ஒரு திருமுகம் எழுதி அதனைச் சில ஆட்களிடம் கொடுத்தனுப்பினர். அவர்கள் அதனைக் கொண்டு சென்று, பொற்காரியாரிடம் தந்தார்கள். பொற்காரியார் அத் திருமுகத்தைக் கண்டவுடன் காரியாரையும் உடையநங்கையாரையும் கண்ணனுருடனும், அவர் அன்னையாருடனும், மற்றும் சிலருடனும் திருவண்பரிசாரத்திற்கு அனுப்பினர். அவர்கள் சென்று திருவண்பரி

---

* உடையநங்கையார் இராமுழுதும் துயிலாமல் இருந்தனர் என்பதனைக் குறிப்பிக்கின்றனள் என அறிக.

சாரத்தை யடைந்தார்கள். அவர்கள் வரவைச் சிலரால் முன்னுகை அறிந்த திருவாழ்மார்பர், அவர்களை யெதிர் கொண்டு அழைத்து வந்து, பல வகை உபசாரங்களைப் புரிந்தனர். உடையநங்கையார் தம்முடைய தந்தையாரை வணங்கிச் சென்று தம்முடைய தாயாரை வணங்கினர். அவ் வம்மையார் பிரிந்திருந்த கன்றைக் கண்ட ஆவெனப் பெருமகிழ்ச்சி கொண்டு, உடையநங்கையாரைக் கட்டி யணைத்துப், பல முத்தங்களைத் தந்து களித்தனர். உடைய நங்கையார், பிறகு அங்குள்ள தம்முடைய தோழியர்களைக் கண்டு அவர்களுடன் அளவளாவி மகிழ்ந்தனர். இங்ஙனம் காரியார் உடையநங்கையாருடன் சில நாட்கள் திருக்குரு கூரிலும் சில பகல் திருவண்பரிசாரத்திலும் தங்கி இன்புறு வாராயினர். இங்ஙனம் சில ஆண்டுகள் சென்றன. அவர் களுக்கு அதுவரையினும் புத்திரப்பேறு உண்டாகவில்லை. அதனுல், அவர்கள், "அந்தோ! நமக்கு எல்லாப் பேறு களும் எம்பெருமான் திருவருளால் நன்கு அமைந்திருக் கின்றன. ஆயினும், மக்கட்பேறு உண்டாகும்படி எம் பெருமான் அருள்புரிந்திலனே! மக்களைப் பெருத நம் முடைய வாழ்க்கை பயன் அற்றதே ஆகுமன்றே!

நேரிசை யாசிரியப்பா

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழும் நாளே."

(புறம். 188)

என அறிவுடைய நம்பி யென்னும் பாண்டியர் பாடிய பாட்டு இது கருதியது அன்றே? 'மக்களை இல்லாதவர்,

பொன்னுடையரேனும், புகழுடையரேனும், மற்று என்னுடைய ரேனும் உடையராவரோ?'' என்றெண்ணிக் கவலையுறுவாராயினர்.

அங்ஙனங் கவலை கொண்டவர்கள் ஆகிய காரியாரும் உடையநங்கையாரும் ஒருகால் திருவண்பரிசாரத்திலிருந்து திருக்குருகூருக்குச் செல்கையில், இடையிலே திருக்குறுங்குடியை அடைந்து, அப் பதியில் எழுந்தருளியிருக்கும் நம்பியைச் சேவித்து வணங்கிப், பலவகையாகப் போற்றி, "எம்பெருமானே? நின் பொற்றுபனை அடிகளே புகலிடம் என அடைந்த அடியோங்கள் மற்றெல்லாப் பேறுகளையும் பெற்றிருக்கும்படி அருள் புரிந்தனை யாயினும், எங்கட்கு மக்கட்பேற்றை அளித்திலை யாதலின், எங்கள் மனம் கவலையடைகின்றது. எங்கள் குலதெய்வமே, நீ அக் கவலையைத் தீர்த்தருளுதல் வேண்டும்,'' என்று வேண்டிச் சென்று, அப் பதியில் அன்றிரவு ஓரிடத்தில் தங்கினார்கள். திருக்குறுங்குடி நம்பி, காரியார் கனவில் தோன்றி, "அன்புடைய அருங்குணச் செல்வனே, நீ கவலை உறுதல் வேண்டா. உனக்கு நம்முடைய அமிசமுடைய ஓர் அருமருந் தன்ன மைந்தன் தோன்றுவன்,'' என்று கூறியருளினன். அப் பெருமான் அன்றிரவு உடையநங்கையார் கனவிலும் தோன்றி அவ்வாறே கூறியருளினன். அவ் விருவரும் காலையில் எழுந்து ஒருவருக்கொருவர் தாம் தாம் கண்ட கனவினைக் கூறி மகிழ்வெய்திப், பின் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, கோயிலை யடைந்து, நம்பியைச் சேவித்துப் பிறகு திருக்குருகூரை அடைந்தார்கள்.

## ஆழ்வார் அவதாரம்

காரியாரும் உடையநங்கையாரும் திருக்குருகூரில் உறைகையிலே பரமபதநாதன் அருளின் வடிவமாய்

விளங்குகின்றவரும், பரந்தாமத்தில் வாழும் நித்தியருக்கும் முத்தருக்கும் தலைவரும் ஆகிய சேனை முதலியார், தமிழ் மறையை அளித்து உலகத்தை உய்விக்கும் பொருட்டு உடைய நங்கையாருடைய கருவைவந்து அடைந்தனர். இதனை,

கலித்துறை

" கருணை வாரிதி யெனும்பெயர்க் கரியமால் கவினார்
உருவ மாகிய சேனைநா யகனுளம் உவந்தே
பொருவில் நான்மறைத் தமிழ்சவின் றுலகெலாம் புரப்பான்
அருண வாயிதழ் அணங்கனாள் வயின்கரு வடைந்தான்."
(அரிசமய—பராங்குசச் சருக்கம்—19)

என்றதனால் அறிக.

உடையநங்கையார், வைகாசித் திங்கள் விசாக நாளில் மெய்ஞ்ஞானக் கதிர்ப் பரிதியாகிய ஆழ்வாரைக் கருவுயிர்த்தனர். 'இராமனாகிய சூரியனாலும், யசோதையினுடைய இளஞ்சிங்கம் என விளங்கிய கண்ணனாகிய பரிதியினாலும் ஒழியாத உளத்திருள் ஒழிந்து மலராத மலர்களும் மலர்தற்குக் காரணம் ஆயிற்று. இவ்வாழ்வாராகிய இச் சூரியனுடைய உதயம்,' என்பர் பெரியோர். ஆழ்வார் அவதரித்தற்கு முன்னே ஆதிசேடன் அப் பதியின் திருக்கோயிலின்கண் ஒரு புளிய மரமாய்த் தோன்றி விளங்கலானான். இங்ஙனம் உலகம் உய்ய ஆழ்வார் அவதரித்த திருமனையில் திருமகள்நாதன் பிறர் அறியாமல் எழுந்தருளி, அவருக்கு ஞானமாகிய அமுதத்தை ஊட்டியருளிச் சென்றனன். அதனால் ஆழ்வார் திருமகள் நாதன் திருவடிகளையே தம்முடைய திருவுள்ளத்தில் கொண்டிருப்பாராயினர்; ஆதலின், தாயின்முலை உண்ணாமலும், அழாமலும், கண் திறவாமலும் இருந்தனர். ஆழ்வார் அவ்வாறிருத்தலைக் கண்ட சிலர் காரியாரிடம் சென்று, "அருங்குணச் செல்வரே, உங்கள் அருந்தவ

மைந்தன் பாலுண்டிலன்; அழுதிலன்; திருமலர்க்கண் திறந்திலன்; ஆயினும், திருமேனி மெலிந்திலன்," என்று கூறினர்கள். அன்பும் அருளும் நிறைந்த மனத்தினராகிய காரியார், "எம்பெருமான் திருவருள் யாதோ? எம்பெருமானுக்கு எளியேன் யாது தவறு செய்தேனே? திருக்குறுங்குடியில் சென்று, நம்பியை வணங்கி, 'எம்பெருமானே, எங்கள் குடி விளங்க ஒரு மைந்தனை அளித்தருள்க,' என்று வேண்ட, அப்பெருமான் அந்நாள் இரவில் எங்கள் கனவிலே தோன்றி, 'உங்களுக்கு என் அமிசமாக ஒரு மைந்தன் உண்டாவன்' என்றருளினனே! அங்ஙனம் எம்பெருமான் அருளியபடி தோன்றிய மைந்தனே இங்ஙனம் இருக்கின்றான்?' என்று கூறி வருந்துவாராயினர்.

அம்மைந்தர் பால் உண்ணமல் இருந்தும், திருமேனி வாடாது இருத்தலைக் கண்டு சிலர், "யாரோ ஒரு பெரியவர் இம்மைந்தனாக வந்து அவதரித்திருக்கின்றார்," என்றனர். சிலர், "பரமபதத்திலுள்ள நித்தியர்களுள் ஒருவர் இவ்வாறு வந்து அவதரித்தனர் போலும்," என்றனர். சிலர், "இராமனாய் அவதரித்துத் தன் ஒழுக்கத்தால் நன்னெறியினை யுணர்த்திப் பின் கண்ணனாய் அவதரித்துக் கீதையை யருளிய இறைவனே உலகினருக்கு நலம் புரிய இவ்வுருவில் வந்தவதரித்துள்ளான்," என்றனர். தாம் திருக்குறுங்குடி நம்பியை வேண்டி அப்பெருமான் அருளால் பெற்ற அரும்பெறல் மைந்தர், பால் உண்ணாமலும், அழாமலும், அசையாமலும் மலர்க்கண்கள் திறவாமலும் இருத்தலைக் கண்ட உடையநங்கையாருடைய வருத்தம் எல்லை கடந்ததாயிற்று. அழகியநம்பி என்பார் தாம் இயற்றியருளிய குருபரம்பரை என்னும் நூலில் அதனைப்பற்றிக் கூறும் செய்யுட்கள் கல்லையும் நெகிழ

வித்துக் கரையச் செய்வனவாய்ப், படிப்பார் மனத்தைக் கவர்வனவாயிருக்கின்றன. அவை முற்றும் நன்கு நோக்குதற்கு உரியன. அவ்வருஞ் சுவைச் செய்யுட்களுட் சிலவற்றை அடியிற் காண்க.

"தப்பா விலேபார் தவமே தமிழ்மாரு
அப்பா முலையிரண்டும் விம்மினா ஞற்றுகிலேன்
ஒப்பாரில் லாதாய் சுரந்தூபீ ரோடுன்ற
இப்பா லருந்தாய்நான் என்பிழைத்தேன் என்னமுதே."

"ஒக்கலைமேல் வைத்தோர் கரத்தால் உனைத்தாங்கித்
தக்கமுலை ஊட்டத் தவமுன்பு செய்யாதேன்
மக்கடமைப் பெற்ற மடவார் முகநோக்கி
வெட்கினேன் மைந்தா விதியினையன் ஆனேனே."

"மானேர் விழியார்கள் மக்களழத் தாலாட்டி
ஏனேன் எனச்சென் றெடுத்துமுலைப் பா[illegible]ப்ப
நானேது செய்தேனென் நம்பீ அமுதமரா
தேனை சுரந்த திருமுலைப்பால் உண்கிலையே."

இங்ஙனம் உடைய நங்கையார் வருந்தி அரற்றுதலைக் கண்ட காரியார் ஆற்ருெணுத் துயரெய்தி, அவ்வரும்பெறல் மைந்தரை எடுத்துக்கொண்டு, உடையநங்கையாருடனும் மற்றும் உறவினருடனும் சென்று, அப் பதியிற் சங்கணித் துறையையுடைய பொருநையாற்றின் தென்கரையில் திருக்கோயில் கொண்டு, எழுந்தருளியிருக்கும் இறைவன் திருமுன் கிடத்தி, அப்பெருமானைச் சேவித்து, வணங்கிப் போற்றிப், பிறகு அம்மைந்தருக்கு "மாறன்" என்று பெயரிட்டு, ஆணிப்பொன்ஞற் செய்த வண்ணச் சிறு தொட்டிலில் வளர்த்தினுர். உடையநங்கையாரும் மற்றும் சில மலர்க்குழல் மங்கைமார்களும்,

"மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் ஞற்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான் [தாலேலோ."
மாணிக் குறளனே தாலேலோ வையம் அளந்தானே

(பெரியாழ்வார் திருமொழி, முதற்பத்து.
4-ஆம் திருமொழி, பா.1)

என்று தாலாட்டினார்கள். பின்பு காரியார் முதலிய பலரும், "எம்பெருமான் திருவருளின்படி ஆகுக," என்று எண்ணி, அவ்வருமைச் செல்வரைக் கண்ணின் மணியெனக் கொண்டு, பாதுகாத்துவரலாயினர். பரந்தாமத்தில் திருமகள், புவிமகள், நீளை என்னும் தேவியர் அருகில் வீற்றிருக்க, நித்திய முத்தர்கள் சேவிக்க, ஆதிசேடனாகிய அரியணையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் அப்போது சேனை முதலியாரை நோக்கி, "அன்புடையீர், நீர் சென்று, நம்மாழ்வாருக்கு உண்மைப் பொருள்களையெல்லால் உபதேசித்துவிட்டு வருவீராக," என்று பணித்தருளினன்.

சேனை முதலியாரும் அவ்வாறே திருக்குருகூருக்கு எழுந்தருளிப் பிறர் அறியாதபடி நம்மாழ்வாருக்குத் தத்துவப் பொருள்களை யெல்லாம் உபதேசித்தருளினர். நம்மாழ்வார் எல்லா உண்மைப் பொருள்களையும் இனிதுணர்ந்துகொண்டு, அப் புளியமரத்தின் அடியிலே பதினாறு ஆண்டுகள் வரையினும், யோகத்தில் எழுந்தருளியிருந்தனர்.

## ஆழ்வார் மதுரகவியாருக்கு அருள்புரிதல்

பாண்டிய நாட்டில் நீர்வளமும் நிலவளமும் ஒருங்கு அமைந்த திருக்கோளூர் என்னும் பதி ஒன்று உளது. அப்பதியில் அந்தணர் குலத்தின் அருந்தவச் செல்வம் எனத் தோன்றிய மதுரகவியார் என்பவர் ஒருவர் இருந்தனர். அவர் தென்மொழி வடமொழிக் கலைகள் பலவற்றையும் நன்கு பயின்றவர்; திருமகள்நாதன் அன்பும், சீரிய ஒழுக்கமும், அருள் கனிந்த உள்ளமும் வாய்ந்தவர். அவருக்கு ஒருகால் (1) அயோத்தி, (2) மதுரை, (3) மாயை, (4) காசி, (5) காஞ்சி, (6) அவந்தி, (7) துவாரகை

என்று கூறப்படும் புண்ணியப்பதிகள் ஏழையும் சேவிக்க வேண்டும் என்னும் விழைவு உண்டாயிற்று. அவர் அவ்வாறே சென்று அப்பதிகளைச் சேவித்துப், பின் அவற்றுள் ஒன்றாகிய அயோத்தியில் தங்கியிருந்தார். அவர் அங்குத் தங்கியிருக்கையில், அவருக்கு ஒருநாள் இரவு தாம் அவதரித்த திருக்கோளூர் என்னும் பதி நினைவில் வர, அவர் அப்பதியில் திருமகள்நாதன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் திசையை நோக்கிக் கைகூப்பி வணங்கினர். அப்போது தென்திக்கில் சிறந்ததோர் ஒளி அவர் திருக்கண்களுக்குத் தோன்றிற்று. அதனைக்கண்டு அவர் சிறிது, திகைப்புற்று, "இஃதென்ன? இந்நகர்ப்புறத்து ஊரொன்றில் தீப்பற்றிய ஒளியோ? அன்றிக் காட்டுத் தீயோ?'' என்று எண்ணிப் பின் தம்மிருப்பிடம் உற்றுக் கண்வளர்ந்தருளினர். அவ்வாறே அடுத்தடுத்து இரண்டு மூன்று நாட்கள் அவருக்கு அவ்வொளி காணப்பட்டு வந்தது. அதனால், அவர் தமக்குள், '"தீயின் ஒளியாயின் இங்ஙனம் அடுத்து அடுத்துத் தோன்றாது. அன்றியும், இது தீயொளியின் வேறுபட்டதோர் அற்புத ஒளியாகக் காணப்படுகின்றது; ஆதலின், இதனை நாம் இனிது ஆய்ந்தறிதல் வேண்டும்," என்று உறுதிகொண்டு, மறுநாள் இரவு அவ்வொளி காணப்பட்ட இடத்தை நோக்கிச் சென்றனர்.

அவ்வொளி தென்திசையாகச் சென்று, முன் காணப்பட்ட செய்மையிலேயே காணப்படுவதாயிற்று. அவர் மேலும் அதனைத் தொடர்ந்து செல்லச் செல்ல, அதுவும் தென்திசையாகச் சென்றுகொண்டேயிருந்தது. இங்ஙனம் அவ்வொளி இரவில் தோன்றிப் பகலில் மறைந்து விடுவதாயிற்று. அவரும் விடாமல் இரவெல்லாம் அவ்வொளியைப் பின்தொடர்ந்து அது செல்லும் திசையாக

நடந்துசெல்வதும், விடியலான இடத்தில் தங்கியிருப்பது மாக இருந்தனர். இங்ஙனம் பல பதிகளையும் கடந்து, முத் தீர்த்துப் பொன் திரட்டி, ஆயர்களின் முன்றிலில் உள்ள மத்தீர்த்து, மரமீர்த்து, மலையீர்த்து, மானீர்த்து வரும் கோதாவிரியாற்றையும் கடந்து, வட சொற்கும் தென் சொற்கும் வரம்பாய் நான்மறையினும் சொல்லப்பட்ட பொருள்களுக்கெல்லாம் எல்லையாய், அறத்தின் உறையு ளாய்ப் புகழ் பொதிந்த மெய்யேபோல் தூய்மையாகிய நீரைக் கொண்ட சுனைகளையுடைய தண்சாரலை உடையதாகிய திருவேங்கடத்தையும் கடந்து, செந்தமிழ்ச் செல்வரும் வடமொழியாளருமாகிய அரும்புலச் செல்வருக்கு உறையு ளான தொண்டை நாட்டையும் கடந்து, கங்கையிற் புனித மானதும், மதகுந்தி அகில்கொண்டு நுரைமண்டி வரும் நீரை உடையதும் ஆகிய காவிரியாறு இருமருங்கும் பாயப் பெற்ற திருவரங்கத்தையும் கடந்து, செந்தமிழ்ச் சங்கம் விளங்கப்பெற்றதும், நல்லோர் மனம்போல் வெண்ணிற ஒளி வீசும் முத்துக்களைத் தருவதும் ஆகிய பாண்டிய நாட்டை அடைந்தனர். அவ்வொளி அவ்வாறே மேன் மேலும் சென்றுகொண்டேயிருந்தது.

பின்பு மதுரகவியார், அருளுடையவர் மனம்போலக் குளிர்ந்தபொய்கைகளையும், அன்பும் ஈகையும் உடையவர் களின் குடிபோலத் தழைத்தோங்கிய தருக்களையும் உடைய சோலைகள் எம்மருங்கும் பொலிந்திலங்கும் நல்லார் நவில் திருக்குருகூரை அடைந்தனர். அவ்வொளி அப் பதியில் பொதிந்துநின்றபிரான் திருக்கோயிலினுட்புக்கு மறைந்துவிட்டது. மதுரகவியார், 'இக்கோயிலிலே ஏதோ விசேடம் இருக்கின்றது,' என்றெண்ணி, அப்பதியில் உள்ளார் சிலரை நோக்கி, "இங்கு விசேடம் யாதேனும் உண்டோ?" என்று வினவினர். அவர்கள் நம்மாழ்வா

ருடைய அவதாரச்சிறப்பை மதுரகவியாருக்குக் கூறினர்கள். மதுரகவியார் திருக்கோயிலினுட் சென்று, பதினறு ஆண்டினராய், மெய்ஞ்ஞான நிறைவாலே பதினறு கலைகளும் நிரம்பப்பெற்ற மதியெனப் பொலியும் திருமுகத்தினராய் யோகத்தில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வாரைக் கண்டனர். உடனே மதுரகவியார் மனம் ஆழ்வாருடைய முக ஒளியினல் கவரப்பட்டது. ஆயினும், ஆழ்வார் கண் திறவாமலும் அசையாமலும் இருத்தலைக் கண்டு, மதுரகவியார், "இவர் கண் திறந்து நம்மைக் கடைக்கணித்து அருளுவரோ? ஆய்ந்து பார்ப்போம்," என்றெண்ணித் தம்முடைய இரண்டு கைகளையும் நன்ருய் ஓசையெழும்படி தட்டினர். உடனே ஆழ்வார், கண்திறந்து, மதுரகவியாரை நன்கு நோக்கினர். அதனைக் கண்ட மதுரகவியார், ஆழ்வாரை நோக்கி, *"செத்தத்தின் வயிற்றிற் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று கேட்டனர். அதற்கு ஆழ்வார் †"அத்தைத் தின்று அங்கே கிடக்கும்," என்று திருவாய்மலர்ந்தருளினர். மதுரகவியார் அதனைக் கேட்டு "நமக்கு அயோத்தியிலே தோன்றிய ஒளிப் பருதி இவரே! இவரே!" என்று உறுதிகொண்டு, அவர் திருவடிகளிலே தம்முடைய முடியுற வணங்கிக் கைகூப்பி

---

* செத்தத்தின் வயிற்றில்—உயிரற்றதாகிய பிரகிருதியினல் ஆகிய உடம்பில், சிறியது—அணுவடிவாயுள்ள ஆன்மா, பிறந்தால்—வந்து புகுந்தால், எத்தைத் தின்று—எதனை அநுபவித்துக்கொண்டு, எங்கே—எவ்விடத்தில், கிடக்கும்—இன்பம் உண்டென்று எண்ணியிருக்கும்.

† அத்தை—அந்த உடலின் தொடர்பினல் ஆகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் இவ்வைந்தினல் வரும் இன்பதுன்பங்களை, தின்று—அநுபவித்துக்கொண்டு, அங்கே—அவ்விடத்திலேயே, கிடக்கும்—இன்புற்றேன் இளைத்தேன் என்று சொல்லிக்கொண்டே கிடக்கும்.

நின்று, "என் அன்புக்குரியீர், அடியேனை ஆட்கொண்டருள்வீர்," என்று வேண்டினர்.

ஆழ்வார், "அன்புடையீர், நாம் பகவானை அநுபவித்தற்குப் போக்கு வீடாகச் சொல்லும் பாசுரங்களால் நீர் பட்டோலையை அலங்கரிப்பீராக," என்று திருவாய்மலர்ந்தருளினர். மதுரகவியாரும் பட்டோலையைத் தம்முடைய மலர்க்கையில் கொண்டனர்.

பரந்தாமத்தில் நித்தரும்முத்தரும் சேவிக்கத் திருமகளோடு அனந்தன் என்னும் அரியணையில் வீற்றிருக்கும் இறைவன் தன் அருட்பரஞ்சோதி யுருவினை ஆழ்வாருக்குக் காட்டி அருள் புரிய எண்ணிப், 'பொலிந்திருண்ட கார்வானில் மின்னே போல் அருள் மலிந்த திருவிருந்த மார்பன்' ஆகிய அப்பெருமான் பொலிவமைந்த கருடன் மீதிவர்ந்தருளிப் பிறர் அறியாதபடி வந்து ஆழ்வாருக்குச் சேவை தந்து, மயர்வறு மதிநலம் அருளினன். ஆழ்வாரும் அப்பரஞ்சுடர் மூர்த்தியைத் தம்முடைய மலர்க்கண்கள் குளிரச் சேவித்து, அப்பெருமானுடைய அருட்குணங்களை எண்ணி எண்ணி, உள்ளத்தில் அடங்காத அன்புகொண்டு, அவ்வன்பு மடைதிறந்து மேலிட்டது என்னும்படி மதுரகவியார் பட்டோலையை அலங்கரிக்கத் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் அரும்பொருள் நிதிகளாகிய நான்கு தமிழ்மறைகளைத் திருவாய்மலர்ந்தருளினர்.

இந்நான்கனுள் திருவிருத்தத்தை இருக்குவேத சாரம் என்றும், திருவாசிரியத்தை யசுர்வேத சாரம் என்றும், பெரிய திருவந்தாதியை அதர்வணவேத சாரம் என்றும், திருவாய்மொழியைச் சாமவேத சாரம் என்றும் கூறுவர்.

ஆழ்வார் இங்ஙனம் தொண்டர்களுக்கு அமுதமாகிய சொன்மாலைகளை அருளி, உலகை வாழ்வித்துப், பரந்தாம

மாகிய திருநாட்டை அலங்கரித்தருளினர். இவர் இவ்வுலகில் மேற்கூறிய திருப்புளியடியில் முப்பத்தோராண்டு எழுந்தருளியிருந்தனர் என்ப.

இவருக்குப் பெற்றோர்கள் மாறன் என்று திருப்பெயரிட்டார்கள். இவர் காரியாருடைய அருமைச் செல்வர் ஆதலின், இவரைக் காரிமாறன் என்றுங் கூறுவர். குழவிகள் பிறந்தவுடன் வந்து சேர்ந்து, முன்னை உணர்வைப் போக்கிவிடுவதாகிய சடம் என்னும் வாயு, இவர் அவதரித்தவுடன் இவரையும் சேர்தற்கு வர இவர் அதனைக் கோபித்துத் தம்மை அணுகாதபடி போக்கினர்; ஆதலின் இவருக்குச் சடகோபர் என்பதும் பெயராகிற்று. இவருக்குப் பராங்குசர் என்று மற்றொரு பெயர் வழங்குகின்றது. அஃது இவர் தம்முடைய அருளிச்செயல்கள் ஆகிய, அங்குசத்தால் பரமனாகிய களிறு தம் வசமாகும்படி செய்தனர். ஆதலின், இவருக்கு அப்பெயர் அமைந்தது என்று ஆன்றோர் கூறுவர்.

**கட்டளைக் கலித்துறை**

"வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந் தோர்விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன் செல்க குணங்கடந்த
போதக் கடலெங்கள் தென்குரு கூர்ப்புனி தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லு மேதொல்லை மூலப் பரஞ்சுடரே"

என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் அருளிச்செய்த செய்யுளை ஈண்டு நோக்குக.

கோயில் என்று தனியாகக் கூறின் வைணவர்கள் திருவரங்கத்தையும், சைவர்கள் சிதம்பரத்தையுமே குறிக்கும் என்றும், மற்றைக் கோயில்களை இன்ன கோயில் என அக்கோயில்களின் பெயர் குறித்துக் கூறுதல் வேண்டும் என்றுங் கூறுவர். அதுபோல முதல் ஆழ்வார்கள் முதலிய பன்னிருவருக்கும் ஆழ்வார் என்னும் பெயர்

உண்டு ; எனினும் ஆழ்வார் எனத் தனியாகக் கூறினுல், அஃது இவரையே குறிக்கும் என்றும், மற்றை ஆழ்வார் களைக் கூறுங்கால் ஆழ்வார் என்பதனை அவர்கள் பெயர்க ளோடு கூட்டிக் குலசேகர ஆழ்வார், தொண்டரடிப்பொடி யாழ்வார், மதுரகவியாழ்வார் எனக் கூறுதல் வேண்டும் என்றும் கூறுவார்கள் ஆன்றோர்கள்.

இவருக்கு நம்மாழ்வார் எனவும் ஒரு திருப்பெயர் வழங்குகின்றது. அஃது இவருக்குத் திருமகள்நாதன் ஆகிய இறைவனே அருளிய திருப்பெயர் என்ப. இவருக்கு மகிழம்பூமாலை உரிய மாலையாகும். அதனுல், இவருக்கு வகுளாபரணர் என்னும் பெயரும் வழங்குவதாயிற்று. மதுரகவியார் திருமகள்நாதனையும் பாடாமல் இவரையே பதினெரு பாசுரங்களால் பாடினர். அப் பதினெரு பாசுரங்களும் மதுரமானவைகளாகவும், அன்பு நிறைந்து ததும்பப்பெற்றவையாகவும் இருக்கின்றன. அவை முற் றும் நன்கு நோக்குதற்கு உரியன. அவற்றுட் சில மதுர கவியார் வரலாற்றிற் குறிக்கப்படும். அவற்றை ஆண்டுக் காண்க.

## ஆழ்வாரைப் பற்றிய பிற வரலாறுகள்

ஒருகால் சங்கப்புலவர்களுள் மூவர் ஒன்றுய்க் கூடினர் அவர்களுள் ஒருவர், ஆழ்வார் அருளிச்செயலைப் பற்றிய உங்கள் கருத்து என்ன என்று மற்றவர்களை வினவினர். அவ் விருவருள் ஒருவர்,

**குறள் வெண்பா**

"குறுமுனிவன் முத்தமிழும் *மென்குறளும் நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்"

என்று கூறினர். மற்றெருவர்,

* மென்குறள்—மென்மையாகிய குறள்.

"ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளும் பெய்தமைத்த
செம்பொருளை எம்மறைக்கும் சேட்பொருளைத்—தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியான் இவ்வுலகின்
தாய்மொழிய தென்பேன் தகைந்து"

என்றனர்.

முன்னே வினவியவரை மற்ற இருவரும் நோக்கி, உம்முடைய கருத்து என்னென்று வினவினர். அவர்,

"சேய்மொழியோ தாய்மொழியோ செப்பில் இரண்டுமொன்றே
வாய்மொழியை யாரும் மறையென்பர்—வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சால உளவெனினும் அம்மொழியும்
சாய்மொழிய வென்பேன் தகைந்து"

என்றனர்.

## திருக்குருகூர் வைணவர்களின் எச்சிலை உண்ட நாய் வீடுபெற்ற வரலாறு

ஒருகால் பொருநையாற்றின் வடகரையில் ஒரு யோகி வசித்திருந்தனர். அவர் ஒருநாயை வளர்த்து வந்தனர். அந் நாய் நாள்தோறும் நடுப்பகலில் அவ் யாற்றிற்குத் தென்கரையில் உள்ள ஆழ்வார் திருநகருக்குட் சென்று அப் பதியில் உள்ள வைணவர்களின் எச்சிலை யுண்டு வயிற்றை நிரப்பிக்கொண்டு வருதல் வழக்கம். ஒருநாள் அவ் வழக்கப்படி அப் பதிக்குட் சென்ற நாய் நெடுநேரம் ஆகியும் திரும்பி வந்திலது; ஆதலின், அந்த யோகச்செல்வர் அவ் வாற்றோரத்திற்குச் சென்று, நின்றுகொண்டு, அதன் வரவை எதிர்பார்க்கலானார். அப்போது அந் நாய் நட்டாற்றில் வந்துகொண்டிருந்தது. அப்போது தற்செயலாகக் கதுமென வெள்ளம் வந்துவிட்டது. அந் நாய் அவ் வெள்ளத்தில் தன்னாலான வரையிலும் நீந்தியது. அதனால், அதன் கால் ஓய்ந்துவிட்டமையால், அது நீரில் அமிழ்ந்து பின் மேலே

கிளம்பியது. அப்போது, அந் நாயின் மண்டை வெடித்து, அத்துளையின் வழியாக அந் நாயின் ஆன்மா, பலநூறு மத்தாப்புக்களை ஒருங்கு கொளுத்தியது போன்ற ஒளியுடன் எழுந்து வானேறச் சென்றது. அதனை நேரிற் கண்ட அந்த யோகச் செல்வர், "இழிந்த உயிர்க்கூட்டத்தில் சேர்ந்த இந்த நாயும் இத்தகைய பெறுதற்கரிய பெரும் பேற்றைப் பெற்றதே. இஃது இப் பேற்றைப் பெறுதற்கு என்ன சாதனத்தைச் செய்தது? இஃது ஒரு சாதனத்தையும் செய்யாதிருந்தும், ஆழ்வார் திருநகரில் உறையும் வைணவர்களின் எச்சிலை உண்ட செயல் அன்றோ இப் பெரும் பேற்றை இஃது அடையச் செய்தது. இது சிறந்த இருடிகட்கும் யோகியர்க்கும் எய்துதற்கு அரிய பேறு அன்றோ?" என்று எண்ணி, மனம் உருகிக், கண்ணீர் பெருகிவர நின்று,

### கட்டளைக் கலித்துறை

" வாய்க்கும் குருகைத் திருவீதி எச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரம பதமளித் தாயந்த நாயோடிந்தப்
பேய்க்கும் இடமளித் தாற்பழு தோபெரு மான்மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே"

என்பது முதலிய சில பாட்டுக்களால் ஆழ்வாரைப் போற்றிப் பாடிப் பணிந்து, ஆழ்வார்பால் நீங்காத அன்பு உடையராய் விளங்கி முடிவில் வீடு பெற்றனர்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் தாம் இயற்றிய இராமாயணத்தின்கண் முதலில் இவ் வாழ்வார் துதியைக் கூறினர். அதனை அடியிற் காண்க.

### கலிவிருத்தம்

" தருகை நீண்ட தயரதன் தான்தரும்
இருகை வேழத் திராகவன் தன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே."

அதுமுதற்கொண்டு வைணவர்களுள், நூல் இயற்றப் புகுவோர், சைவர்களுள் நூல் இயற்றப் புகுவோர் முதலில் விநாயகருக்கு வணக்கம் கூறுதல் போல இவ் வாழ்வாருக்கு வணக்கம் கூறுதல் மரபாயிற்று.

வைணவப் பெரியார்கள் வைணவக் குரவர்களை ஆழ்வார்கள் எனவும், ஆசாரியர்கள் எனவும் இருதிறத்தினராக வகுத்துக் கூறுகின்றார்கள். இவ் வாழ்வார், அவ் விருதிறத்தினரினும், சேர்ந்தாராவர். ஆழ்வார்களுள், இவரை அவயவி (உறுப்பி) என்றும், மற்றை ஆழ்வார்களை இவருக்கு அவயவங்கள் (உறுப்புக்கள்) என்றும் கூறுவர்.

இனி ஆசாரியர்களின் வரிசை, அடியில் வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமகள்நாதன் | 6. | உய்யக்கொண்டார் |
| 2 | திருமகள் | 7. | மணக்கால்நம்பி |
| 3. | சேனை முதலியார் | 8. | ஆளவந்தார் |
| 4. | நம்மாழ்வார் | 9. | பெரியநம்பி, திருக்கச்சி [நம்பி |
| 5. | நாதமுனிகள் | 10. | இராமாநுஜர் |

இங்குக் காட்டப்பட்ட ஆசாரிய வரிசையில் உள்ள முதல் மூவரும் பரமபதத்தைச் சார்ந்தவர்கள். அவர்களை நீக்கிப் புவியைச் சார்ந்த ஆசாரிய வரிசையை நோக்கினுல் நம்மாழ்வாரே முதல் ஆசாரியராய் அமைந்திருத்தலை நோக்குக.

இவருக்கு இங்ஙனம் ஆகிய சிறந்த மேன்மை உண்டாயிருத்தற்குக் காரணம் இவருடைய அருளிச் செயல்களை ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவிருத்தம் | 3. | பெரியதிரு அந்தாதி |
| 2. | திருவாசிரியம் | 4. | திருவாய்மொழி |

என நான்கு பிரிவுகளாக அமைந்திருக்கின்றன.

அவற்றுள்,

1. திருவிருத்தம் நூறு பாசுரங்களைக்கொண்டது.

2. திருவாசிரியம் ஏழு பாசுரங்களைக் கொண்டது.

3. பெரிய திருஅந்தாதி எண்பத்தேழு பாசுரங்களைக் கொண்டது.

4. திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்களைக் கொண்டது.

இவற்றுள், முதல் மூன்றும் வைணவர்களால் தமிழ் வேதம் எனப்படும் நாலாயிரத்துள், மூன்ரும் ஆயிரத்துட் சேர்க்கப்பட் டிருக்கின்றன. திருவாய்மொழி நான்காம் ஆயிரமாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

இவருடைய அருளிச் செயலின் பாசுரங்கள் யாவும் அன்பும் ஞானமும் நிரம்பிப் பொலிவனவாயிருக்கின்றன. அவற்றை விளக்குதற்கு அவற்றினின்று ஈண்டுப் பலவற்றைக் காட்டாமல் திருவாய்மொயின் முதற்பத்தின் முதல் திருவாய்மொழியின் எட்டுப் பாசுரங்கள் மட்டும் ஈண்டுக் காட்டப்படுகின்றன. அவற்றை அடியிற் காண்க.

### கலிவிருத்தம்

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே. (1)

மனனக மலமற மலர்மிசை எழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர் அவையிலன்
இனனுணர் முழுநலம் எதிர்நிகழ் கழிவினும்
இனனில னெனனுயிர் மிகுநரை யிலனே.

இலனது உடையனி தெனநினை வரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்தஅந்
நலனுடை ஒருவனை நணுகினம் நாமே. (3)

நாமவ னிவ னுவ னவளிவ ளுவளெவள்
தாமவ ரிவருவ ரதுவிது வுதுவெது
வீமவை யிவையுவை யவைநலம் தீங்கவை
ஆமவை யாயவை யாய்நின்ற வவரே. (4)

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே. (5)

திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே. (6)

உளனெனி னுளனவ னுருவமிவ் வுருவுகள்
உளனல னெனிலவ னருவமிவ் வருவுகள்
உளனென விலனென விவைகுண முடைமையின்
உளனிரு தகைமையொ டொழிவிலன் பரந்தே. (7)

கரவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
வரனவில் திறல்வலி யளிபொறை யாய்நின்ற
பரனடி மேற்குரு கூர்ச்சட கோபன்சொல்
நிரனிறை யாயிரத் திவைபத்தும் வீடே. (8)

## நம்மாழ்வார் அவதரித்த மாதமும் நாளும்

### நேரிசை வெண்பா

ஏரார்வை காசி விசாகத்தின் ஏற்றத்தைப்
பாரோர் அறியப் பகர்கின்றேன்—சீராரும்
வேதம் தமிழ்செய்த மெய்யன் எழிற்குருகை
நாதன் அவதரித்த நாள்.

## (இவரைப்பற்றிய ஆழ்வார்கள் வரிசையின்)
## வாழி திருநாமம்

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

ஆன திரு விருத்தம்நூ றருளினான் வாழியே
    ஆசிரியம் ஏழுபாட் டளித்தபிரான் வாழியே
ஈனவவந் தாதியெண்பத் தேழீந்தான் வாழியே
    வாய்மொழியா யிரத்துநூற் றிரண்டுரைத்தான் வாழியே
வானணியும் மணிமாடக் குருகைமன்னன் வாழியே
    வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
சேனையர்கோன் அவதாரம் ஆனவள்ளல் வாழியே
    திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே.

## ஆசாரியர்கள் வரிசையின் வாழி திருநாமம்

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே.
    வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே
ஆதிகுரு வாய்ப்புவியில் அவதரித்தோன் வாழியே
    அனவரதம் சேனையர்கோன் அடிதொழுவோன் வாழியே
நாதனுக்கு நாலாயி ரமுரைத்தான் வாழியே
    நன்மதுர கவிவணங்கும் நாவீறன் வாழியே
மாதவன்பொற் பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
    மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே.

நம்மாழ்வார் வரலாறு

முற்றிற்று.

## சூ. மதுரகவியார்

நேரிசை வெண்பா

"வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென் றேத்தும் மதுரகவி யாரெம்மை
ஆழ்வா ரவரே அரண்."

பாண்டிய நாட்டிலே பல வளங்களும் குறைவற அமைந்ததாகிய திருக்கோளூர் என்னும் ஊர் ஒன்று உளது. அப்பதியில் வாழ்வார், திருமகள் அருளும், கலைமகள் அருளும் ஒருங்கமையப்பெற்றவர்கள்; ஒழுக்கத்திற் சிறந்தவர்கள்.

### மதுரகவி ஆழ்வார் அவதாரம்

அப் பதியில் உறையும் அந்தணர்கள் தென்மொழி நூற்களையும், வடமொழிக் கலைகளையும் தர்க்கம் வேதாந்தம் முதலிய உண்மைப் பொருள் உணர்ச்சிக்கு உரிய நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தவர்கள்; திருமகள் நாதன்பால் நிறைந்த அன்புடையவர்கள்; நல்லொழுக்கத்தினின்றும் சிறிதும் பிறழாதவர்கள்; எல்லாவுயிர்களிடத்திலும் அருள்கொண்டு விளங்கும் மனம் உடையவர்கள். அப்பதியில் உள்ள யாவருமே கல்வி, கேள்வி, ஒழுக்கங்களுக்கு உறைவிடமானவர்கள்; ஆதலின், அப்பதி, ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பெற்றுள்ள இப்பூமியாகிய பெண்ணின் ஆசியா கண்டமாகிய சிரத்தில் அமைந்த இந்துதேயமாகிய முகத்தில் பொருந்திய தென்னாடாகிய பிறைநுதலின்கண் பொலியும் திலகம் என்று கண்டோர் கூறும்படி விளங்கியது. மதுரகவியாழ்வார் அப்பதியில் உறைந்த அந்தணர்களுள் ஒரு பகுதியினராகிய முன்குடுமிச்சோழிய பிராமணர் மரபில் அதரித்தனர். அம் மரபை விளக்கும்

மணிவிளக்காய் அவதரித்த மதுரகவியார் தென்மொழிக் கலைகளையும், வடமொழிக் கலைகளையும், நான்கு வேதங்களையும், வேதாங்கங்களையும் நன்கு கற்று உணர்ந்து, சிறந்த ஒழுக்கம், திருமகள் நாதன் அன்பு, அருள் முதலியனவற்றிற்கு உறையுளாய் விளங்கினர். அவருக்கு மதுரகவியார் என்னும் பெயர், அவர் தமிழ்மொழியில் மதுரமான கவிகளைப் பாடிவந்தமையால் உண்டானதாகும். அவர், ஒருகால், (1) அயோத்தி, (2) மதுரை, (3) மாயை, (4) காசி, (5) காஞ்சி, (6) அவந்தி, (7) துவாரகை என்னும் புண்ணியப்பதிகள் ஏழையும் சென்று சேவிக்க விழைவுற்றார். அவர் அவ்வாறே சென்று, அப்பதிகளைச் சேவித்துப் பின், அவற்றுள், ஒன்றாகிய அயோத்தியில் தங்கியிருந்தனர். அவர் அங்குத் தங்கியிருக்கையில் ஒருநாள் இரவு அவருக்குப் பேரொளி ஒன்று தெற்கில் காணப்பட்டது. அவர் அதனைக் காணச் சென்றார். அவர் அவ்வொளியை நாடிச் செல்லச்செல்ல அவ்வொளியும் தென்திசையாக அவர் முன் கண்ட செய்மையிலேயே சென்றுகொண்டிருந்தது. பொழுது புலர்ந்தவுடன் அவ்வொளி மறைந்துவிட்டது. மதுரகவியார் அங்கு ஓர் இடத்திலே தங்கியிருந்தார். இரவு தோன்றியவுடன் அவ்வொளியும் மீண்டும் தோன்றியது. இப்படியே அவ்வொளி இரவில் தோன்றித் தென்திசையாகச் செல்லுவதும், பகலில் மறைந்து விடுவதுமாக இருந்தது. மதுரகவியாரும், இரவில் அவ்வொளியைப் பின்பற்றிச் செல்வதும் பகலில் அவ்வொளி மறைந்த இடத்தில் தங்குவதுமாகப் போய்ப் பல பதிகளைக் கடந்து சென்று, பாண்டியநாட்டில் உள்ள பதிகளுள் ஒன்றாகிய திருக்குருகூரை அடைந்தனர். அவ்வொளி அப்பதியில் உள்ள பொலிந்துநின்றபிரான் திருக்கோயிலுக்

குட் புகுந்து மறைந்துவிட்டது. மதுரகவியார், "இக்கோயிலுக்குள் ஏதோ விசேடம் இருக்கின்றது," என்று எண்ணி, அப்பதியில் உள்ளார் சிலரை "இங்கு ஏதேனும் சிறந்த செய்தி உண்டோ?" என்று வினவினர். அவர்கள் ஆழ்வாருடைய வரலாற்றைக் கூறினார்கள். மதுரகவியார் அவ்வரலாற்றைக் கேட்டுக் கோயிலினுள்ளே சென்று, முன் ஆழ்வார் வரலாற்றிற் கூறியபடி ஆழ்வார் அருளைப் பெற்று, அவர் அருளிச்செயல்களைப் பட்டோலையில் எழுதினர். அவ்வருளிச்செயல்கள் மதுரகவியார் மனத்தை முற்றுங் கவர்ந்துகொண்டன; ஆதலின், மதுரகவியாருக்கு ஆழ்வார்பால் மிக்க அன்பு உண்டாயிற்று. அவர், ஆழ்வாரையே தம்முடைய தெய்வம் எனக் கொண்டு, திருமகள் நாதனையும் பாடாமல் அவரையே பதினொரு பாசுரங்களால் ஆன பாமாலை ஒன்றுற் பாடினார். அப்பாமாலை 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்று தொடங்கப்பெற்றிருத்தலால், அதற்குக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்பது பெயராயிற்று. அதன் பாசுரங்களுட் சிலவற்றை அடியிற் காண்க.

கண்ணி நுண்சிறுத் தாம்பினாற் கட்டுண்ணப்
பண்ணி யபெரு மாயனென் அப்பனில்
நண்ணித் தென்குரு கூர்நம்பி என்றக்கால்
அண்ணிக் குமமு தூறுமென் னாவுக்கே. (1)

நாவி னால்நவிற் *றின்ப மெய்தினேன்
மேவி னேனவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி
பாவி னின்னிசை பாடித் திரிவனே. (2)

---

*ஈண்டு ஓசை குறைகின்றது. அது 'றின்பமதெய்தினேன்,' என்றிருந்திருக்கும் என்று தோன்றுகின்றது. அன்றி அதனை, 'றின்பமெய் தினேன்' எனச் சீர்பிரித்து ஈற்றில் ஓரசைச்சீர் வந்தது என்று கொள்ளுதலுமாகும்.

நன்மை யால்மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவர் ஆதலின்
அன்னை யாயத்த னாயென்னை ஆண்டிடும்
தன்மை யான்சட கோபனென் நம்பியே. (3)

அன்பன் தன்னை அடைந்தவர் கட்கெல்லாம்
அன்பன் தென்குரு கூர்நகர் நம்பிக்கு
அன்ப னாய்மது ரகவி சொன்னசொல்
நம்பு வார்பதி வைகுந்தம் காண்மினே. (10)

பிறகு மதுரகவியார் நம்மாழ்வாருடைய அர்ச்சை உருவை மேற்கூறிய திருக்கோயிலில் எழுந்தருளப் பண்ணித், திருமண்டபம் மதில்கள் விமானம் கோபுரம் முதலியன நன்கு அமையத் திருக்கோயிலில் அமைத்து, நவமணிகளால் ஆன ஆபரணங்களை அணிவித்து, நாள் தோறும் பலவகை மலர்மாலைகளைச் சூட்டி, ஆராதனை செய்து, பலவகையான திருவிழாக்களை ஏற்படுத்தி நடத்தி வந்தனர். அங்ஙனம் திருவிழா நடத்துகையில் ஆழ்வாருடைய அர்ச்சை உருவைச் சிறந்த வாகனங்களில் எழுந்தருள்வித்துப், பலவகை இன்னியங்கள் ஒலிக்க, "வேதம் தமிழ்செய்த பெருமாள் வந்தார்; திருவாய்மொழிப் பெருமாள் வந்தார்; திருவழுதி வளநாடர் வந்தார்; திருக்குருகூர் நம்பி வந்தார்; அருட்குணச் செல்வர் வந்தார்; வகுளாபரணர் வந்தார்; காரிமாறர் வந்தார்; சடகோபர் வந்தார்; பராங்குசர் வந்தார்," என்று முன்னே அடியார்கள் பலர் விருது உரைத்துச் செல்ல உலாவரச் செய்வர். அங்ஙனம் ஓராண்டு நடந்த திருவிழாவில் பல அடியார்கள் முன் கூறியபடி முன்னே விருது இசைத்துச் செல்வாராயினர். அப்போது மதுரையில் இருந்த சங்கப்புலவர்களுள், 'கல்வியில் கடலே யனையம் யாம் என்னும் அடல் ஏறனைய' செருக்கு உடையவர்களாகிய சிலர் அங்கு வந்து, அவ்வடியவர்களை நோக்கி, "அன்பர்களே, நாங்கள் மதுரை

யில் உள்ள தமிழ்ச்சங்கப்புலவர்கள்; புலமையில் நாங்கள் ஒப்பு உயர்வு அற்றவர்கள் என்பதைத் தமிழகம் முழுதும் அறியும்; தமிழ் நாட்டுப் பேரரசர்கள் யாவரும் எங்கள் புலமையின் மேன்மையை யுணர்ந்து, எங்களை அன்புடன் வணங்கிப் பேணிவருகின்றார்கள். எங்கள் சங்கம் இருக்கும் இப்பாண்டிய நாட்டிலே இருக்கும் நீங்கள் எங்கள் பால் வந்து, எங்கள் அநுமதியைப் பெறாமல் இங்ஙனம் உங்கள் ஆழ்வாருக்கு விருது கூறிச் செல்லுதல் தகுதியாகுமா? உங்களுக்கு எங்கள் புலமையின் மேன்மை தெரியாதோ? அன்றி, உங்கள் ஆழ்வார் எங்களிலும் சிறந்த புலமை உடையார் என்பது உங்கள் கருத்தா?", என்று கூறி ஆழ்வாருக்கு விருது கூறுதலைத் தடுத்தார்கள். அவ் வடியார்கள் மதுரகவியாரிடம் சென்று, அதனைக் கூறினார் கள். அப்போது மதுரகவியார் ஆழ்வார் அருகில் இருந்து அவருடைய திருக்கோலத்தைச் சேவித்துக்கொண்டிருந் தனர். ஆதலின், அவர், "நான் நாளைத் தினம் அச்சங்கம் உள்ள இடத்திற்கு வருவேன் எனத் தெரிவியுங்கள்," என்று அவர்களிடம் கூறினர். அவர்கள் அவ்வாறே சென்று கூறினார்கள். அப்புலவர்கள், "அவர் எங்கள்பால் வந்து எங்கள் அநுமதியைப் பெறும் வரையிலும் இந்த விருதுகளைக் கூறாதீர்கள்," என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

மதுரகவியார், விழாவை முடித்துவிட்டு, அன்றிரவு ஆழ்வார் திருமுன்சென்று, அச்சங்கப்புலவர்கள் கூறிய வற்றை விண்ணப்பித்து, "எங்கள் அன்பிற்கு உரியீர்; அச்சங்கப்புலவர்களின் செருக்கு அடங்கும்படி ஏதேனும் புரிதல்வேண்டும். இன்றேல், உணவின்றி இருந்து, என்னுயிரைத் துறப்பேன்," என்று கூறி, அங்குப் படுத்துக் கொண்டனர். அவருக்குத் துயில் வந்துவிட்டது. அவர்

கனவில் ஆழ்வார் தோன்றி, "அன்புடையீர், நீர் துன்புற வேண்டா. நாம், ஒரு பாட்டை ஓர் ஏட்டில் எழுதி யிங்கு வைத்திருக்கின்றோம். நீர் அதனை யெடுத்துக்கொண்டு சென்று, அப்பாட்டுக்குப் பொருள் கூறும்படி அவர்களைக் கேட்பீராக," என்று கூறியருளி மறைந்தனர். மதுரகவியார் துயில் நீங்கி எழுந்து பார்த்து, ஆழ்வார் திருமுன் ஓர் ஏடு இருக்கக் கண்டனர். அவர் உடனே அவ் வேட்டை எடுத்து, அதில் உள்ள பாசுரத்தைப் படித்து, "இப்பாட்டினால் அச்சங்கப் புலவர்களது செருக்கு அடங்கும் என்பதில் சிறிதும் ஐயம் இன்று," என்று மகிழ்ந்து, தம் இருப்பிடம் அடைந்து, மறுநாள் விடியலில் தம்முடைய காலைக்கடன்களை முடித்து, ஆழ்வாரை வணங்கி, அவ்வேட்டை எடுத்துக்கொண்டு, சங்கப்புலவர்கள்பால் சென்று, "புலவர்காள், உங்களுக்குள் எங்கள் மெஞ்ஞானச் செல்வராகிய வகுளாபரணருக்கு அடியவர்கள் விருது கூறுதலைத் தடுத்தவர்கள் யாவர்?" என்று வினவினர். அதனைக் கேட்டுச் சிலர், "யாங்களே" என்று கூறினர். மதுரகவியார், "புலவர்களே, இதோ என்னிடத்தில் உள்ள இவ்வேட்டில் ஆசிரியப்பாவினால் இயற்றப்பட்ட ஒரு பாட்டு இருக்கின்றது. அஃது எங்கள் அரும்புலச் செல்வராகிய எங்கள் குரவர் வகுளாபரணர் இயற்றியது. அதற்கு நீங்கள் பொருள் கூறுமின்," என்று கூறி, அவ்வேட்டை அவர்களிடம் நீட்டினர். அதனை அவர்களுள் ஒருவர் வாங்கிப் பலமுறை படித்துப் பார்த்துப் பொருள் விளங்காமையின் மற்றொருவரிடம் நீட்டினர். அவரும் அவ்வாறே படித்துப் படித்துப் பார்த்துப் பொருள் விளங்காமையின் மற்றொருவரிடம் தந்தனர். இங்ஙனமே அச்சங்கப் புலவர்கள் அனைவரும் அப்பாட்டிற்குப் பொருள்கூற முடியாதவர்களாய்த் தனியிடம் சென்று, தங்களுக்குள், "இச்

செய்தியைப் பாண்டிய மன்னரும் பிறரும் அறியின், அவர்களுக்கு நம்பால் உள்ள நன்மதிப்புக் கெட்டுவிடுமே? இதற்கு என் செய்வது?'' என்று யோசித்து, அதற்குச் செய்யக்கூடியதை முடிவு செய்து கொண்டு வந்து, சங்கப் பலகையில் வீற்றிருந்து, மதுரகவியாரை நோக்கி, “அறிஞரே, அப் பாட்டுக்குப் பொருள் கூறுவது அருமைதான். ஆனால், இதனாலேயே நாங்கள் உங்கள் குரவரைச் சிறந்தவர் என ஏற்றுக்கொள்ளுதல் இயலாது. உங்கள் குரவர் பாடல்களை இச் சங்கப்பலகை ஏற்றுக்கொண்டால்தான் உங்கள் குரவரைச் சிறந்தவர் என ஏற்றுக்கொள்ளுவோம்,'' என்று உரைத்தார்கள். மதுரகவியார் “புலவர்களே, எங்கள் குரவர் அருளிய பாடல்கள் யாவும் வேண்டா. அவற்றுள், ஒரு பாசுரமே உலகில் உள்ள அரும்புலச் செல்வர்கள் யாவரும் போற்றுதற்குரியார் எங்கள் குரவர் என்பதனை உங்களுக்குத் தெரிவித்தற்குப் போதியது ஆம்: அதனைக் காண்மின்'' என்று கூறி,

வஞ்சித்துறை

“ கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.''

(திருவாய்மொழி 10 ஆம் பத்து, 5 ஆம் திருவாய்மொழி, பா—1)

என்னும் பாசுரத்தை ஒரு சிறிய ஏட்டில் எழுதி, அதனை அச்சங்கப் பலகையின்மீது வைத்தனர். உடனே அப் பலகை அப்புலவர்கள் எல்லாரையும் கீழே தள்ளிவிட்டு, அவ்வேட்டின் அளவாகச் சுருங்கி நின்றது. உடனே அப்புலவர்கள் அஞ்சி நடுங்கி, “அந்தோ! நாம் ஆழ்வாருடைய மேன்மையை அறியாமல், 'யாம் பெரிதும் வல்லோம்' என்னும் செருக்கினால், ஆழ்வாரைப் புன்மொழி

களால் இழித்துக் கூறினேம். அக் குற்றத்தை அவரைப் பாடிப் போற்றிப் போக்கிக் கொள்ளுவோம்,'' என்று தமக்குள் முடிவு செய்துகொண்டார்கள். பிறகு அவர்களுள் தலைவராகிய புலவர்,

"ஈயா டுவதோ கருடற் கெதிரே
இரவிக் கெதிர்மின் மினியா டுவதோ
நாயா டுவதோ உறுவெம் புலிமுன்
நரியா டுவதோ நரகே சரிமுன்
பேயா டுவதோ அழகூர் வசிமுன்
பெருமான் வகுளா பரணன் அருள்கூர்ந்
தோவா துரையா யிரமா மறையின்
ஒருசொற் பெறுமோ உலகிற் கவியே''

என்று பாடினர். பிறகு மற்றைப் புலவர்கள் யாவரும் தனித்தனியாக ஒவ்வொரு பாட்டைப் பாடினர்கள், அச் செய்யுள்கள் யாவும்,

நேரிசை வெண்பா

"சேமம் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமான் உனக்கு.''

என்னும் ஒரே செய்யுளாய் அமைந்திருக்க, அதனை அப் புலவர்கள் கண்டு, அச்சமும் வியப்பும் எய்தி, மதுரகவி ஆழ்வாரை நோக்கி, "அரும்புலச் செல்வமும், அன்பும் உடையீர், உமது திருவருளால் ஆழ்வாருடைய மேன்மையை உணர்ந்து,அவர் அருளிய அருந்தமிழ்ப் பாவாகிய மருந்தினல் எங்கள் செருக்காகிய நோய் நீங்கி உய்யும் பேற்றைப் பெற்றேம். தேவரீர் சென்று, அடியவர்கள் ஆழ்வாருடைய பலவகையாகிய விருதுகளையும் கூறச் செய்து, அவருடைய திருவிழாவை நன்கு நடத்துவீராக,'' என்று கூறி, அவரை வணங்கிப் போற்றி அனுப்பினர்கள்.

பிறகு மதுரகவியார், ஆழ்வாருடைய திருவிழாவை இனிது முடித்தார். அவ்வாறே மதுரகவியார் ஆழ்வாருக்குப் பலவகை விழாக்களையும் ஆராதனைகளையும் நடத்தி வந்ததோடு ஆழ்வார் அருளிய தமிழ் மறைகளின் பொருள்களைப் பலரும் இனிது உணரும்படி உரைத்து உலகை வாழ்வித்தருளினர்.

## மதுரகவியார் அவதரித்த மாதமும் நாளும்

### நேரிசை வெண்பா

"ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த
சீராரும் சித்திரையிற் சித்திரைநாள் - பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களினும்
உற்றதெமக் கென்றுநெஞ்சே ஓர்."

## வாழி திருநாமம்

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

"சித்திரையிற் சித்திரைநாள் சிறக்க வந்தோன் வாழியே
திருக்கோளூர் அவதரித்த செல்வபிரான் வாழியே
உத்தரகங் காதிரத் துயர்தவத்தோன் வாழியே
ஒளிர்கதிரோன் தெற்குதிக்க வுவந்துவந்தோன் வாழியே
பத்தியொடு பதினென்றும் பாடினன் வாழியே
பராங்குசனே பரனென்று பற்றினன் வாழியே
மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகள் வாழிவாழி வாழியே."

மதுரகவியார் வரலாறு

முற்றிற்று

MADURAI UNIVERSITY LIBRARY
24 MAR 1971
MADURAI.